# වාර්ෂික වාර්තාව

## வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

# 2014



ශ්‍රී ලංකා විනිශ්චයකාරවරයන්ගේ ආයතනය

இலங்கை நீதிபதிகள் நிறுவனம்

**SRI LANKA JUDGES' INSTITUTE**

## உள்ளடக்கம்


1. பணிப்பாளரின் கூற்று
2. இலங0கை நீதிபதிகள் நிறுவகத்தைப்பற்றிய விபரம்
3. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின்ஸ்தாபிப்பு
4. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வரலாறு
5. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை மற்றும் ஊழியர்கள்
6. நிறுவகத்தின் நிதிகள்
7. பயிற்சி நிகழ்ச்சிகள்
8. நிறுவகத்தின் செயலாற்றுகை
9. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்பாடுகள்
10. சர்வதேச ஒத்துழைப்பு
11. எதிர்கால கற்கைநெறிகள்
12. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை
13. நன்றிகள்
14. ஐந்தொகை
15. வருமான செலவீனக்கணக்கு
16. நிதிப்பாய்ச்சல் கூற்று
17. நிலையான சொத்துக்கள்
18. 2014ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை



## 1. பணிப்பாளரின் செய்தி

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபையின் சார்பாக, **2014** டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையையும் இறுதி கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த வருடத்தில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயலாற்றுகையை ஆண்டறிக்கை கோடிட்டுக் காட்டுகின்றதுடன் அது நிறுவகத்தின் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்கள் சிறந்த சாத்தியமான வழியில் எவ்வாறு அடையப்பட்டது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

பாராளுமன்ற சட்டமொன்றினால்1986ஆம் ஆண்டில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இலங்கையில் நீதிபதிகளின் துறைசார் விருத்திக்காக நீதித்துறைப் பயிற்சியைத் தொடர்தல் மற்றும் அவர்களின் அறிவை மேம்படுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது, நீதிபதிகளின் செயலாற்றுகையின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் பொது மக்களுக்கு செயற்திறனானதும் விரைவானதுமான நீதியை வழங்குவதற்காகவும் இலங்கையில் நீதித்துறைக் கல்வி ஒரு அத்தியாவசிய விடயமாக மாறியுள்ளது. இலங்கையில் உள்ள மேல்நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், நீதிவான்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தலைவர்கள் போன்றோர்களுக்காக தொடர் நீதித்துறைக் கல்வி மற்றும் பயிற்சிவழங்கிவருகின்ற இலங்கையில் உள்ள ஒரேயொரு அரிய தனிச்சிறப்பைக் கொண்டிருப்பது இலங்கை நீதிபதிகள் நிறுவகமாகும்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிருவாகம், ஆய்வு மற்றும் கல்விச் செயற்பாடுகள் என்பவற்றில் மாற்றம் ஏற்பட்ட வருடமாக 2014 ஆம் வருடம் இருந்தது. ஐக்கிய அமெரிக்காவின் நெவடா மாவட்டத்தின் சிரேஷ்ட மாவட்ட நீதிபதியான றொஜர் ஹன்ட் என்பவரினால் இலங்கையில் நடாத்தப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சியானது மிக முக்கிய அடைவுகளில் ஒன்றாக இருந்தது என்பதோடு அவர் வழக்கு முகாமை மற்றும் மத்தியஸ்த நுட்பங்கள் என்ற தலைப்புக்களில் சகல மாவட்ட நீதிபதிகளுக்கும் பயிற்சி வழங்கினார். சகல மாவட்ட நீதிபதிகளுக்குமான இந்த பயிற்சி நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து ஐக்கிய அமெரிக்க நீதிபதி றொஜர் ஹன்டர் அவர்களுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதையிட்டு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பெருமிதமடைந்தது. அத்தோடு வழக்கு முகாமை மற்றும் மத்தியஸ்தம் என்ற தலைப்புக்களில் பல பயிற்சி அமர்வுகளை நீதிபதி வெல்லஸ் அவர்களும் நடாத்தினார்.

எவ்வாறாயினும்,குடியியல் நடைமுறைச் சட்டக்கோவைக்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் மற்றும் இலங்கையில் நீதிமன்ற அடிப்படையிலான எதிர்கால மத்தியஸ்தத்துக்கான நிகழ்ச்சிகளுக்காக முதன் முதலான மத்தியஸ்த சட்டவிதிகளை உருவாக்குதல் உட்பட இலங்கை வணிக மத்தியஸ்த நிலையச் சட்டம் என்பன எதிர்கால நீதித்துறை மறுசீராக்கல்களுக்கான பாரிய நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மறுசீரமைப்புக்களை சகல கரிசனையுடையவர்களும் கவனத்தில் கொண்டு இலங்கை நீதித்துவ முறைமையின் நன்மைக்கு அவசியமான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் தயாரிக்கப்பட்ட நீதித்துறை அலுவலர்களின் பயிற்சிக் கையேட்டின் வெளியீடு மற்றொரு முக்கியமான அபிவிருத்தியாகும். மத்தியமயப்படுத்தப்பட்டஅல்லது பன்முகப்படுத்தப்பட்ட நீதித்துறைப் பயிற்சி, தனிப்பட்ட தேவைகள் மற்றும் நேர நெருக்கடிகள் என்பவற்றின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் இணையத்தை அடிப்படையாக் கொண்ட தொலைக்கல்வி உட்பட நீதிபதிகளுக்கான பல்வகை கற்றல் நிகழ்ச்சிகளை இந்தப் பயிற்சிக் கைநூல் கொண்டுள்ளது.இலங்கை நீதித்துறையினால் எதிர்கொள்ளப்படவுள்ள எதிர்கால சவால்களைக் கவனத்தில் கொண்டு இலங்கை நீதித்துறை அலுவலர்களின் பெருகிவருகின்ற தேவைகளுக்கு பதிலளிப்பதற்கு இந்தப் பயிற்சிக் கைநூல் வடிவமைத்து விருத்தி செய்யப்பட்டது.

வழக்கு முகாமை, நீதிமன்ற அறைகளில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல், இலத்திரனியல் முறையில் கோவைப்படுத்தல், தண்டனைத் தீர்ப்பு வழிகாட்டல்கள் மற்றும் மத்தியஸ்தம் செய்தல் போன்ற நீதித்துவப் பயிற்சி என்பவற்றின் விசேட பிரிவுகளில் இலங்கை நீதிபதிகளைப் பயிற்றுவிக்கின்ற நோக்கத்துக்காக வெளிநாட்டு நீதித்துறை கல்லூரிகளுடன் இணைப்பை கட்டியெழுப்பியமை 2014ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு அடைவாகும். இலங்கை நீதிபதிகளுக்காக பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியதற்காகவும் மற்றும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துடன் கல்விசார் பங்காளியாக இருந்தற்காகவும் இந்தியாவின் தேசிய நீதித்துறைக் கல்லூரி, மலேசியாவின் நீதி மற்றும் சட்டப் பயிற்சி நிறுவனம், சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரி, புதுடில்லி நீதித்துறைக் கல்லூரி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் நீதித்துறை நிலையம் என்பவற்றுக்கு நிறுவகம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பல ஏனைய ஆட்களினதும் ஆதரவு இல்லாமல் எமது அடைவுகளை நிறைவு செய்திருக்க முடியாது என்பதோடு அவர்களது தொலைநோக்கு, மனவுறுதி மற்றும் வழிகாட்டல் இல்லாமல் எந்தவொரு அடைவுகளையும் அடைந்து கொள்ள முடியாதிருந்திருக்கும். நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டி சில்வா மற்றும் அவரின் ஊழியர்கள் விசேடமாக அமைச்சின் நிருவாக மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் முழு மனதுடன் வழங்கிய ஆதரவைக் குறிப்பிடாவிட்டால் நான் கடமை தவறியவனாக மாறிவிடுவேன். அவர்கள் அனைவருக்கும் எனது விசேட நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பல சவால்களுக்கு மத்தியில் நிறுவகத்தின் இலக்குகளை அடைவதற்கு அவர்கள் சிரமம்பாராது பணியாற்றினர். இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஊழியர்களின் அர்ப்பணிப்புடைய முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்பை நான் பாராட்டுகின்றேன்.

எதிர்வரும் வருடத்தில் திடகாத்திரமாக வளர்வதற்கு நாங்கள் உறுதிபூணுகின்றோம்.

ருவான் பர்னான்டோ
எல்.எல்.எம் (வணிகச்சட்டம்),கார்டிப், பிரித்தானியா, புலமைச் சொத்து உரிமைகள் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா(இலங்கை)
மேல்நீதிமன்ற நீதிபதி மற்றும்பணிப்பாளர், இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

# 2. இலங்கை நீதிபதிகள் நிறுவகம் சம்பந்தமானது.

## எமது தொலை நோக்கு

நீதித்துறைப் பயிற்சி மற்றும் நம்பத்தகுந்த, பக்கச்சார்பற்ற, சுதந்திரமான, பயனாளிகள் நட்புறவான மற்றும் அனைவரும் அனுகக்கூடிய ஒரு நீதித்துறை முறைமையை அடைந்து கொள்வதற்கு நீதிபதிகளின் துறைசார் வான்மையை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் அறிவு விருத்தி ஆகியவற்றை நோக்காகக் கொண்டு நீதிபதிகளுக்கு மிக உயர்ந்த பயிற்சிகளையும் ஆய்வு வசதிகளையும் வழங்குவதற்காக மிகச்சிறந்த ஒரு நிறுவனமாக நாம் சேவையாற்றுவோம்.

## எமது பணிநோக்கு

நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வான்மைமற்றும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளினூடாக நீதித்துறையின் தரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு நீதித்துறை அலுவலர்களுக்கு உயர் அறிவு மற்றும் திறன்களை வழங்குதல்மூலம் எமது தொலை நோக்கை அடைந்து கொள்வதற்கு நாம் பணியாற்றுவோம்.

பின்வரும் இலக்குகளுக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அதன் **பணிநோக்கை** பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

- நீதித்துறை அலுவலர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சியை வழங்குதல்;
- ஆய்வு, வெளியீடுகள் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றினூடாக நீதித்துறை அலுவலர்களுக்கு ஆதரவு வழங்கல்;
- நீதித் துறை அலுவலர்களினால் நீதி மற்றும் சட்ட விவகாரங்களின் மீது கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை பரிமாற்றிக் கொள்வதற்கான வசதிகளை வழங்கல்;
- நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வல்லமையை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள், மாநாடுகள், விரிவுரைகள், செயலமர்வுகள் என்பவற்றை ஒழுங்கு செய்து நடாத்துதல் மற்றும் அவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தல்;
- வழக்கு முகாமை மற்றும் வழக்குப்பாய்ச்சல் முகாமை முறையில் தாமதத்தைக் குறைப்பதில் சிறந்த நடைமுறைகளுக்காக வழிகாட்டல் கைநூலை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்;

- நீதித்துறை நிருவாகத்தின் பல்வேறு பிரிவுகளின் மீது ஆய்வுச் செயற்பாடுகளை நடாத்துதல்;
- நீதிபதிகளுக்கு நூலக மற்றும் இணைய அடிப்படையிலான கல்வி வசதிகளை வழங்குவதோடு சட்டத் தகவல்களையும் அதற்கான பொருட்களையும் வழங்குதல்;
- சர்வதேச நீதித்துறை நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணல்.
- நீதித்துறை முறைமையில் பொது மக்கள் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் நிலைநிறுத்துவதற்காகவழக்குகளுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு பரிகாரம் வழங்குவதனூடாக சட்ட மறுசீரமைப்புக்களுக்குப் பங்களிப்புச் செய்தல்;
- நீதி நிருவாகம் தொடர்பானதேசிய கொள்கை மற்றும் படிமுறைகள் மற்றும் நீதிக்கான அணுகுவழி போன்றவை தொடர்பான விருத்திக்கும் அமுல்படுத்தலுக்கும் பங்களிப்புச் செய்தல்.

## 3. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஸ்தாபிப்பு

1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க "இலங்கை நீதிபதிகள் நிறுவகச் சட்டம்" என்ற தலைப்பில் பாராளுமன்ற சட்டம் ஒன்றினால் நீதிபதிகள் நிறுவகத்தை உருவாக்குவதற்காகவும் அதனுடன் தொடர்புடைய கருமங்கள் அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டது.

### இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் குறிக்கோள்கள்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தைத் ஸ்தாபிப்பதற்கான குறிக்கோள்கள் பின்வருமாறு.

1. நீதித்துறை அலுவலர்களினால் நீதித்துறை மற்றும் சட்ட விடயங்கள் மீதான கருத்துக்கள், ஆலோசனைகளைப் பரிமாறுவதற்கான வசதிகளை வழங்குதல்;
2. நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வல்லமையை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள், மாநாடுகள், விரிவுரைகள், செயலமர்வுகள் என்பவற்றை ஒழுங்கு செய்து நடாத்துதல் மற்றும் அவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தல்;
3. நீதி நிருவாகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி மற்றும் ஆய்வுக் கற்கை நெறிகளை உருவாக்கி நடாத்துதல்;மற்றும்
4. நீதித்துறை அலுவலர்களுக்கு நூலக வசதிகளையும் ஏனைய கல்விசார் பொருட்களையும் வழங்குதல்.

## 4. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் வரலாறு

இலங்கை நீதித்துறை அலுவலர்களுக்காக நீதித்துறை கல்வி மற்றும் பயிற்சி வழங்குவதிலும் அவர்களின் துறைசார் தரங்களை மேம்படுத்துவதிலும் இலங்கையில் உள்ள ஒரேயொரு நீதித்துறை நிறுவனம் என்ற வகையில் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அரிய உயர்தரத்தைக் கொண்டுள்ளது.

நீதிபதிகள் நிறுவகத்தை தாபிப்பதற்கு முன்னர்,புதிய நீதிபதிகள் அவர்களின் கடமைகளை ஏற்பதற்கு முன்னர், நீதிமன்ற அமர்வுகளில் தலைமை தாங்குகின்ற நீதிபதியின் கீழ் நீதிமன்ற அமர்வுகளை ஒரு சில வாரங்களுக்கு அவதானிக்கும் செயற்பாடு மாத்திரமே நீதித்துறை அலுவலர்களுக்கு இருந்த ஒரேயொரு பயிற்சியாக இருந்தது. நீதித்துறையை நிருவகிக்கின்ற நீதிபதிகள் அவர்கள் தமது நீதித்துறை தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாத்திரமல்லாமல் அவர்களின் நீதித்துறை தொழில் புரிகின்ற காலம் முழுவதும் ஒரு தொடர் செயன்முறையாக இருக்க வேண்டும் என உறுதியாக உணரப்பட்டது. நீதித்துறை அலுவலர்களுக்காக ஒரு வழமையான பயிற்சியை வடிவமைத்து தொடர்ந்தேர்ச்சியான அடிப்படையில் சகல மட்டங்களிலும் உள்ள நீதித்துறை அலுவலர்கள் நீதித்துறைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அமைப்பதற்கு ஆழமாக அப்போது உணரப்பட்டது.

நீதிபதிகள் நிறுவகத்தை ஆரம்பிப்பதற்கான எண்ணம் முதன் முதலில் அப்போதைய நீதியமைச்சின் செயலாளராக இருந்த திரு P.B.ஹேரத் அவர்களினால் முன்வைக்கப்பட்டது. அவர் பிரான்ஸ் நாட்டில் அத்தகைய நிறுவனமொன்றை அவதானித்த பின்னர் 1982 இல் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சஞ்சிகைக்கு ஒரு கட்டுரையை வரைந்திருந்தார். ஆனால், வழமையைப் போன்று அது தொடர்பாக எதுவும் நடக்கவில்லை என்பதோடு அது செவிடன் காதில் ஊதிய சங்கைப்போன்று ஆகிவிட்டது.நீதியமைச்சின் செயலாளராக திரு P.B. ஹேரத் அவர்கள் நீதிபதிகள் நிறுவகத்தைப் பற்றி முதலில் சிந்தித்தார், நீதிபதி அவர்கள் நிறுவகத்துக்கான ஊக்குவிப்பு மூலத்துக்கு உறுதியாக இருந்து, நிறுவகத்தின் ஒரு மிகப்பலமான துணையாக மாறினார்.

நீதிபதிகளுக்கான சேவைக்காலதொடர் சட்டக் கல்வி ஏற்பாட்டுக்காக, நீதிபதி நிறுவகத்தை உருவாக்குவதற்கான கருத்தை ஒன்றிணைந்து முன்வைத்தனர் என்பதோடு1984 மே 02 ஆம் திகதி நீதிபதிJ.F.A. சோசா அவர்கள் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். ஆசியா பவுன்டேசனின் வதிவிடப்பிரதிநிதி திரு ஜோன் கயர் அவர்களுடன் நிதியீட்டம் தொடர்பான வினா ஏற்கனவே கலந்துரையாடப்பட்டிருந்தது. புதிய நிறுவகத்தின் கட்டடத்துக்கான வளவைத் தேடுவது முதலாவது விடயமாக இருந்தது. பல மாற்றுவழிகளை அவதானித்த பின்னர் ஒரு வருட வாடகை அடிப்படையில் இலங்கை மன்றத்தின் ஒரு பகுதி பெறப்பட்டது. அதற்குத் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆசியா பவுன்டேசன் நிறுவனத்தின் தாராளத்தன்மையினாலே இவையெல்லாம் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் சில கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன ஆனால் அதற்கு அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததால் நிமித்தமுறை நிகழ்ச்சிகள் மாத்திரம் நிகழ்த்தப்பட்டன. அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டது, ஆனால் அதற்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைப்பதற்குரிய தெளிவிருக்கவில்லை.

சில சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன என்பதோடு நிகழ்த்தப்பட்ட போதனைகள் உயர் தரத்தில் அமைந்திருந்தன. அதிதிப் பேச்சாளராக ஆசிய பவுன்டேசன் நிறுவனத்தின் சட்ட முறைமைகள் மற்றும் நீதித்துறை நிருவாக சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் மேன்முறையீட்டு நீதிமன்ற 9ஆம் சுற்று விசேட நீதிபதி க்லிபர்ட் வெலேஸ் அவர்கள் கலந்து கொண்டார்.

கட்டியெழுப்பப்படுகின்ற நீதிபதிகள் நிறுவகம் அதன் பிரசவ வேதனையை அனுபவித்தது. அதன் விளைவுக்கு ஆதரவளிப்பதற்கு மிகச்சிறந்த அறிவாற்றலுடனும் தொலைநோக்குடன் கலாநிதி

A.R.B. அமரசிங்க அவர்கள் இருந்தது ஒரு அதிர்ஷ்டமாக இருந்தது. 1985 நொவம்பர் 20ஆம் திகதிஅத்தாட்சிப்படுத்தப்பட்ட1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டத்தினால் “இலங்கை நீதிபதிகள் நிறுவகம்” என்ற தலைப்பில் பாராளுமன்றச் சட்டமொன்றினால் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தை ஸ்தாபிப்பதில் இறுதி விளைபயனுக்குக்காரணமாக இருந்த முயற்சிகளுக்காக நீதிபதிகள் நிறுவகத்தின் உருவாக்கத்தில் பெரிதாக அவரின் பெயர் எழுதப்பட வேண்டும்.1986 ஜனவரி 01ஆம் திகதி முதல் நீதிபதி சோசா பணிப்பாளராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டார். அதைனைத்தொடர்ந்து நீதிபதிகளுக்கான கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சிக் குறிப்புக்கள் மற்றும் நடப்பு ஆலோசனை சேவை போன்றவற்றை ஒழுங்கு செய்வதன் மூலம் சகல சாத்தியமான வழிகளிலும் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பணியாற்றியது. 1990 இல் நீதிபதி K. விக்னராஜா பிரதிப்பணிப்பாளராக சேர்ந்து கொண்டது நீதிபதி சோசா அவர்களுக்குப் பெரும் அதிர்ஷ்டமாக இருந்தது என்பதுடன் திரு. P.நெவில்லே ஏ.டி சில்வா அவர்கள் பிரதம நீதியரசரின் செயலகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் நிறுவகத்தின் செயலாளராக இணைந்து கொண்டார்.

நீதிபதிகள் நிறுவகமானது பதவி-வழி தலைவராக பிரதம நீதியரசரினால் தலைமைதாங்குகின்றதும் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் பொதுவாக உயர் நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதிகள் இருவரும் உள்ளடங்கிய முகாமை சபையொன்றினால் நடாத்தப்படுகின்றது. நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் முகாமை என்பவை முகாமைச் சபையினால் உரித்தாக்கப்பட்ட விடயங்களுக்குட்பட்டதாகும்.

**நிறுவகத்தின் குறிக்கோள்கள்**

1. நீதித்துறை அலுவலர்களினால் நீதித்துறை மற்றும் சட்ட விடயங்கள் மீதான கருத்துக்கள், ஆலோசனைகளைப் பரிமாறுவதற்கான வசதிகளை வழங்குதல்;

2. நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வல்லமையை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள், மாநாடுகள், விரிவுரைகள், செயலமர்வுகள் என்பவற்றை ஒழுங்கு செய்து நடாத்துதல் மற்றும் அவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்துதல்;

3. நீதி நிருவாகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி மற்றும் ஆய்வுக் கற்கை நெறிகளை உருவாக்கி நடாத்துதல்;

4. நீதித்துறை அலுவலர்களுக்கு நூலக வசதிகளையும் ஏனைய கல்விசார் கருவிகளையும் வழங்குதல்

இலங்கை நீதிபதிகள் நிறுவக முகாமை சபையின் முதலாவது தலைவராக நிறுவகத்தின் மீது தீவிர ஆர்வம் கொண்டிருந்த பிரதம நீதியரசர் S. சர்வானந்தா நியமிக்கப்பட்டிருந்தார். அவரைத்தொடர்ந்து பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க நியமிக்கப்பட்டார். நீதித்துறையில் அவர் சுயமாகவே ஒரு உறுப்பினராக இருந்தார் என்பதுடன் அவர் பூரண விருப்பத்துடன் நிறுவகத்தின் அலுவல்களில் பங்கேற்றார். நிறுவகத்தின் சகல கருத்தரங்குகள் மற்றும் செயற்பாடுகளில் அவர் பங்கு பற்றினார். கருத்தரங்குகளில் சட்டத்தரணிகள் மற்றும் அளவையாளர்கள் போன்றோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார் என்பதுடன் நீதிபதிகள் குழாம் மற்றும் சட்டத்தரணிகள் போன்றோருடன் நட்புணர்வு உறவுகளைப் பேணும் நோக்கில் கண்காணிப்புக்குழுக்களை நிறுவினார். நிறுவகம் எப்போதும் அவரை நினைவில் வைத்திருக்கும்.

அதன்பின்னர் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டிருந்த நீதிபதி தம்பையா முகாமை சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார் என்பதுடன் அவர் ஏற்கனவே முகாமை சபையில் ஒரு அங்கத்தவராக

இருந்து நிறுவகத்தின் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றியிருந்தார். திரு A.S.விஜேதுங்க அவர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அப்போதைய செயலாளராக இருந்தவர் என்பதோடு நிறுவகத்தை வெற்றிப்பாதைக்குக் கொண்டுவருவதற்கான முன்னோடி முயற்சிகளில் முக்கிய பங்காற்றியவருமாவார். அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அப்போதைய தலைவராக இருந்தார் என்பதோடு அவர் நிறுவகத்தின் மீது ஒத்துழைக்கின்ற அக்கறையைக் காண்பிப்பவராக இருந்தார். அவரைப் பின்தொடர்ந்து வந்த திரு லால் பீரிஸ் மற்றும் அவரின் உதவியாளர் திரு எஸ். விதானாரச்சி ஆகியோரும் நிறுவகத்தின் மீது ஓர் உற்சாகமான அக்கறையைப் பேணிவந்தனர். நிறுவகத்தின் நலனுக்காக சிறப்பான ஆர்வத்தை அவர்கள் கொண்டிருந்தனர் என்பதோடு நிறுவகத்துக்கு உறுதியளிக்கின்ற கோபுரமாகவும் அவர்கள் இருந்தனர்.

ஆசியா புவுன்டேஷன் அமைப்புக்கு நீதிபதிகள் நிறுவகம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. நிறுவகத்தின் வளர்ச்சிக்காக ஆரம்பத்தில் இருந்த திரு.ஜோன் கயர் மற்றும் அதன்பின்னர் திரு நிக் லென்க்டன் அவர்களினால் வழங்கிய ஆதரவுக்கு நிறுவகம் நன்றிக்கடன்பட்டுள்ளது. எமது நிறுவகம் ஆசியா பவுன்டேஷன் அமைப்பின் முதன்மை கரிசனைகளில் ஒன்றாகவும் அதன் நன்கொடையில் ஒரு பயனாளியுமாகும் என்பதை பெருமிதத்துடன் கூறிக்கொள்கின்றோம். அதன் பின்னர் நிறுவகம் புதுக்கடைப் பிரதேசத்தில் உள்ள உயர்நீதி மன்ற வளவில் அமைக்கப்பட்டது என்பதுடன் அதன் செலவுகள் அரசாங்கத்தினால் பராமரிக்கப்பட்டு வந்தது.

நீதி தொடர்பான விடயங்கள் மீது மேன்முறையீட்டு நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதிகளின் வான்மை மற்றும் அனுபவம் என்பவற்றையும், நீதிபதிகளின் பயிற்சிக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குகின்ற நிருவாக விடயங்களில் நீதியமைச்சின் சிரேஷ்ட அலுவலர்களின் உதவியையும் நிறுவகம் பெற்றுக்கொண்டது. 1990 நவம்பரில் நீதித்துறைக் கல்வி மற்றும் ஆய்வுக்கான கலிபோர்னியா நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலாநிதி போல் எம். லீ இலங்கைக்கு விஜயம் செய்து கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களை உள்ளடக்கி நீதித்துறைக்காக அனைத்தும் உள்ளடக்கிய கல்விப்பயிற்சி முறைமையொன்றை, மூன்று வருடம் கொண்ட வழிகாட்டி அடிப்படையில் அமைந்த கல்விப்பயிற்சியை வழங்குவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்துக்கு வழங்க இயலுமான ஒரு முன்னோடித் திட்டத்தை உருவாக்கினார்:

(1) இலங்கை நீதித்துறையின் புதிய அங்கத்தவர்களுக்கு அவர்களின் நீதித்துறை அறிவு மற்றும் திறன்களை இற்றைப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும், பின்னர் அதனைத் தொடரக்கூடிய முறையில் அமைந்த ஆறுமாத கால துறைசார் கல்வி நிகழ்ச்சித்திட்டம்,

(2) மாவட்ட நீதிமன்றங்களுக்கும் மேல் நீதிமன்றங்களுக்கும் புதிதாகப் பதவி உயர்வு பெற்ற நீதிபதிகளுக்காக தனியான ஒருமாதகால சேவைக்காலப் பயிற்சி நிகழ்ச்சி.

(3) நீதிவான்கள், மாவட்ட நீதிபதிகள், மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் போன்றோருக்கு புதிய சட்ட அபிவிருத்திகள், பொது மற்றும் தனிப்பட்ட நீதிமன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல் மற்றும் உள்ளூர் நீதிமன்ற பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகளை தரப்படுத்தல் என்பவை தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவி செய்வதற்கு வருடாந்த சேவைக்காலக்கல்வி மாநாடுகளைத் தொடர்தல்.

(4) ஒரு வாரகாலம் - நீதிமன்ற முகாமை, தொடர்பாடல் திறன்கள், பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் நீதிமன்றஅறை நியாயத்துவம்,குடும்பச்சட்டம், இளம்பராயச்சட்டம், குற்றவியல் சட்டம், குடியியல் சட்டம், மரணசாதன

(5) அதிகாரப்பத்திரம் மற்றும் உளச் சுகாதாரச் சட்டம், காணி மற்றும் பாகப்பிரிவினைச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் என்பன உட்படுகின்ற விடயங்களில் நீதித்துவ தகவல் தேடுதல் மற்றும் தீர்மானம் எடுத்தல் மற்றும் சட்டவியல் மற்றும் மனிதநேயங்கள் மற்றும் விசேட நீதிமன்ற கடமையை கையாள்வதில் சாட்டுதல்கள் போன்ற மிக முக்கிய நீதித்துவ விடயங்களின் மீது உயர் நீதித்துவக் கற்கை நெறிகள்.

(6) நீதித்துறைக்காக. ஓடியோ மற்றும் காணொளி முறையில் பதிவு செய்யப்பட்ட(Audio and Video Taped) கல்வி உபகரணங்கள் உட்பட (நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்காக அடிப்படை நூலக வசதிகளுடன்) நாளாந்த வேலைக் கருவிகள் (நீதிபதிகள் கைநூல்கள்,சரிபார்த்தல் பட்டியல்கள்,பேச்சுச் சொற்கள் மற்றும் எழுத்து வடிவங்கள், கைநூல்கள் மற்றும் ஏனைய குறிப்புப் பொருட்கள்) பரிபூரண பொருட் தொகுதியொன்றைத் தொடங்குதல்.

(7) நீதிபதி-ஆசிரியர்களுக்காக செயற்திறனான நீதித்துறை பீடமொன்றினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்.

(8) நீதிமன்றச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் நீதிமன்றத் தாமதங்களைக் குறைப்பதற்கும் மற்றும் நீதிபதிகளின் ஒழுக்கநெறி நடத்தை மற்றும் பொது வகைப்பொறுப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கும் தொடர் ஆய்வுக் கள அபிவிருத்தி நிகழ்ச்சிகள்.

(9) மேலே சொல்லப்பட்ட நீதித்துறை கல்வி முறைமையை அமுல்படுத்துவதற்கு பொருத்தமான வகுப்பறைகள், அலுவலகங்கள், செவிப்புல கட்புல உபகரணங்கள் மற்றும் ஏனைய வளங்களுடன் கூடிய ஒரு பயிற்சி வசதியை வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது எதிர்கால நிர்மாணிப்புக்கு வழிவகை செய்தல்.

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம் தரமான நீதித்துறையை ஊக்குவிப்பதற்கும் நியாயமானதும், துரிதமானதும் மற்றும் செற்திறனானதுமான நீதித்துறை நிர்வாகத்துக்காக சட்டத்தின் ஆட்சியை பலப்படுத்துவதற்குமாகும் என்பதோடு அது நீதித்துறை அங்கத்தவர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றுக்காக தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான ஒரு கட்டளையாகவும் உள்ளது. இந்தத் தேவைப்பாடு நீதிபதிகள் பதவியேற்கின்ற நேரத்தில் அவர்களுக்கான பொருத்தமான பயிற்சிக்கு மாத்திரமல்லாமல் அவர்களின் பதவிக்காலம் முழுவதும் தொடர்கின்ற கல்வியாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். நீதித்துறையின் தரம் என்பது எந்தளவுக்கு சிறந்தவர்களாக நீதிபதிகள் உள்ளனர் என்பதிலேயே தங்கியுள்ளது. நிர்வகிக்கப்படுகின்ற நீதித்துறையானது தனியாக அதனை நிருவகிக்கின்ற நீதிபதிகளைப் போன்று சிறந்ததாக இருக்க வேண்டும். சட்டத்தின் ஆட்சிக்கு அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்ற உலக நாடுகள் இதனைப் புரிந்து கொண்டுள்ளன என்பதுடன் நீதிபதிகளுக்கான பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் என்பவற்றை நடாத்துகின்றன.

இந்த கால கட்டத்தில்,நிறுவகம் உயர் நீதிமன்றத்தின் அறை இலக்கம் 1308 இல் தன் பணிகளைச் செய்து வந்தது. நீதித்துறை அலுவலர்களுக்காக சேவைக்காலப் பயிற்சியை நடாத்துவதற்கு நீதிபதி J.F.A. சோசா அவர்களுடன் சேர்த்து ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிபதி K. விக்னராஜா அவர்களை பிரதிப் பணிப்பாளராக இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபை நியமித்தது. K. விக்னராஜா அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, 1986 இல் பிரதிப் பணிப்பாளராக ஓய்வு

பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி S.J.D. டி S. விஜயரத்ன கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன்பின்னர் 2002 இல் பிரதிப் பணிப்பாளராக ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி P.H.K. குலதிலக்க கடமைகளைப் பொறுப்பேற்றார். அவர் அவரின் பரந்த அறிவு மற்றும்

அனுபவத்துடன் சட்டமா அதிபதி திணைக்களத்தின் உறுப்பினராக, மேல் நீதிமன்ற நீதிபதியாக மற்றும் மேன் முறையீட்டு நீதிபதியாக நீதிபதிகள் நிறுவகத்துக்கு ஒரு சொத்தாக இருந்தார் என்பதோடு நீதித்துறை அலுவலர்களுக்கு ஓர் அறிவார்ந்த ஆலோசகராகவும் இருந்தார்.

2000 ஆம் ஆண்டில் G.P.S. டி சில்வா அவர்கள் ஒய்வு பெற்ற பின்னர், பிரதம நீதியரசராக சரத் என். சில்வா நியமிக்கப்பட்டார். நீதிபதிகள் நிறுவகத்துக்கு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா பலம் வாய்ந்த ஒரு கோபுரமாகத் திகழ்ந்தார். அவர் அவரது விஜேராம என்ற இடத்தில் இருந்த வாசஸ்தலத்தை நீதிபதிகள் நிறுவகத்தின் அலுவலகமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்தார் என்பதோடு நீதித்துறை அலுவலர்களுக்காக பயிற்சியை நடாத்துவதற்காக இருக்கக் கூடிய சட்ட மற்றும் நீதித்துறை மறுசீரமைப்புக்கள் கருத்திட்டத்துக்கான நிதியையும் ஒழுங்கு செய்தார்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அவர்கள் நீதியமைச்சின் சட்ட மற்றும் நீதித்துறை மறுசீரமைப்புக்கள் கருத்திட்டம் மற்றும் உலக வங்கியுடன் இணைந்ததாக சட்ட மறுசீரமைப்புக்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு என்பவற்றுக்கான ஆதரவுடன் நீதித்துறை அலுவலர்களுக்காக வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களை ஆரம்பித்ததன் மூலம் நீண்டகால நீதித்துறைப் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். பிணக்குகளை வினைத்திறனாகவும் தகைமையுடனும் தீர்த்து வைப்பதற்கான ஒரு நவீன நீதித்துறை முறைமையை உருவாக்குதல் இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது. நீதித்துறைக்கான நிதி மற்றும் பயிற்சி வழங்குவதோடு வணிகச் சட்டத்தின் மீது விசேட கவனத்துடன் கூடிய புதிய மற்றும் சேவைக்காலநீதிபதிகள் ஆகிய இரு பகுதியினருக்கும் அனைத்தும் உள்ளடக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சியை விருத்தி செய்தல் கருத்திட்டத்தின் முக்கிய பகுதியாக இருந்தது.இது வரையில், மேலதிக வகுப்பு, பிரயாணம், தங்குமிடம் மற்றும் நியாயமான ஜீவனோபாயச் செலவுகள் உட்பட ஒரு வருடத்துக்கு நீதித்துறையின் 3 அங்கத்தவர்களுக்காக LLM நிகழ்ச்சித்திட்டத்துக்கான கல்விக்காக கருத்திட்டம் நிதி வழங்கியுள்ளது.

அப்போது விஜேராம மாவத்தையில் இருந்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அவர்களது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் அமைக்கப்பட்டிருந்த நிறுவகத்தில் நீதித்துறை அலுவலர்களுக்கும் நீதி மன்ற உத்தியோகத்தர்களுக்கும் கணினிப் பயிற்சியையும் ஆரம்பித்திருந்தார். அவரின் கால கட்டத்தில் நீதியமைச்சுக்கான ஒரு புதிய கட்டட நிர்மாணிப்பை மேற்கொண்டார் என்பதோடு அதில் 5 ஆம் மாடி நீதிபதிகள் நிறுவகத்துக்கும் 4 ஆம் மாடியின் ஒரு பகுதி நீதிபதிகளின் வாசஸ்தலத்துக்கும் ஒதுக்கித் தரப்பட்டது. 2000 இலிருந்து 2009 வரை பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தில் நிறுவகத்துக்கான ஆதரவுக்கும் நிறுவனத்தின் அலுவல்களுக்கு வெளிப்படையாக அவராகவே முழுமனதுடன்ஈடுபாடு காட்டியமைக்கும் அவருக்கு நிறுவனம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.நிறுவகம் அவரை எப்போதும் நினைவில் கொள்கின்றது.

நிறுவகத்தின் முதல் ஸ்தாபகப் பணிப்பாளரான நீதிபதி J.F.A. சோசா அவர்கள் நிறுவகத்தின் பணிப்பாளராக 21 வருடங்களுக்கு மேலாக நிறுவகத்துக்கும் நீதித்துறை அலுவலர்களுக்கும் ஒரு மகத்தான பணியாற்றி 2008 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். நீதிபதி J.F.A. சோசா அவர்கள் எமது ஊக்கத்துக்கு தொடர்ந்து உதவிவந்தார் என்பதோடு எப்போதும் எமது நினைவில் அவர் இருப்பார்.

நீதிபதி J.F.A. சோசா அவர்கள் ஓய்வு பெற்றபின்னர், 2008ஆம் ஆண்டில் நிறுவகத்தின் பணிப்பாளராக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி நிஸ்ஸங்க உடலகம நியமிக்கப்பட்டார் என்பதோடு அவர் 2011 ஆம் ஆண்டு வரை பணிப்பாளராகக் கடமையாற்றினார். நீதிபதி நிஸ்ஸங்க

உடலகம அவரின் பதவிக் காலத்தில் முதன்முறையாக இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் இணையத்தளத்தைத் ஆரம்பித்து வைத்தார். உயர் நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் மேல்நீதிமன்ற நிதிபதிகளின் உதவியுடன் நீதிபதிகளுக்கான குற்றவியல்,குடியியல், வணிக விடயங்கள், வழக்கு முகாமை மற்றும் மாற்றுப்பிணக்குத் தீர்மானம் போன்றவை மீதான 10க்கும்

மேற்பட்ட கற்கைநெறி விடயங்களை வெளியிடுவதில் நீதிபதி J.F.A. சோசா, நீதிபதி உடலகம மற்றும் நிதிபதி P.H.K. குலதிலக்க என்போர் உதவியாக இருந்துள்ளனர்.நீதிபதி உடலகம அவர்களே! நிறுவகத்துக்காக நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு உங்களுக்கு கௌரவமளிக்கின்றோம்.

2009 இல் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் நீதிபதி அசோக டி சில்வா பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். அவரது கால கட்டத்தில், 2009 இல் நீதிபதி P.H.K. குலதிலக்க மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார் என்பதோடு 2011 இல், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி T.B. வீரசூரிய அவர்களுடன் சேர்த்து இணைச்செயலாளராக அவர் நியமிக்கப்பட்டார். நீதிபதி T.B. வீரசூரிய மற்றும் நீதிபதி P.H.K. குலதிலக்க ஆகியோர் நிறுவகத்துக்கு சிறப்பாக பணியாற்றினர் என்பதோடு உயர் நீதிமன்ற நீதிபதிகள் என்றவகையில் அவர்களின் பரந்த அறிவு மற்றும் அனுபவத்துடன் குடியியல் மற்றும் குற்றவியல் நீதிபதிகளுக்குப் பயிற்சி வழங்கினர். நிறுவகத்துக்கும் நீதித்துறைக்கும் வழங்கிய மகத்தான சேவைக்காக அவர்கள் இருவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு இந்த வாய்ப்பை நிறுவனம் பயன்படுத்திக்கொள்கின்றது. அவர்கள் இருவரையும் எமது உயர்வான அறிவார்ந்த ஆலோசகர்களாக நாங்கள் எப்போதும் நினைவு கூறுகின்றோம்.

பிரம நீதியரசர் அசோக சில்வா அவர்கள் நீதித்துறைக் கல்வியிலும் பயிற்சியிலும் அதிகம் ஆர்வம் காட்டினார். நிறுவகத்தின் உதவியுடன் அவர் பயிற்சி நெறிகள் மற்றும் பயிற்சியின் உள்ளடக்கங்கள் என்பவற்றை மறுசீரமைத்தார். மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் நீதித்துறை அலுவலர்களுக்கும் பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. பிரதம நீதியரசர் அசோக சில்வா அத்தகைய பல கருத்தரங்குகளில் அவராகவே பங்குபற்றி நிறுவகத்தின் சகல செயற்பாடுகளுக்கும் ஆதரவு வழங்கினார். அவரது காலத்திற்பல பயிற்சிக்கான பல பயிற்சி அலகுகள் வெளியிடப்பட்டன என்பதோடு அவர் நீதித்துறைப் பயிற்சிக்காக வளவாளர்களாக சேவையில் இருந்த மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகளின் சேவைகளைப் பெற்றுக் கொண்டார். பிரதம நீதியரசர் அசோக சில்வா அவர்கள் பயிலுனர் நீதிபதிகளைப் பயிற்சியளிப்பதற்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளை அழைப்பதற்கு அறிவுரை வழங்கினார்.

அத்தோடு இந்தக்கால கட்டத்தில் நீதிபதிகள் நிறுவகமானது நீதியமைச்சின் புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டது என்பதுடன் அப்போதிருந்த நீதியமைச்சின் செயலாளர் திரு சுகத கம்லத் அவர்கள் ஒரு புதிய கேட்போர்கூடம், ஒரு கணனிக்கூடம், ஒரு நூலகம் மற்றும் நீதிபதிகள் வாசஸ்தலங்கள் என்பவற்றுடன் கூடிய ஒரு நீதிபதிகள் நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு புதிய நீதிபதிகள் நிறுவகத்தை நீதித்துறை அலுவலர்களுக்கு வழங்குவதற்கு எடுத்த உங்கள் முயற்சிகளுக்கு உங்களை நிறுவகம் என்றும் நினைவில் கொள்ளும். கணனிக்கூடம், கேட்போர்கூடம் மற்றும் நூலகம் என்பவற்றுக்கான அவசியமான சகல உபகரணங்களை நன்கொடையாகவும் நீதிபதிகள் வாசஸ்தலங்களுக்கான தளபாடங்களை வழங்கியமைக்காகவும் UNDP அமைப்புக்கு நிறுவகம் நன்றிக்கடன் பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் அசோக சில்வா அவர்களின் ஓய்வுக்குப்பின்னர், 2011 இல் பிரதம நீதியரசராக ஷிராணி ஏ. பண்டாரநாயக்க அவர்கள் நியமிக்கப்பட்டார் என்பதோடு நிறுகத்தின் முகாமை சபையின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். 2012 மே மாதம் வரை நீதிபதி T.B. வீரசூரிய மற்றும் நீதிபதி P.H.K. குலதிலக்க ஆகியோர் இணைப்பணிப்பாளர்களாகப் பணியாற்றினர். அதன்

பின்னர் 2012 ஜூன் மாதத்தில் நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பாளராக கடமையில் இருந்த மேல் நீதிமன்ற நீதிபதிதிரு ருவான் பர்னாந்து அவர்களை நீதிபதிகள் நிறுவகத்தின் பணிப்பார் சபை நியமித்தது என்பதோடு நிறுவகத்தின் கல்விசார் இணைப்பாளராக, கடமையில் இருந்த நீதிவான் திரு விஜேவீர அவர்கள் நியமிக்கப்பட்டார்.

முகாமை சபைக்குத் தலைமை வகித்த பிரதம நீதியரசர் ஷிராணி ஏ. பண்டாரநாயக்க அவர்கள் நிறுவகத்தின் அலுவல்களுக்கு ஆதரவளித்தார் என்பதோடு நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கு முக்கியமான பங்களிப்பொன்றை வழங்கினார். இந்தக் கால கட்டத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் கணக்காளர், நிறுவகத்துக்கு பதில் கடமைபுரியும் கணக்காளராக நியமிக்கப்பட்டார். நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்பாடுகளை திறமையாக மேற்கொள்வதற்காக நிறுவகத்துக்கு நீதிமன்றப் பதிவாளர் ஒருவரும் 3 முகாமை உதவியாளர்களும் நியமிக்கப்பட்டனர். நீதியமைச்சிலிருந்து 2 சிற்றூழியர்களை நீதிபதிகள் நிறுவகத்துக்கு இணைத்ததற்காக அமைச்சின் அப்போதிருந்த செயலாளர் திரு சுகத கம்லத் அவர்களுக்கு நிறுவகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

2012 இல்,கூட்டுருத் திட்டமொன்றையும் செயல் திட்டமொன்றையும் நிறுவகம் தயாரித்துள்ளதுடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதியியல் ஒழுங்குவிதிகளின் கீழ் வருமானம் மற்றும் செலவீனம் தொடர்பில் அதிகாரக் கையளிப்புக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.நிறுவகம் பாராளுமன்றத்துக்கு ஆண்டறிக்கையை சமர்ப்பித்துள்ளது, நிறுவகத்தின் பதவியணி தொடர்பான விபரத்தைத் தயாரித்துள்ளது என்பதுடன் தொழில் நியாய சபைகளின் தலைவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்கியுள்ளது. இந்தக் கால கட்டத்தில், பயிற்சிநெறிகளை மீள வடிவமைப்பதற்கும் நிறுவகம் நன்கு உபகரணங்களுடன் கூடிய நவீன பயிற்சி மற்றும் ஆய்வு வசதி இருப்பதனை உறுதிசெய்வதற்கு நிறுவகத்தில் உள்ள வசதிகளை நவீன மயப்படுத்தும் பணிகளையும் ஆரம்பித்துள்ளது.

நிறுவகத்தின் செயலகத்தை அமைப்பதற்கு ஒரு பொருத்தமான இடத்தை தேடுதல், பயிற்சி நெறிகளை விரிவாக்கல்,Wi-Fi வசதியுடன் கூடிய ஒரு முழுமையான உபகரணங்கள் கொண்ட கணனி கூடமாக மாற்றுவதன் மூலம் நூலக வசதியை மேம்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவரின் (ICTA) உதவியுடன் இணையத்தளத்தை மீளச் செயற்படுத்தல், உயர் நீதிமன்றத்தின் அறிக்கையிடப்படாத தீர்ப்புக்களை சேகரித்தல், நிறுவகத்துக்குள்ளேயே நீதிபதிகளுக்கு வதிவிட வசதிகளை வழங்கல்,UNDP அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க நீதித்துறை அலுவலர்களுக்காக பயிற்சிக் கைநூல் ஒன்றை விருத்தி செய்தல் தொடர்பான வேலையை ஆரம்பித்தல், அவசியமான ஊழியர்களை நியமித்தல், பராமரிப்புக் கணினி (computer server) போன்ற தேவையான பௌதீக வளங்களை வழங்கல் மற்றும் கணினி அச்சுப்பிரதியெடுத்தல் மற்றும் பிரதியெடுத்தல் வசதி மற்றும் பொது நிருவாக மற்றும் நிதியியல் சுற்றறிக்கைகளுடன் இணங்கியொழுகுவதன் மூலம் நிருவாக விடயங்களை செயற்படுத்தல் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இது தொடர்பில் நிறுவகம் அதன் முகாமை சபை உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது என்பதுடன் அது தொடர்பில் நிறுவகத்தின் ஊழியர்களுக்கு விசேடமாக கல்விசார் இணைப்பாளர் திரு மஹி விஜேவீர மற்றும் நிறுவகத்தின் பணிப்பாளர் திரு ஞானபால அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெறிவித்துக் கொள்கின்றது.

2013 ஜனவரியில், இலங்கையின் பிரதம நீதியரசராக கௌரவ மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டார் என்பதோடு அவர் நிறுவகத்தின் முகாமை சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் ஆரம்பத்திலிருந்தே நிறுவகத்தின் அலுவல்களுக்கு முழுமனதுடன் மும்முரமாக ஈடுபட்டார் என்பதோடு அவர் நிறுவகத்தின் பலம் வாய்ந்த கோபுரமாக இருந்தார். 2013 ஏப்ரல் மாதத்தில், நிறுவகத்தின் அலுவலகத்துக்கு நீதியமைச்சின் புதிய கட்டடத்தில் ஒரு இடம் கிடைத்தது

என்பதோடு அதற்கான முன்முயற்சியை மேற்கொண்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்களுக்கு நன்றிகளை நிறுவகம் தெரிவித்துக்கொள்கின்றது. நிறுவகத்தின் அலுவகத்தைப் பயன்படுத்துவதற்கு நீதியமைச்சின் கட்டடத்தை ஒதுக்கித்தந்தமைக்காக நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டி சில்வா அவர்களுக்கும் நிறுவகம் நன்றிக்கடன் பட்டுள்ளது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்கள் மேல் நீதிமன்ற நீதிபதிகள், காதி நீதிமன்றங்களின் நீதிபதிகள் மற்றும்

நீதிமன்றப் பதிவாளர்கள் ஆகியோர்களுக்கு நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்கினார். பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்கள் நிறுவகத்தின் 9 ஆக இருந்த ஊழியர்களை 23 ஆக அதிகரித்தார் என்பதோடு கல்வி நிறுவனங்கள், துறைசார் தகைமையுடைய சட்ட வல்லுனர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள வல்லுனர்களுக்கும் நீதிபதிகளுடன் அவர்களது அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு அழைப்பு விடுத்தார். பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்கள் வழமையாக நிறுவகத்தில் நீதிபதிகளை சந்திப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகளுக்கும் வல்லுனர்களுக்கும் அழைப்பு விடுத்தார் என்பதோடு அதன் மூலம் சட்ட மற்றும் நீதித்துறைப் பிரச்சினைகள் தொடர்பாக நீதிபதிகள் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நிறுவகத்திலும் வேறு இடங்களிலும் பல கருத்தரங்குகள், விரிவுரைகள், முன்வைப்புக்கள் என்பவற்றில் அவராகவே பங்குபற்றி நீதிபதிகளுடன் அவரது அறிவு மற்றும் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

அவரது காலத்தில், சட்டச் சான்று மற்றும் குடியியல் சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பாக நீதிபதிகள் கைநூலை இற்றைப்படுத்துவதற்கு இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவர் தற்போது பரந்த அறிவுள்ள வெளிநாட்டு நீதிபதிகளின் உதவியோடு வழக்கு முகாமை விடயத்தில் குடியியல் நீதி முறைமைக்கு சட்ட மறுசீரமைப்புக்களை உருவாக்கும் செயன்முறையில் ஈடுபட்டிருந்தார் குடியியல் நீதி முறைமைக்குத் தேவையான சட்ட மறுசீரமைப்புக்களைக் கொண்டுவருவதில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் நிறுவகம் மகிழ்வடைகின்றது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்கள் பதவியேற்ற பின்னர், பிரதானமாக வழக்கு முகாமை, நீதிமன்ற நிருவாகம் மற்றும் நீதித்துறை ஒழுக்க நெறிகள் தொடர்பாக மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் 200 க்கும் மேற்பட்ட நீதிபதிகளுக்கு வெளிநாட்டுப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த கால கட்டத்தில் திரு லக்மால் விக்ரமசூரிய அவர்களின் சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. நிறுவகத்தின் இணைப்பாளராக நீதிபதிகளுக்கு வெளிநாட்டு பயிற்சிவாய்ப்புக்களை தேடுவதில் அவர் அர்ப்பணிப்புச் செய்துள்ளார் என்பதோடு நிறுவகத்தின் சகல வெளிநாட்டுப் பயிற்சித்திட்டங்களையும் அவர் ஒழுங்கு செய்தார். நிறுவகத்தின் சார்பாக சகல வெளிநாட்டுப் பயிற்சித்திட்டங்களையும் ஒழுங்கு செய்வதிலும் இணைப்புச் செய்வதிலும் மேற் கொண்ட சிரமத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் அவருக்கு நன்றி செலுத்துவதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நிறுவகம் விரும்புகின்றது. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அவர்களின் கால கட்டத்தில் நீதிபதிகள் நிறுவகம் வேகமாக முன்னேற்றம் அடைந்தது என நாங்கள் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

நிறுவகத்துக்கு வளவாளர்களாகவும் நிறுவகத்தின் ஏனைய செயற்பாடுகளுக்கும் ஆதரவளித்தமைக்காக உயர் நீதிமன்ற மற்றும் மேல் நீதிமன்ற சகல நீதிபதிகளுக்கும் கல்விசார் சமூகத்துக்கும் தொழில்வல்லுனர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதில் ஒரு முக்கிய வகிபாகம் வகிக்கும் நீதிசேவை ஆணைக்குழுவின் செயலாளரான திரு சிசிர ரத்நாயக்க அவர்களையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இன்று, நீதித்துறைப் பயிற்சிக்கான சர்வதேச அமைப்பின் (IOJT) அங்கத்துவத்தை நிறுவகம் பெற்றுக் கொண்டுள்ளது.நீதித்துறை அலுவலர்களுக்கு சட்ட மற்றும் நீதித்துறை தகவல்களை வழங்குவதற்காக இலத்திரனியல் - நூலக வசதியுடன் அதன் சொந்த இணையத்தளத்தை நிறுவகம்

கொண்டுள்ளது. நிறுவகத்தை யாழ்ப்பாணம், தங்காலை மேல் நீதிமன்றங்கள் மற்றும் பிரதம நீதியரசரின் அறை என்பற்றுடன் இணைக்கின்ற ஒரு காணொளி மாநாட்டு வசதி (video conferencing facility) நிறுவகத்துக்குள்ளது. இந்திய உச்ச நீதி மன்றம் மற்றும் மேல்நீதிமன்றம், ஐக்கிய அமெரிக்கா உயர் நீதிமன்றம் ஆகியவற்றிலிருந்து பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தீர்ப்புக்கள் மற்றும் பிரபுக்கள் சபையின் தீர்ப்புகள் என்பவற்றை அணுகக் கூடிய முதலாவது

சர்வதேச தரவு மையமான “மெனுபட்ரா”(Manupatra) என்ற இந்திய இணையத்தளம்நிறுவகத்துக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை நீதித்துறை அலுவலர்களைப் பயிற்றுவித்து இலத்திரனியல் பயிற்சி உபகரணங்கள் உட்பட பயிற்சி பாட அலகுகளை வழங்குவதில் ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி நீதித்துறை நிலையம் (Federal Judicial Centre) , மலேசிய, சிங்கப்பூர் மற்றும் இந்திய நீதிபதிகள் நிறுவகம், என்பவற்றினால் வழங்கப்பட்ட ஆதரவை நிறுவகம் பதிவு செய்து வைக்க விரும்புகின்றது.

நிறுவகத்தின் முகாமை சபை நீதியமைச்சின் செயலாளர் மற்றும் அவரின் அலுவலர்கள்,UNDP, ஆசியா பவுன்டேஷன், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய நிதி வழங்கும் முகவர்களுக்கும் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முன்னேற்றத்துக்கு பங்களிப்புச் செய்கின்ற நிறுவகத்தின் ஊழியர்களுக்கும் நிறுவகம் நன்றியைத் தெறிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

Coutersy Judges’Journal volume 1 (1985 – 1991 வரை)

# 5. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை மற்றும் ஊழியர்கள்

நிறுவகமானது தொடர்ந்து பின்னுறுகின்ற ஒரு பொது முத்திரையுடன் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஓர் அமைப்பாகும் என்பதோடு அதன் நிருவாகமும் முகாமையும் முகாமைசபையால் நிருவகிக்கப்படுகின்றது. முகாமை சபையானது பிரதம நீதியரசர் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை உள்ளடக்கியுள்ளதுடன் முகாமைச் சபையின் தலைவராக பிரதம நீதியரசர் இருப்பார். நிறுவகத்தின் திட்டம் மீளமைக்கப்பட்ட பின்னர், நிறுவகத்தின் அமைப்பு வரைபடம் பின்வருமாறு காணப்படும்:

## முகாமை சபை

2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் முகாமை சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

இலங்கைத் திரு நாட்டின் பிரதம நீதியரசர்,ஜனாதிபதி சட்டத்தரணி,கௌரவ மொஹான் பீரிஸ்- தலைவர்

| | |
|---|---|
| கௌரவ நீதிபதி சலீம் மர்சூப், | உறுப்பினர் |
| கௌரவ ஷிராணி திலகவர்த்தன, | உறுப்பினர் (2014 ஆகஸ்ட் முதல்) |
| கௌரவ K. சிறிபவன் | உறுப்பினர் (2014 மேயில் இருந்து) |

## நிறுவகத்தின் ஊழியர்கள்

முகாமை சபை நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிறுவகத்தின் பணிப்பாளர்,அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர்களை நியமிக்கின்றது என்பதுடன் பணிப்பாளர், அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர்கள் போன்றோர் மீது (பதவி நீக்கும் அதிகாரம் உட்பட) ஒழுக்காற்று கட்டுப்பாட்டை பிரயோகிக்கின்றது. அத்தோடு பணிப்பாளர் அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர்கள் போன்றோர்களின் கொடுப்பனவுகளை தீர்மானிக்கும் தத்துவமும் முகாமை சபைக்குண்டு.

| | |
|---|---|
| பணிப்பாளர்- | திரு ருவான் பர்னாந்து |
| ஆலோசகர்- | கௌரவ ரஞ்சித் ரணராஜா,<br>நீதிபதி ஷிராணி திலகவர்த்தன |
| கல்விசார் ஒருங்கிணைப்பாளர்- | திரு லக்மால் விக்ரமசூரிய |
| கணக்காளர்- | செல்வி லக்ஷிகா சதுராணி |

| | |
|---|---|
| முகாமை உதவியாளர்கள்- | திரு கபில ஜயசிறி<br>திருமதி திலனி கண்ணொருவ<br>செல்வி S.C.P.லக்மாலி<br>செல்வி K.A.C.P.P. குணவர்த்தண |
| நூலகர் - | செல்வி நிலந்திகா லக்மாலி |
| சிற்றூழியர்கள் | திரு D. லக்ஷான் வெலிகல<br>திருR.L.A.P.மலிந்த<br>திருH.K.T.M.செனவிரத்ன<br>செல்வி W.A.மேனகா பத்மசீலி<br>செல்வி U.A.நதீஷா சதுரங்கனி |
| சாரதி | திரு G.W.ரஞ்சித் |



# 6. நிறுவகத்தின் நிதிகள்

**நிறுவகத்தின் நிதிகள்**

நிறுவகத்தின் முகாமை சபையினால் நிருவகிக்கப்படுகின்ற சொந்த நிதி, நிறுவகத்துக்கு உள்ளது. நிறுவகத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனங்கள் இரண்டுக்கும் நீதியமைச்சினூடாக திறைசேரி மானிய வழியில் இருந்து பிரதானமாக நிறுவகத்துக்கு நிதியீட்டப்படுகின்றது. இந்த செலவினத்துக்கான உச்சவரம்பை நீதியமைச்சு/திறைசேரி வரையறுக்கின்றது என்பதுடன் இத்தகைய வரையறைக்குள்ளேயே நிறுவகம் செயற்பட வேண்டியுள்ளது.

1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஜனாதிபதியினால் அங்கீகரிக்கப்படுகின்ற ஏதேனும் மூலத்திலிருந்து கிடைக்கப்பெறுகின்ற நன்கொடைகள், பரிசுகள் மற்றும் மானியங்களை ஏற்றுக் கொள்வதற்கான அதிகாரம் நிறுவகத்துக்கு உள்ளது என்பதுடன் ஏதேனும் மூலத்திருந்து கிடைக்கின்ற அத்தகைய சகல நன்கொடைகள், பரிசுகள் மற்றும் மானியங்களை நிறுவகத்தின் நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டும். நிறுவகத்தின் நிருவாகம் மற்றும் முகாமையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல செலவுகளும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

2014ஆம் ஆண்டுக்கு வருடத்துக்கு மூலதனச் செலவினத்துக்குரூபாய் 7 மில்லியனும் மீண்டெழும் செலவினத்துக்காக ரூபாய் 19 மில்லியனும் நீதியமைச்சினூடாக திறைசேரி வழங்கியுள்ளது..

# 7.பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

1985 இல் நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து நிறுவகத்திலேயே அதிக அளவிளான பயிற்சி நெறிகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. எவ்வாறாயினும், 2013 இல் நிறுவகத்தின் விரிவாக்கத்தோடு, மேல் நீதிமன்ற நீதிபதிகள், ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தலைவர்கள், காதி நீதிமன்றங்களின் நீதிபதிகள் மற்றும் நீதிமன்றப் பதிவாளர்கள் போன்றவர்களுக்கும் சேவை வழங்குவதற்கு நிறுவகத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு, நீதித்துறைக் கல்வி, ஆளுமையை மேம்படுத்தல் (திறன்கள் விருத்தி உட்பட), உளப்பாங்கு மாற்றம் மற்றும் சமூக அர்ப்பணம் என்பவற்றின் மீது கவனம் செலுத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைப்பதனூடாக நீதித்துறை செயலாற்றுகையின் ஒரு உயர் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு நீதிபதிகள் நிறுவகம் அர்ப்பணித்துள்ளது. கல்வி மற்றும் ஆய்வினூடாக மேம்படுத்தப்பட்ட நீதித்துறை நிருவாகம் மற்றும் முகாமை என்பவற்றை மேலும் விருத்தி செய்வதற்கும் கைக்கொள்வதற்கும் நிறுவகம் மேலும் அர்ப்பணிப்புச் செய்துள்ளது. நீதி சேவை ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற ஆரம்ப நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு சேவை வழங்குவதற்கு நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

பயிற்சி அலகுகள் மற்றும் பயிற்சியில் பங்குபற்றுகின்ற ஆட்களைப் பொறுத்து, பயிற்சித்தேவைகள் வேறுபடுகின்றன என்பதோடு சகல பங்குபற்றுபவர்களுக்கும் உரிய பொதுப்பயிற்சி நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. பயிற்சியின் வகை மற்றும் நீதித்துறை அலுவலரின் அனுபவம் அல்லது முன்னைய பயிற்சி அமர்வுகளில் பெற்றுக் கொண்ட அறிவு என்பவற்றைப்பொறுத்து கட்டாயமான, தன்னார்வ அல்லது தன்விருப்பத்துக்குரியதாக ஒரு பயிற்சி நெறி இருக்கலாம். பயிற்சியைக் கட்டுப்படுத்த

யாருக்கு அதிகாரம் இருக்கின்றது மற்றும் பயிற்சி நெறிக்கு எவ்வாறு நீதியீட்டம் செய்யப்படுகின்றது, இலக்குக் குழுக்கள் மற்றும் பயிற்சியின் நேரம் என்பவற்றையும் இது காப்பீடு செய்கின்றது.

இலங்கையில்,நீதித்துறை அலுவலர்களின் துறைசார் வான்மையை மேம்படுத்துகின்ற முறையொன்றாகவும் சகல நீதிபதிகளும் அவர்களது நீதித்துறை சேவைக்காலத்தில் அவர்களது அறிவை மேம்படுத்துகின்ற வழியாகவும் சேவைக்காலப்பயிற்சியில் பங்கு கொள்வது சகல நீதித்துறை அலுவலர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இலங்கை நிதிபதிகள் நிறுவகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் நீதிபதிகள் சேவைக்காலப் பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர் என்பதோடு அவ்வாறு பங்குபற்ற முடியாமல் போனால் அத்தகைய பயிற்சிகளில் பங்குபற்ற முடியாமை தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

புதிதாக நியமிக்கப்பட்ட பயிலுனர் நீதித்துறை அலுவலர்கள் விடயத்தில், அறிமுக மற்றும் ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் நடைபெறும் என்பதோடு அத்தகைய நிகழ்ச்சிகள் அவர்களுக்கு கட்டாயமானதாகும். இலங்கை நீதிபதிகள் நிறுகத்தினால் நடாத்தப்படுகின்ற அத்தகைய பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றாமல் இருப்பதற்கு எவ்வித சலுகையும் காட்டப்படமாட்டாது. ஏனைய வகை பயிற்சி தேவையானது, நீதி சேவை ஆணைக்குழுவினால் மேலதிகப் பயிற்சிக்காக நீதிபதிகள் நிறுவகத்துக்கு,சேவையில் உள்ள ஒரு நீதித்துறை அலுவலரை சேர்த்துக் கொள்ளுமாறு மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானத்தைப் பொறுத்ததாகும்.

## பயிற்சி மூலவளங்கள் மற்றும் வசதிகள்

இந்தக் கைநூலில் அடையாளம் காணப்பட்டவாறான நீதித்துறைப் பயிற்சி பாடநெறிகள் வழங்குவதற்கு கீழ்க்குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் உட்பட நவீன பயிற்சி வசதிகள் நிறுவகத்திடம் உள்ளன.

1. நவீன கேட்போர் கூடம்;
2. Wi-Fi வசதிகளுடன் கூடிய நவின நூலகம் - திங்கள் - சனி வரைத் திறந்திருக்கும்;
3. இணையத்தளம்;
4. வீடியோ மாநாடு நடாத்துவதற்கான வசதி;
5. பிரதியெடுத்தல் மற்றும் கணினி அச்சுப்பிரதியெடத்தல் வசதி;
6. குறிப்பீட்டுக்கான சட்டப் புத்தகங்கள்;
7. பயிற்சிநெறி தொடர்பான சாதனங்கள்;
8. குறிப்பீட்டு சாதனங்கள்;
9. சட்ட அறிக்கைகள்;
10. அறிக்கையிடப்படாத தீர்ப்புக்கள்;
11. வதிவிட வசதிகள்;
12. சட்டத் தகவல்கள் உள்ளடங்கிய தரவுத் தளங்கள்.

## பாடநெறிகளின் இலக்கு மற்றும் குறிக்கோள்கள்

1. நீதித்துறைப் பதவியின் கௌரவம் மற்றும் நீதி நிருவாகத்தில் நீதிபதிகளின் வகிபாகம் என்பவற்றை விளங்கிக் கொள்ளல்;

2. பொது மக்களின் நீதித்துறை மற்றும் மேலதிக நீதித்துறைச் செயற்பாடுகளில் அவர்களின் பொது நம்பிக்கையின் பாதிப்பைக் குறைப்பதற்கு நீதிநிருவாகத்தில் நீதித்துறை அலுவலர்களுக்கான நடத்தை ஒழுக்கக் கோவையின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல்;

3. வழக்காடிகள் மற்றும் பொது மக்களின் சந்தேகங்களுக்கு அப்பால், தனிப்பட்ட அலுவல்களின் முகாமைக்கான அடிப்படை விழுமியங்களை விளங்கிக் கொள்ளல்;

4. நீதிமன்ற அலுவலர்கள், வழக்காடிகள் மற்றும் பொது மக்கள் பொன்றோருடன் நீதிமன்ற நடத்தை மற்றும் நீதிமன்ற கைவினை என்பவற்றின் சட்டவிதிகளை விளங்கிக் கொள்ளல்;

5. நீதித்துறை அலுவலர்களுக்கான ஒழுக்கக் கோவைகளை விருத்தி செய்தல் (எழுத்து மூல ஒழுக்க விதிக்கோவை அல்லது எழுத்து மூலமல்லாத சுயமாக-விதிக்கப்படுகின்ற ஒழுக்கக் கோவைகள்)

## சேவைக்கால கற்கை நெறிகளுக்கான பயிற்சி உள்ளடக்கம்

1. நீதித்துறை நடத்தை, ஒழுக்கவியல்கள் மற்றும் நடத்தை.
2. மூலாதார சட்ட அறிவு (பொருண்மைச் மற்றும் நடவடிக்கைமுறைச் சட்டம் - குற்றவியல், குடியியல், அரசியலமைப்பு, வணிகச்சட்டம்,குற்றவியல் மற்றும் குடியியல் நடைமுறை, சான்றுகள் சட்டம்).
3. விசேட சட்டங்கள் மற்றும் நிறுவனங்களுக்காக இயற்றப்பட்ட சட்டங்கள்
4. தனிப்பட்ட சட்டங்கள்
5. மனித உரிமைகள்
6. ஊழலுக்கெதிரான சட்டங்கள்
7. கணனி தொடர்பான திறன்கள் மற்றும் தகவல் தொழிநுட்பம்
8. புலமைச் சொத்து
9. நீதிமன்ற நிருவாகம் மற்றும் நீதிமன்ற முகாமை
10. வழக்கு முகாமை மற்றும் வழக்குப் பாய்ச்சல் முகாமை
11. கணக்கியல் மற்றும் நிதி
12. ஒழுக்காற்று நடைமுறை
13. இளம்பராய நீதி
14. நீதிக்கும் சட்ட உதவிக்கும் அணுகுவழி
15. சட்ட மருத்துவ விஞ்ஞானம் மற்றும் சட்ட மருத்துவம்
16. தீர்ப்பு எழுதுதல்
17. தண்டனை வழங்குகின்ற கொள்கை மற்றும் பிரயோகித்தல்
18. ஆய்வு முறைமையியல் மற்றும் இணையத்தள ஆய்வு முறைமையியல்
19. மாற்று முரண்பாட்டுத் தீர்வு
20. ஆளுமை மற்றும் திறன்கள் விருத்தி
21. சுகாதார விருத்தி மற்றும் அழுத்த முகாமை
22. நடைமுறைப்பயிற்சி - தீர்ப்பு எழுதுதல் பயிற்சி, பிரச்சினைகளைத் திட்டமிடுதல்,குற்றங்களை வரையறுத்தல், அடையாள அணிவகுப்புக்கள், மரண

விசாரணைகளை நடாத்தல், குற்ற ஒப்புதல்கள் மற்றும் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தல், விசாரணைக் குறிப்புக்களைத் தயாரித்தல்.

## உள்ளடங்குகின்ற பயிற்சி முறைகளின் வகைகள்

1. மத்தியமயப்படுத்தப்பட்ட நேருக்கு நேர் முறை;
2. பன்முகப்படுத்தப்பட்ட/மாகாண அடிப்படையில் அமைந்த நேருக்கு நேர் முறை;
3. நீதிமன்ற அடிப்படையில் அமைந்த ஆலோசனை வழங்கும் முறை;
4. நியமிக்கப்பட்ட ஆலோசகர் மூலம் (நியமிக்கப்பட்ட வளவாளர்கள்) மத்தியமயப்படுத்தப்பட்ட ஆலோசனை வழங்கும் முறை;
5. தனிப்பட்ட அலுவலர்களுக்கான மூடிய முறைமை.
6. தகவல் தொழிநுட்பம் மற்றும் இணைய அடிப்படையிலான தொலைதூரக் கற்கை முறைகள்.
7. நாளாந்தம் பணிபுரிகின்ற கருவிகள், நீதிபதிகள் கைநூல்கள் காணொளி முறையில் பதிவு செய்யப்பட்ட கல்விக் கருவிகள்.
8. பாடஅலகுகள்.
9. கற்கை நெறிப்பொருட்கள்
10. குறிப்புப் பொருட்கள்
11. ஆய்வுப் பத்திரங்கள்.
12 காணொளி கலந்துரையாடல்
13. நடைமுறை- முறைகள்-விவாதிக்கக் கூடிய நீதிமன்றங்கள்.
14. வருகைகள்
15. முன்வைப்புக்கள்
16. கட்டுரை எழுதுதல்.
17. ஆய்வுப்பணி
18. தனிப்பட்ட கற்கைப் உபகரணங்களைத் தயாரித்தல்.
19. வெளிநாட்டு பயிற்சி முறைகள்.
20. ஆலோசனை வழங்கல்.

ஆலோசனை வழங்கலில் இரு வகை நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன, பிரதம நீதிபதியினால் நீதிமன்ற அடிப்படையில் அமைந்த ஆலோசனை வழங்குகின்ற நிகழ்ச்சி மற்றும் வளவாளர்களினால் மத்தியமயப்படுத்தப்பட்ட ஆலோசனை வழங்குகின்ற நிகழ்ச்சி. ஏதேனும் உத்தியோகபூர்வ அங்கீகாரம் இல்லாமல் ஒரு தனிப்பட்ட மட்டத்தில் பயிற்சியாக இந்த நாட்டில் ஆலோசனை வழங்கல் பயன்படுத்தப்படுகின்றது என்பது பொதுவான அறிவாகும். எவ்வாறாயினும், புதிய பயிற்சிக் கைநூலானது ஒரு ஆலோசனைப் பயிற்சியை அறிமுகம் செய்கின்றது. ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அல்லது மேன்முறையீட்டு நீதிபதிகள், ஆலோசனை நீதித்துறை அலுவலர்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தொழில் நியாய சபைகளின் தலைவர்கள் போன்றவர்களிலிருந்து 2 சிறந்த வளவாளர்களினால் அத்தகைய ஆலோசனை நிகழ்ச்சி நடாத்தப்படும். ஆலோசகர்கள் பின்வரும் பணிகளைக் கையாள்வர்:

(1) குற்றவியல் சட்டம் மற்றும் சான்று - ஆரம்ப மற்றும் மேன்முறையீடுகள் - ஆலோசகர்- ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி

(2) குடியியல் சட்டம் மற்றும் தொழில் சட்டம்- ஆரம்ப மற்றும் மேன்முறையீடுகள் - 1 ஆலோசகர்-ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி

இந்த வகை பயிற்சி முறை பிரதானமாக ஏற்கனவே முன் ஆயத்தப்படுத்தப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல்கள், இணைய அடிப்படையிலான முறைகள் அத்தோடு ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட நேருக்கு நேர் நிறுவனரீதியான அமர்வுகள் என்பவற்றின் ஊடாக நடாத்தப்படும்.

## 21. இ-நூலகம்

இ-நூலகம் பின்வரும் வசதிகளைக் கொண்டது.



# 8. நிறுவகத்தின் செயலாற்றுகை

**30/2006 முகாமைத்துவ சுற்று நீருபத்தின் கீழ் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் திருத்தப்பட்ட பதவியணி தயாரிக்கப்பட்டது**




(ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமை சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது)

2. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்புத்திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் புதிய ஊழியர்கள் நிறுவகத்துக்கு நியமிக்கப்பட்டனர்.

| நியமிக்கப்பட்ட திகதி | பதவியின் பெயர் | நியமிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2014.03.10 | சிற்றூழியர் (ஒப்பந்த அடிப்படையில்) | 02 |
| 2014.07.10 | அலுவலகப் பராமரிப்பாளர் (ஒப்பந்த அடிப்படையில்) | 01 |
| 2014.10.01 | நூலகர் (நிரந்தரம்) | 01 |
| 2014.11.03 | உதவிக் கணக்காளர் (நிரந்தரம்) | 01 |

3. நூலகர், உதவிக் கணக்காளர் மற்றும் சாரதி போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்துக்கான அங்கீகாரம்முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

4. நீதிபதிகளின் பாவனைக்காக **மெனுபுத்ர சட்ட தரவுத் தளம்** கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

5. நீதிபதி A.R.B. அமரசிங்க அவர்களால் எழுதப்பட்ட நீதித்துறை ஒழுக்கவியல்கள் என்ற புத்தகம் 52 கொள்வனவு செய்யப்பட்டு நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டன.

6. நூலகத்துக்கு புதிய சட்டப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

7. இலத்திரனியல் நூலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## ஆய்வுச் செயற்பாடுகள்

**வ**

**ழக்கு முகாமைகள் மற்றும் மத்தியஸ்தம் செய்தல் மீதான நகல் பிரேரணைகள்**

1. வழக்கு முகாமைகள் மற்றும் மத்தியஸ்தம் செய்தல் மீதான குடியியல் நடவடிக்கை கோவைக்கான திருத்தங்கள் வரையப்பட்டுள்ளன. நீதித்துறை வழக்கு முகாமையை பிரதிபலிக்கச் செய்வதற்கு மற்றும் முன்-விசாரணைப்படிமுறைகள் என்பவற்றுக்காக இரண்டு படிவங்கள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆலோசனைகளை நீதி அமைச்சின் செயலாளருடன்கலந்துரையாடப்பட்டுள்ளது. (**இணைப்பு** 1)

2. இலங்கை மத்தியஸ்த சட்டவிதிகள் வரையப்பட்டுள்ளன. (**இணைப்பு** 2)

3. இலங்கை வணிக மத்தியஸ்த நிலையச் சட்டத்துக்கான திருத்தங்கள் வரையப்பட்டுள்ளன (**இணைப்பு** 3)

# 9. 01.01.2014 முதல் 31.12.2014 வரை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் செயற்பாடுகள்

## 1. சேவையில் உள்ள நீதிபதிகளுக்கான சனிக்கிழமை நிகழ்ச்சிகள்

67 மேல் நீதிமன்ற நீதிபதிகள், 216 நீதித்துறை அலுவலர்கள் மற்றும் 37 தொழில் நியாய சபைத் தலைவர்களின் பங்களிப்புடன் 2014.01.01 முதல் 2014.12.31 வரை காலத்துக்கான சனிக்கிழமை கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. 2014 இல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பிரதான செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

பின்வருமாறு 30 சனிக்கிழமை நிகழ்ச்சிகள் நீதிவான்களுக்கும் மாவட்ட நீதிபதிகளுக்கும் நடாத்தப்பட்டன.

| இல. | திகதி | பேச்சாளர் | தலைப்பு | நீதிபதிகள் |
|---|---|---|---|---|
| 1 | 2014.01.18 | Dr.B.M.S.படகொட, திறைசேரியின் பிரதிச் செயலாளர் | நிதி ஒழுங்கு விதிகள் உட்பட நிதியியல் கட்டுப்பாட்டில் திறைசேரியின் வகிபாகமும் பணிகளும் | 65 |
| 2 | 2014.01.25 | நீதிபதி ரஞ்சித் ரணராஜா, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி | தொழில் நியாய சபை வழக்குகளில் வழக்கு முகாமை மற்றும் வழக்குப்பாய்ச்சல் முகாமை | 34 |
| 3 | 2014.02.01 | கௌரவ நீதிபதி K.ஸ்ரீபவன் | மேன்முறையீட்டு நீதிமன்றம் ( மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை) சட்டவிதிகள் | 67 |
| 4 | 2014.01.08 | Dr.B.M.S.படகொட, திறைசேரியின் பிரதிச் செயலாளர் | நிதி ஒழுங்கு விதிகள் உட்பட நிதியியல் கட்டுப்பாட்டில் திறைசேரியின் வகிபாகமும் பணிகளும் | 65 |
| 5 | 2014.01.22 | திரு ஜயந்த ஜயசூரிய<br><br>மேலதிக மன்றாடியார் அதிபதி | கணினி குற்றங்களுக்கான சட்டம் | 55 |
| 6 | 2014.03.01 | பேராசிரியர் சர்யா சரன்குவிவேல் | குடும்பச்சட்டம் மற்றும் சர்வதேச தரநியமங்கள | 46 |
| 7 | 2014.03.08 | திரு ஜயந்த ஜயசூரிய<br><br>மேலதிக மன்றாடியார் அதிபதி | கணினிக் குற்றங்களுக்கான சட்டம் | 54 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 2014.03.15 | திரு A. சர்வேஸ்வரன், சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் கற்கை நெறிப் பணிப்பாளர்,தனியார் மற்றும் ஒப்பீட்டுச் சட்டத் திணைக்களம், கொழும்புப் பல்கலைக்கழகம் | தொழில் ஒப்பந்தம் மற்றும் அண்மைய அபிவிருத்திகள் | 34 |
| 9 | 2014.03.22 | பேராசிரியர் சர்யா சரன்குவிவேல் | குடும்பச்சட்டம் மற்றும் சர்வதேச தரநியமங்கள் | 45 |
| 10 | 2014.04.26 | Dr.விக்ரம வீரசூரிய | காப்புறுதிச் சட்டம் | 43 |
| 11 | 2014.05.10 | Dr.விக்ரம வீரசூரிய | காப்புறுதிச் சட்டம் | 42 |
| 12 | 2014.05.24 | கௌரவ நீதிபதி ரோஹினி மாரசிங்க | தண்டனை வழங்கல் கொள்கை | 55 |
| 13 | 2014.06.07 | கௌரவ நீதிபதி ரோஹினி மாரசிங்க | தண்டனை விதித்தல் கொள்கை | 55 |
| 14 | 2014.06.21 | Dr.D.M. கருனாரத்ன | புலமைச் சொத்து | 51 |
| 15 | 2014.07.05 | திரு A. சர்வேஸ்வரன், சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் கற்கை நெறிப் பணிப்பாளர், தனியார் மற்றும் ஒப்பீட்டுச் சட்டத் திணைக்களம், கொழும்புப் பல்கலைக்கழகம் | தொழில் நியாய மன்றங்களின் நீதியான மற்றும் சமத்துவமான நியாயாதிக்கம் | 34 |
| 16 | 2014.07.26 | கௌரவ நீதிபதி K.ஸ்ரீபவன் | மாகாண மேல் நீதிமன்றங்களின் எழுத்தாணை நியாயாதிக்கம் | 37 |
| 17 | 2014.08.02 | Dr. ருவான் இல்லேபெரும | குற்றவியல் நீதி முறைமையில் D.N.A. தொழிநுட்பம் | 58 |
| 18 | 2014.09.06 | Dr. அஜித் தென்னகோன் | குற்றவியல் நீதி முறைமையில் நீதித்துறை மருத்துவ அதிகாரியின் வகிபாகம் | 58 |
| 19 | 2014.09.13 | கௌரவ நீதிபதி K.ஸ்ரீபவன் | மாகாண மேல் நீதிமன்றங்களின் எழுத்தாணை நியாயாதிக்கம் | 31 |
| 20 | 2014.09.20 | Dr. அஜித் தென்னகோன் | குற்றவியல் நீதி முறைமையில் நீதித்துறை மருத்துவ அதிகாரியின் | 60 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வகிபாகம் | |
| 21 | 2014.09.27 | திரு J.M.R. ஜயசுந்தர | வினாத் தொடுக்கப்பட்ட ஆவணங்களைப் பரீட்சித்தல் | 44 |
| 22 | 2014.10.04 | திரு J.M.R. ஜயசுந்தர | வினாத் தொடுக்கப்பட்ட ஆவணங்களைப் பரீட்சித்தல் | 43 |
| 23 | 2014.10.11 | திரு உதித அகல்ஹேவா, ஜனாதினதி சட்டத்தரணி | வெளி மூலங்களைப் பயன்படுத்தல் | 36 |
| 24 | 2014.10.18 | கௌரவ நீதிபதி ரோஹினி மாரசிங்க | தண்டனை விதிப்புக்கானவழிகாட்டல்கள் | 70 |
| 25 | 2014.10.25 | கௌரவ நீதிபதி ரஞ்சித் சில்வா | மாவட்ட நீதிமன்றங்களில் பின் விளக்கப் படிமுறை | 46 |
| 26 | 2014.11.01 | திரு சரத் ஜயமான்னே, பிரதி மன்றாடியார் அதிபதி | துன்பங்களுக்கு இலக்கானவர்கள் மற்றும் சாட்சிகள் போன்றோரின் பாதுகாப்பு | 60 |
| 27 | 20014.11.15 | கௌரவ நீதிபதி பிரியசாத் டெப் | மேல் நீதி மன்றத்தில் சான்றை மதிப்பீடு செய்தல் மற்றும் நீதிபதியின் வகிபாகம் | 70 |
| 28 | 2014.11.22 | திரு சரத் ஜயமான்னே, பிரதி மன்றாடியார் அதிபதி | துன்பங்களுக்கு இலக்கானவர்கள் மற்றும் சாட்சிகள் போன்றோரின் பாதுகாப்பு | 61 |
| 29 | 2014.11.29 | கௌரவ நீதிபதி P.A. ரத்நாயக்க | கடற்துறை நியாயாதிக்கம் | 67 |
| 30 | 2014.12.13 | கௌரவ நீதிபதி ரஞ்சித் சில்வா | மாவட்ட நீதிமன்றங்களில் பின் விளக்கப் படிமுறை | 50 |




(சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நடாத்தப்பட்ட இளம்பராய நீதி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி)

## 2. செயலமர்வுகள்

1. 2014. ஜனவரி 31ஆம் திகதி இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் 51 நீதித்துறை அலுவலர்களுக்காக **"நிதிமுறைமை இஸ்திரத்தன்மை; இலங்கைமத்திய வங்கியின் , ஒழுங்குறுத்துகை மற்றும் மேற்பார்வைப் பணிகள்"**என்ற தலைப்பில் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் திரு அஜித் நிவாட் கப்ரால் அவர்களால் விரிவுரை நடாத்தப்பட்டது.

2. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் 41 நீதித்துறை அலுவலர்களுக்காக**"நீதி வழங்கள் முறைமையில் தாமதங்கள் மற்றும் பரிகாரங்கள்"** என்ற தலைப்பில் நீதிபதி சோஸா ஞாபகார்த்த சொற்பொழிவு இடம் பெற்றது.




(ஜனாதிபதி சட்டத்தரணி திரு பாய்ஸ் முஸ்தபா அவர்களினால் நீதிபதி சோஸா ஞாபகர்த்த சொற்பொழிவு நடாத்தப்படுகின்றது)

## 3. வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் வெளிநாட்டு வளவாளர்களின் விசேட விரிவுரைகள்




(வழக்கு முகாமை மற்றும் மத்ததியஸ்தம் என்ற தலைப்பில் பயிற்சி நிகழ்ச்சியை நீதிபதி ரொஜர் ஹன்ட் நடாத்துகின்றார்)

1. 2014 ஜுலை 24 மற்றும் 25ஆம் திகதிகளில் ஹிக்கடுவ லோங் பிச் ஹொட்டலில் தென்மாகாண நீதிபதிகளுக்காக**"வழக்கு முகாமை மற்றும் மத்தியஸ்தம் வகித்தல்"** என்ற தலைப்பின் கீழ் ஐக்கிய அமெரிக்க நெவடா மாவட்ட சிரேஷ்ட நீதிபதி **ரொஜர் ஹன்ட்** அவர்களால் பயிற்சி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.

2. பின்வரும் திகதிகளில் ஐக்கிய அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதியும் பொதுப்பணியிலிருந்து மாண்புடன் விடுவிக்கப்பட்ட பிரதம நீதிபதியுமான**கௌரவ நீதிபதி ஜோன் க்லிப்பர்ட் வெல்லஸ்** அவர்களால் **"சமகாலங்களில் வழக்கு முகாமை மற்றும் நீதித்துறை நடத்தை என்பவற்றில் நவீன போக்குகள்"**என்ற தலைப்பில் விசேட விரிவுரை நடாத்தப்பட்டது.

| திகதி | பிரதேசம்/ மாவட்டம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2014.01.27 | கொழும்பு | 51 |
| 2014.01.28 | கண்டி, மாத்தளை, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் நுவரெலியா | 34 |
| 2014.01.29 | கொழும்பு, காலி, மாத்தறை, கம்பஹா, மற்றும் களுத்துறை | 60 |

3. 2014 ஆகஸ்ட்4 மற்றும் 5ஆம் திகதிகளில் யாழ்ப்பானம் தல்செவன ஹொலிடே ரிஸோர்ட் இல் வடமாகாண நீதிபதிகளுக்காக "**வழக்கு முகாமை மற்றும் மத்தியஸ்தம் செய்தல்**"என்ற தலைப்பில் செயலமர்வு இடம்பெற்றது. இதில் ஐக்கிய அமெரிக்க நெவடா மாவட்ட சிரேஷ்ட நீதிபதி **ரொஜர் ஹன்ட்** அவர்கள் விரிவுரை நடாத்தினார்.

4. 2014 ஆகஸ்ட் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் கிழக்கு மாகாண நீதிபதிகளுக்காக பாசிக்குடா அமாயா பீச் ஹொலிடே ரிஸோர்ட் இல்"**வழக்கு முகாமை மற்றும் மத்தியஸ்தம் செய்தல்**"என்ற தலைப்பில் செயலமர்வு இடம்பெற்றது. இதில் ஐக்கிய அமெரிக்க நெவடா மாவட்ட சிரேஷ்ட நீதிபதி **ரொஜர் ஹன்ட்** அவர்கள் விரிவுரை நடாத்தினார்.

5. 2014 ஜுலை 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் அனுராதரபுரம் ஹெரிடேஜ் ஹோட்டலில் வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள நீதிபதிகளுக்காக "**வழக்கு முகாமை மற்றும் மத்தியஸ்தம் செய்தல்**"என்ற தலைப்பில் செயலமர்வு இடம்பெற்றது. இதில் ஐக்கிய அமெரிக்க நெவடா மாவட்ட சிரேஷ்ட நீதிபதி **ரொஜர் ஹன்ட்** அவர்கள் விரிவுரை நடாத்தினார்.

6. 2014 ஜுலை 23 ஆம் திகதி கண்டி நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் நிதித்துறை அலுவலர்களுக்காக"**நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் போன்றோரின் வகிபாகம்**"என்ற தலைப்பில் ஒரு விரிவுரை ஐக்கிய அமெரிக்க நெவடா மாவட்ட சிரேஷ்ட நீதிபதி **ரொஜர் ஹன்ட்** அவர்களால் நடாத்தப்பட்டது.



(இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் நீதிபதி க்லிப்பர்ட் வெல்லஸ் அவர்களின் விரிவுரை)

## 4. வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள்

1. 2014 ஜனவரி 19 முதல் 25 வரை “நீதித்துறை ஒழுக்கவியல்கள் மற்றும் செயற்திறனான நீதிமன்றங்கள் மற்றும் வழக்கு முகாமை” என்ற தலைப்பில் மலேசியாவில் உள்ள நீதித்துறை மற்றும் சட்டப் பயிற்சி நிறுவனத்தினால் (ILKAP) 40 நீதிபதிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

2. 2014 ஏப்ரல் 07 முதல் 2014 ஏப்ரல் 11 ஆம் திகதி வரை சிங்கப்பூரில் சிவில் சேவைக் கல்லூரி மற்றும் துணை நீதிமன்றங்கள் என்ற அமைப்பில் நீதித்துறை மறுசீரமைப்பு மற்றும் சிறப்பு என்ற தலைப்பிலான கற்கைப் பயணம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியை சிங்கப்பூர் அரச நீதிமன்றங்கள் மற்றும் சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரி ஆகியவை இணைந்து ஒழுங்கு செய்திருந்தன. கற்கை நெறிக்கு 15 மேல் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட 24 நீதித்துறை அலுவலர்கள் பங்குகொண்டதுடன் அவர்களுக்கு நல்லாட்சியின் மூலதாரங்கள் மற்றும் அவைகள் எவ்வாறு கொள்கைகளாக மொழி பெயர்க்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது என்பதை விளங்கிக் கொள்வதற்கு ஒரு மேலோட்டமான கருத்து வழங்கப்பட்டது.

3. “நீதித்துறை ஒழுக்கவியல்கள் மற்றும் செயற்திறனான நீதிமன்றங்கள் மற்றும் வழக்கு முகாமை” என்ற தலைப்பில் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட பாடநெறியை2014 ஏப்ரல் 7ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை மலேசியாவில் உள்ள

நீதித்துறை மற்றும் சட்டப் பயிற்சி நிறுவனத்தினால் (ILKAP) நடாத்தப்பட்டது. அதில் பின்வரும் தலைப்புக்கள் கலந்துரையாடப்பட்டன.

- 2009 நீதிபதிகள் ஒழுக்கவியல் கோவை
- நீதித்துறை அலுவலர்களின் ஒழுக்கவியல் கோவை
- மலேசிய நீதித்துறையில் மனிதவள முகாமை
- நீதித்துறை மெய்நிலைக்கூறு
- தீர்ப்பு எழுதுதல்
- ஆவணங்களை நிரப்புதல்
- வழக்குகளை ஒழுங்குபடுத்துதலும் சாட்டுதல் செய்தலும்
- மேன்முறையிட்டு நீதிமன்றில் மற்றும் விளக்க நீதிமன்றில் நீதிமன்ற பஞ்சாங்கத்தை முகாமை செய்தல்.

4. இந்தியாவில் உள்ள தில்லி நீதித்துறைக் கல்லூரியில் 2014 ஏப்ரல் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை நீதிமன்ற முகாமை, வழக்கு முகாமை, குடியியல் சட்ட மறுசீராக்கல்கள் மற்றும் குடும்பச்சட்ட மறுசீராக்கல்கள் போன்ற தலைப்புக்களில் இலங்கை நீதிபதிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.நீதிபதிகள் சட்டத்தில் பின்வரும் பிரிவுகளில் கூடுதலான அறிவைப் பெற்றுக் கொண்டனர்.

- குடும்பப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு விசேடமாகத் ஸ்தாபிக்கின்ற குடும்ப நீதிமன்றங்கள்.
- நீதிமன்ற வளவுக்குள் மத்தியஸ்த நிலையம்
- நீதிமன்ற செயன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு நீதிபதி மைய முறைமையை பயன்படுத்தல்
- நீதிபதிகளுக்கான சட்ட ஆராய்ச்சி அலுவலர்கள்.



(இந்தியாவின் நியூடெல்லியில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி)

## 5. நீதிமன்றப் பதிவாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி

2014 ஜூலை 19 ஆம் திகதி ''வழக்குப்பாய்ச்சல் முகாமை மற்றும் நீதிமன்ற நிருவாகம்'' என்ற தலைப்பில் நீதிமன்ற நீதிபதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

## 10. சர்வதேச ஒத்துழைப்பு

2014 ஆம் ஆண்டு நொவெம்பரில் அமைப்பின் நிறைவேற்றுக் குழு தீர்மானத்தின் பயனால் நீதித்துறைப் பயிற்சிக்கான சர்வதேச அமைப்பின் (IOJT) அங்கத்துவத்தை இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பெற்றுக் கொண்டது.

ஐரோப்பிய யூனியனின் ஆதரவுடன் கணினிக் குற்றங்கள் மற்றும் இலத்திரனியல் சான்று என்ற தலைப்பில் பல பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு இலங்கை நீதிபதிகள் நிறுவகம் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது என்பதுடன் பூர்வாங்க கலந்துரையாடல் 2014 இல் ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகளுடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் இடம் பெற்றது.



(இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகள்)

## 11. எதிர்கால கற்கைநெறிகள்

- வழக்கு முகாமை மற்றும் மத்தியஸ்தம் செய்தல்
- மொழிப்பயிற்சி
- மரபணுச் (DNA) சான்று
- சட்டம் சார்ந்த விஞ்ஞானம்
- நாடுகடத்தப்பட்டவரை வேற்றரசுக்கு ஒப்படைத்தல் சட்டம்
- மறுத்தல் மற்றும் மத்தியஸ்தம்
- கடற்துறைச் சட்டம்
- மேன்முறையீட்டு நீதிமன்ற சட்டவிதிகள் (மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை)
- தீர்ப்பு எழுதுதல்
- தண்டனைத்தீர்ப்பு வழிகாட்டல்கள்

## 12. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற கணக்கீட்டுக் கோட்பாட்டுக்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்றன என்பதோடு கணக்கீட்டுத் தரம் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் கணக்காளர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 13. நன்றிகள்

பின்வருவோர்களினால் வழங்கப்பட்ட உதவி மற்றும் ஒத்துழைப்புக்காக இலங்கை நீதிபதிகள் நிறுவகம் அவர்களைப் பராட்டுகின்றது,

1. நீதியமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்கள்
2. நீதிச் சேவை ஆணைக்குழு
3. திறைசேரியின் செயலாளர் மற்றும் திறைசேரியின் ஊழியர்கள்
4. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திக் கருத்திட்டம் (UNDP)
5. கணக்காய்வு தலைமை அதிபதி மற்றும் அவரின் ஊழியர்கள்
6. கண்காணிப்பாளர் மற்றும் அவரின் ஊழியர்கள்
7. உயர் நீதிமன்றத்தின் பதிவாளர்
8. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவாளர்
9. உயர் நீதிமன்றத்தின் மார்ஷல்

ருவான் பர்னாந்து,
மேல்நீதிமன்ற நீதிபதி மற்றும் பணிப்பாளர்,
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்.

# 14. 2014 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதியியல் நிலைமையின் கூற்று

லங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2014.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை

| | குறிப்புக்கள் | | 2014 | 2013 |
|---|---|---|---|---|
| | | ரூ.சதம் | ரூ.சதம் | ரூ.சதம் |
| **<u>சொத்துக்கள்</u>** | | | | |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 1 | | 5,478,220.68 | 6,047,338.40 |
| **<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>** | | | | |
| | | | | 8,000.00 |
| இருப்பு (அலுவலக காகிதாகிகள்) | | 66,956.40 | | 247,300.99 |
| சேமிப்புக் கணக்கு 2014.12.31 | | 257,376.32 | | |
| நடைமுறை கணக்கு 2014.12.31 | | 13,889,048.39 | 14,213,381.11 | 156,217.35 |
| | | | **19,691,601.79** | **6,458,856.74** |
| **<u>நிதிப்படுத்தல்</u>** | | | | |
| திரண்ட நிதி | 2 | 6,315,212.63 | | 4,302,360.93 |
| சேர்க்க/கழிக்க:மேலதிகம்/(குறைவு) | | 12,827,455.45 | 19,142,668.08 | 2,131,220.81 |
| | | | | 6,433,581.74 |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>** | | | | |
| கணக்காய்வுக் கட்டண ஏற்பாடு | | 261,728.00 | | 24,800.00 |
| முத்திரைக் கட்டண ஏற்பாடு | 3 | 475.00 | | 475.00 |
| சம்பவித்த செலவினங்கள் | 4 | 143,926.96 | | - |
| ஏனைய செலுத்தவேண்டியவைகள் | | 142,803.75 | 548,933.71 | 25,275.00 |
| | | | **19,691,601.79** | **6,458,856.74** |

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துக்கு ஏற்ப இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

மேலுள்ள நிதிக்கூற்றுக்கள் 2014 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு உண்மையானதும் நியாயமானதுமான நோக்கைத் தருகின்றது என நாம் சான்றுப்படுத்துகின்றோம் என்பதோடு 2014 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக அது மிகை நிலுவையைக் காட்டுகின்றது.

................................ ........................................

தயாரித்தவர்
கே.ஏ லக்ஷிகா சதுராணி
உதவிக் கணக்காளர்
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

கௌரவ எம்.ஆர்.சீ.பர்னாந்து
பணிப்பாளர்
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

# 15. 2014 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதியியல் நிலைமையின் கூற்று

| | குறிப்பு | 2014 | | 2013 |
|---|---|---|---|---|
| | | ரூ.சதம் | ரூ.சதம் | ரூ.சதம் |
| **வருமானம்** | | | | |
| அமைச்சின் முற்பணத்தொகை | 5 | | 25,247,031.84 | 10,303,501.87 |
| சேமிப்புக் கணக்கிலிருந்து வட்டி வருமானம் | | | 10,075.33 | 11,470.32 |
| பிரதியெடுத்தல் கட்டண வருமானம் | 6 | | 17,184.00 | 8,592.00 |
| உயர் நீதிமன்றத்திலிருந்து குடியிருப்புக்கான | 7 | | 34,000.00 | 4,000.00 |
| கட்டணங்கள் | | | - | 2,000.00 |
| ஏனைய நிறுவனங்களிலிருந்து கட்டணங்கள் | 8 | | 713,548.01 | - |
| **மொத்த வருமானம்** | | | **26,021,839.18** | **10,329.564.19** |
| **கழிக்க – செலவினம்** | | | | |
| சம்பளம் மற்றும் கூலிகள் | | (1,617,896.50) | | (511,866.57) |
| ஊ.சே.நி. செலவினங்கள் | | (97,695.12) | | - |
| ஊ.ந.நி. செலவினங்கள் | | (24,423.78) | | - |
| ஊ.ந.நி. மிகைவிதிப்பு செலவினங்கள் | | (155.63) | | - |
| மேலதிக நேரக் கொடுப்பனவுகள் | | (260,611.69) | | (70,723.82) |
| சீருடைப் படிகள் | | (4,000.00) | | (4,000.00) |
| கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி செலவினங்கள் | | (6,174,491.41) | | (3,133,800.00) |
| கருத்தரங்குகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளுக்கு சிற்றுண்டி | | (631,437.00) | | - |
| பத்திரிகைகள் விநியோகம் | | (14,460.00) | | - |
| தபால் கட்டணங்கள் | | (25,473.00) | | - |
| அலுவலக காகிதாகிகள் செலவினங்கள் | | (181,730.10) | | (468,890.58) |
| ஓய்வுதிய பணிக்கொடை | | - | | (167,800.00) |
| பிரயாணச் செலவினங்கள் | | (6,900.00) | | (2,240.00) |
| எரிபொருள் | | (212,471.00) | | (153,915.40) |
| ஏனைய சேவைகளும் விநியோகங்களும் | | (726,826.76) | | (126,361.24) |
| வாகனப்பராமரிப்பு | | - | | (53,083.25) |
| பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு | | (421,921.78) | | (151,297.38) |
| தொலைபேசி மற்றும் இணையக் கட்டணங்கள் | | (299,008.95) | | (495,692.68) |
| துப்பரவாக்கல் கட்டணங்கள் | | (403,756.00) | | (2,299,527.00) |
| வங்கிக் கட்டணம் | | (5,250.00) | | (3,000.00) |
| பெறுமானத் தேய்வு | | (1,279,081.55) | | (556,144.96) |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | (236,928.00) | | - |
| மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் | | (529,865.46) | | - |
| **மொத்தச் செலவினங்கள்** | | | **(13,194,383.73)** | **(8,198,343.38)** |
| திரட்டிய நிதிக்கான மேலதிகம்/(குறைவு) | | | 12,827,455.45 | 2,131,220.81 |

# 16. 2014 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் நிதிப்பாய்ச்சல் கூற்று

| | குறிப்புக்கள் | 2014 | | 2013 |
|---|---|---|---|---|
| | | ரூபாய் சதம் | ரூபாய் சதம் | ரூபாய் சதம் |
| **<u>செயற்பாட்டு நடவடிக்கைகள்</u>** | | | | |
| **<u>பெறுகைகள்</u>** | | | | |
| அமைச்சின் உதவு தொகைகள் | | 25,247,031.84 | | 10,303,501.87 |
| சேமிப்புக் கணக்கிலிருந்து வட்டி வருமானம் | | 10,075.33 | | 11,470.32 |
| உயர் நீதிமன்றத்திலிருந்து திருப்பிச்செலுத்தப்பட்டது | | - | | 2,000.00 |
| நிழற் பிரதியெடுத்தல் வருமானம் | | 17,184.00 | | 8,592.00 |
| தங்குமிட வசதிகள் கட்டணம் | | 34,000.00 | | 4,000.00 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிதிப்பாய்ச்சல்கள் | | | 25,308,291.17 | 10,329,564.19 |
| **<u>கொடுப்பனவுகள்</u>** | | | | |
| கருத்தரங்கு மற்றும் பயிற்சி செலவினங்கள் | | (6,174,491.41) | | (3,133,800.00) |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 9 | (1,969,553.26) | | (587,590.39) |
| விநியோகங்கள் | 10 | (1,886,754.26) | | (3,031,694.22) |
| ஏனைய கொடுப்பனவுகள் | 11 | (1,138,828.86) | | (772,513.31) |
| முத்திரைத் தீர்வைக்கான ஏற்பாடு | | | | 475.00 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு வெளிப்பாய்ச்சல் | | | (11,169,627.79) | (7,525,122.92) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | | **14,138,663.38** | **2,804,441.27** |
| **<u>முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்கள்</u>** | | | | |
| நிலையான சொத்துக்கள் கொள்வனவு | 12 | (395,757.01) | | (2,636,753.60) |
| வட்டி வருமானம் மீள் முதலீடு | | (10,075.33) | | (11,470.32) |
| **<u>முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்கள்</u>** | | | **(405,832.34)** | **(2,648,223.92)** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | | 13,732,831.04 | 156,217.35 |
| வருட ஆரம்பத்தில் காசு/காசுக்குச் சமமானவை | | | 156,217.35 | - |
| **வருட இறுதியில் காசு/காசுக்குச் சமமானவை** | | | **13,889,048.39** | **156,217.35** |

## 17. இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்களில் மாற்றத்துக்கான கூற்று

| | பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம் | ஏனைய ஒதுக்கங்கள் | திரண்ட மிகை /(குறைவு) | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|---|
| 2014.01.01 இல் இருந்தவாறான நிலுவை | - | - | 6,315,212.63 | 6,315,212.63 |
| குறிப்பிட்ட வருடத்துக்கு கிடைக்கப்பெற்ற மூலதன உதவுதொகை | - | - | - | - |
| குறிப்பிட்ட வருடத்தில் மிகை /(குறைவு) | - | - | 12,827,455.45 | 12,827,455.45 |
| **2014.12.31 இல் உள்ளவாறான நிலுவை** | **-** | **-** | **19,142,668.08** | **19,142,668.08** |

## 18. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. } JP/C/SLII/1/14/03 | ඔබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 14 January 2016 |

Secretary,

Sri Lanka Judges' Institute

**Report of the Auditor General on the Financial Statements of the Sri Lanka Judges' Institute for the year ended 31 December 2014 in terms of Section 14(2)(C) of the Finance Act, No. of 1971**

---

Reference to my letter of even number dated 18 September 2015 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

H.M.Gamini Wijesinghe

Auditor General

Copies : 1. Secretary , Ministry of Justice

2. Secretary , Ministry of Finance

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஜேபி/சீ/எஸ்எல்ஜேஜ/1/14/03 ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2015 செப்தெம்பர் 18

பணிப்பாளர்,
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

**இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2015 மார்ச் 17 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்) இணங்காமை

**எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 1 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** - செலவினத்தின் தன்மை அல்லது நிறுவனத்தில் அவற்றின் தொழிற்பாடு என்பவற்றில் எது நம்பகரமாகவும் மிகவும் பொருத்தமானதாகவும் தகவல்களை வழங்குமோ அதன் அடிப்படையிலமைந்த வகைப்படுத்தலைப் பயன்படுத்தி செலவினங்களின் பகுப்பாய்வொன்றை நிதிச் செயலாற்றல் கூற்றின் முகப்பில் அல்லது குறிப்புக்களில் நிறுவனமொன்று சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும், நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள செலவினங்கள் மேற்படி தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் செலவினங்களை பதிவு செய்வதற்காக நிலையானதோர் கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஒவ்வொரு ஆண்டிற்குமான செலவினங்களை ஒப்பீடு செய்து அவற்றின் மீது கருத்துத் தெரிவிக்க முடியாதிருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வரிசை அமைச்சிலிருந்து கிடைத்திருந்த ரூபா 7 மில்லியன் தொகையான மூலதன மானியம் தவறுதலாக மீண்டெழும் வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான மிகையும் 2014

திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய நிதியமும் அத்தொகையால் முறையே அதிகரித்தும் குறைத்தும் கூறப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய மூன்று ஆண்டுகளிற்குரிய ரூபா 176,928 தொகையான கணக்காய்வுக் கட்டணம் தவறுதலாக மீளாய்வாண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை ஒத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/நூலக/1 ஆம் இலக்க தேசிய நூலகங்கள் மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபையின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் படி, நூலகப் புத்தகங்கள் தொடர்பான வருடாந்த மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,131,221 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 12,827,455 மிகையினை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 10,696,234 முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 15,692,275 ஆல் அதிகரித்திருந்தமையே நிதி விளைவுகளிலான இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளைக் குறிப்பிட்டு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் நிறுவகத்தின் செயலாற்றலை ஒப்பீடு செய்ய முடியவில்லை.

**4.2 நிதி முகாமைத்துவம்**

நிறுவகத்தின் நடவடிக்கைகளிற்குப் பயன்படுத்தப்படாது ரூபா 3 மில்லியனிலிருந்து ரூபா 14 மில்லியன் வரையான தொகை மீளாய்வாண்டின் கடந்த 11 மாதங்களாக நிறுவகத்தின் வங்கிக் கணக்கில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனைக் காட்டுகின்றது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) திட்டமிடல்
(ஈ) நிதி முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

## இணைப்பு 1 – குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைக்கான நகல் திருத்தங்கள்

# வழக்கு முகாமை மீதான குடியியல் நடவடிக்கைமுறைச்சட்டக் கோவைக்கான இறுதி நகல் திருத்தங்கள்

### டிசம்பர் 2014

**பிரதான சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவுக்கான திருத்தம்**

**(அமைச்சின் முன்மொழிவுகள்)**

1. பிரதான சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவு 73(1) என மீள் இலக்கமிடுவதன் மூலமும் மற்றும் பின்வருமாறு அதற்கு உடனடுத்ததாக ஒரு புதிய பிரிவை சேர்த்துக் கொள்வதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:

**மறுமொழி**

1.1 எதிராளிக்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அழைப்பாணையின் பிரதியை வழக்காளிக்கு அல்லது வழக்காளியின் சட்டத்தரணிக்கு அனுப்பியதற்கான ஒரு சான்றுடன், அவர் எழுத்து மூல மறுமொழியை பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஆயினும், எவ்வாறாயினும், 30 நாட்களுக்குள் எழுத்து மூல மறுமொழியை எதிராளி சமர்ப்பிக்கத் தவறுமிடத்து, மற்றத்திறத்தவர்களுக்கு அறிவித்தல் வழங்கி நீதிமன்றத்தில் எழுத்து மூலமாக கோவைப்படுத்தப்படுகின்ற ஒரு நகர்வுப்பத்திரத்தை அல்லது எழுத்து மூலம் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, நீதிமன்றத்தினால் குறிப்பிடப்படுகின்றவாறு, அத்தகைய தினம் ஒரு அழைப்பாணை திருப்பி அனுப்பும் தினமாக இருந்தால் அத்தகைய மற்ற தினத்தில் அதனை கோப்பிடுவதற்கு, வாய்மொழியாக அவர் அனுமதிக்கப்படலாம், ஆனால் அழைப்பாணை திருப்பி அனுப்பும் தினத்திலிருந்து 30 நாட்களுக்குப் பிந்தாமல் இருக்க வேண்டும்.

**பிரதான சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவின் திருத்தம்**

2. பிரதான சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவுக்கு பின்வருமாறு ஒரு புதிய உப பிரிவு சேர்க்கப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது:

**நீதிமன்ற ஆணைகளை சேர்ப்பிப்பதற்கான முகவரி**

(அ) நீதிமன்றத்தின் ஆணைகளை சேர்ப்பிப்பதற்காக எதிராளியின் அல்லது (அவர் அத்தகைய சட்டவுரைஞரினால் பிரதிநிதித்துவம் செய்வாராயின்) அவரின் சட்டவுரைஞரின் முகவரி தொடர்பில்,ஒரு எதிராளியினால் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மறுமொழியையும் கோவைப்படுத்துகின்ற போது, எதிராளியினால் அல்லது அவரது சட்டவுரைஞரினால் கையொப்பமிடப்பட்ட ஒரு கூற்றினால் இணைக்கப்பட வேண்டும்;

(ஆ) எதிராளி தனிப்பட்ட முறையில் தோன்றுவாராயின், நீதிமன்றத்தில் ஒரு கூற்றை மேற்கொள்வதன் மூலம் காலத்துக்குக் காலம் அத்தகைய முகவரியை ஏதேனும் ஒரு புதிய முகவரியுடன் மாற்றப்படலாம்;

(இ) மேலே (அ) உப பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கூற்றில் பூர்த்தி செய்யப்படுகின்ற முகவரியானது,எதிராளியின் பதிவு "செய்யப்பட்ட முகவரி" என அழைக்கப்படும்

என்பதோடுமேலே சொல்லப்பட்டவாறு உரிய முறையில் சொல்லப்பட்ட முகவரி மாற்றப்படும்வரை,வழக்கின் சகல ஆணைகளை சேர்ப்பிப்பதற்கான நோக்கத்துக்காக அல்லது அந்த வழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளையிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் முறையீடு மற்றும் அதனை நிறைவேற்றும் நோக்கத்துக்காக,அத்தகைய திறத்தவரின் முகவரியாகக் கருதப்படும், என்பதோடுஅந்த வழக்கெழு காரணம் அல்லது விடயத்தின் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் வரைக்கும்மேலே சொல்லப்பட்டவாறு அமுலில் இருக்க வேண்டும்.

(ஈ) ஏனைய எழுத்து மூல சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற ஏற்பாடுகளுக்கு அமைய,அத்தகைய திறத்தவர் சகல முறைகளிலும் அவ்வேளை அந்த முகவரியில் வசித்தாலும்,ஏதேனும் நீதிமன்ற ஆணையின் சேர்ப்பிப்பு எதிராளியின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கே சேர்ப்பிக்கப்படும்.

(உ) ஏதேனும் காரணத்துக்காக ஏதேனும் வேறு முகவரியில் நீதிமன்றத்தின் ஆணையை சேர்ப்பித்தல் பொருத்தமானது என நீதிமன்றம் தீர்மானித்தால் அவ்வாறு சமர்ப்பிப்பதிலிருந்து இந்த உப பிரிவில் ஏதும் நிதிமன்றத்தை தடை செய்யமாட்டாது.

## அத்தியாயம் X

### பதிலுரை மற்றும் மேலதிக வழக்குரைப்புக்கள்

### பிரதான சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவுக்கான திருத்தம்

3. பிரதான சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு,அதற்காக பின்வரும் புதிய பிரிவு பதிலீடு செய்யப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது:

மீள் விண்ணப்பிப்பதில் எதிராளி ஒருவரினால் ஒரு வழக்கில் உரிமைக்கோரிக்கை இருந்தாலேதவிர, எதிராளிகள் மீது அழைப்பாணையை சேர்ப்பிப்பிக்கப்பட்ட தினதிலிருந்து 30நாட்களுக்குள் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் கௌரவ நீதி மன்றத்தின் பதிவாளர் அலுவலகத்தில் பதிலை சமர்ப்பிப்பதன் விளைவாக விசேட நகர்த்தல் பத்திரம் ஒன்றை கோவையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாயின் அல்லது கௌரவ நீதமன்றத்தினால் பொருத்தமானது எனக் கருதுகின்ற வழக்குச் செலவு தொடர்பில் அத்தகைய நிபந்தனைகள் மீது அழைப்பாணையை திருப்பி அனுப்புகின்ற தினத்துக்கு பதிலை கோவைப்படுத்துகின்ற தினம் வரை நீதிமன்றத்தின் கட்டளை ஏதும் இருந்தாலே அல்லாது பதிலளிப்புக்குப் பின்னர் வழக்குறைப்புக்கு கோவையிடப்படக்கூடாது.

ஆயினும், எவ்வாறாயினும், நீதிமன்றத்தில் பதிலுரைக்கப்பட வேண்டுமென அனுமதிக்கின்ற அத்தகைய கட்டளைத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய பதிலுரை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அத்தகைய தினமானது வழக்கு முகாமை கூட்டத்தை நடாத்துவதற்காக முதலாவது நியமிக்கப்படுகின்ற தினத்துக்கு முன்னராக இருக்க வேண்டும்.

4. பிரதான சட்டவாக்கத்தின் Xஆம் அத்தியாயத்துக்கு உடனடுத்தாக பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்செலுத்தப்படுகின்றது என்பதோடு அத்தகைய சட்டத்தின் Xஅ பிரிவு என பயனுறுப் பெற்றதாக இருக்கும்.

### முன்- விளக்கப்படிமுறைகளுக்கான நீதிமுறை வழக்கு முகாமையும் மற்றும் கூட்டங்களை ஒழுங்கு செய்தலும்.

79அ (1). எதிராளியின் மறுமொழியினைக் கோவை செய்வதற்காக நியமிக்கப்பட்ட தினத்தில் அல்லது பதிலுரைக்கு அனுமதி வழங்குதல் அல்லது அனுமதிக்கப்படாமல் இருக்குமிடத்து,**கட்டளை வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள்** ஒரு வழக்கு முகாமை மற்றும் கூட்டத்தை ஒழுங்கு செய்தல் என்பவற்றுக்காக திகதியொன்றை நியமிக்கின்ற ஒரு கட்டளைப் படிவத்தை (படிவம்

X1 இல்) அந்தக் **கட்டளை வெளியீட்டின் 28 நாட்களுக்குள்** ஒரு கூட்டு அல்லது தனியான முன்மொழியப்படுகின்ற வழக்கு முகாமைத் திட்டத்தை கலந்துரையாடி எழுத்து மூலம் தயாரித்து நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தில் கோவையிடுவதற்கு வழக்குரைஞருக்கு கட்டளையிடுவதன் மூலம் நீதிமன்றம் வெளியிட வேண்டும். அதில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

(அ) வழக்கு தொடர்பான ஒரு சுருக்கமான விளக்கம்;

(ஆ) பிணக்கில் இல்லாத நிகழ்வுகள் அல்லது சட்டம்;

(இ) பிணக்கில் உள்ள நிகழ்வுகள் அல்லது சட்டம்;

(ஈ) நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கான அடிப்படை;

(உ) வழக்குரைப்புக்கள் அல்லது திறத்தவர்களின் சேர்ப்பவர் அல்லது வழக்கெழு காரணங்களுக்கு எவையேனும் எதிர்பார்க்கப்படுகின்ற திருத்தங்கள் உள்ளனவா?

(ஊ) கண்டுபிடிப்பு, வினாக்கள்,சோதனைகள், ஆவணங்களின் உண்மைத்தன்மையை அனுமதித்தல்,காண்பிப்புப் பொருட்கள் மற்றும் ஆவணங்களை சோதித்தல் மற்றும் நகர்த்தல் பத்திரங்கள்/விண்ணப்பங்கள் என்பவற்றின் பிரேரிக்கப்பட்ட அட்டவணை;

(எ) ஆணைக்குழுக்களுக்காக அல்லது வல்லுனர்களுக்காக எதிர்பார்க்கப்படுகின்ற தேவைப்பாடு;

(ஏ) தீர்ப்பனவுக்கான ஒரு வாய்ப்பு உள்ளதா, திறத்தவர்களினால்தீர்ப்பனவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா? அத்தோடு எந்த வகையான தீர்ப்பனவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

(ஐ) முன் விளக்க கூட்டங்கள் மற்றும் விளக்கம் என்பவற்றுக்காக முன்மொழியப்பட்ட திகதிகளின் ஒரு இணைந்த கூற்று.

### வழக்கு முகாமை கூட்டத்தில் வழக்குக் கேட்டல்

79அ (2). வழக்கு முகாமைக் கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட தினத்தில், நீதிமன்றம் சட்டவுரைஞரின் மற்றும்/அல்லது திறத்தவர்களின் ஒத்துழைப்புடன் முன் விளக்க படிமுறைகளுக்கான திட்டமிடப்பட்ட திகதிகளை நியமிக்க வேண்டும் என்பதொடு **X2 படிவத்தில்**(வழக்கு முகாமை திட்ட ஒழுங்கு) ஒரு அட்டவணைப்படுத்துகின்ற ஒழுங்கை வெளியிட வேண்டும்.

### வழக்கு முகாமை கூட்டத்தின் பொதுத் தத்துவங்கள்

79அ (3). வழக்கு முகாமைக் கூட்டத்தில், திறத்தவர்களை அல்லது அவர்களின் சட்டத்தரணிகளை தனிப்பட்ட முறையில் அல்லது தொலைபேசியினூடாக, ஸ்கைப் வசதி அல்லது காணொளி மாநாடு அல்லது ஏனைய அதுபோன்ற தொடர்பாடல் வழிகளில் வினாத்தொடுப்பதற்கும்அத்தோடு அவர்களது தொடர்புடைய வழக்குகளுக்கு அவர்களை அழைப்பதற்கும் மற்றும் கீழ்க் குறிப்படப்படுபவை உற்பட ஏதேனும் வேறு எழுத்து மூல சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டளைகளுக்கு மேலதிகமாக வழக்கு முகாமைக்கான முன் விளக்க கட்டளைகளை வழங்குவதற்கும் தத்துவம் நீதிமன்றத்துக்கு உள்ளது.

(அ) வழக்குரைப்புக்கள், திறத்தவர்களை இணைத்தல் மற்றும் தவறாக இணைத்தல் மற்றும் வழக்கெழு காரணங்கள், செயல்கள் அல்லது

நிலையான கால எல்லைகளுடன் நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகின்ற நிபுணர்கள் போன்றவற்றுக்காக திருத்தத்துக்கான கட்டளைகள்.

(ஆ) நியாயாதிக்க விடயங்கள் தொடர்பான கட்டளைகள்;

(இ) பிணக்கில் உள்ள அல்லது பிணக்கில் இல்லாத நிகழ்வு அல்லது சட்டத்தின் பிரச்சினைகளை முடிவு செய்வதற்கு;

(ஈ) இலத்திரனியல் ரீதியாக சேமிக்கப்படுகின்ற தகவல்களின் வெளிப்படுத்தல் அல்லது கண்டுபிடிப்பு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நேர எல்லைகளுடனான நகர்வுப்பத்திரங்கள்/விண்ணப்பங்கள் உட்பட வினாக்கள்,சோதனைகள், ஆவணங்களின் உண்மைத்தன்மையை ஏற்றுக் கொள்ளல் மற்றும் ஆவணங்களை முன்வைத்தல் என்பவற்றுக்காக எதிர்பார்க்கப்படுகின்ற கண்டுபிடிப்புத் தேவைகள் மற்றும் கட்டளைகள்.

(உ) நிர்ணயிக்கப்பட்ட நேர எல்லைகளுடன் நகர்வுப்பத்திரங்கள்/விண்ணப்பங்கள் என்பவற்றுக்கான தேவைகள்.

(ஊ) தீர்வுக்கான வாய்ப்பொன்றை நிச்சயப்படுத்தல், தீர்ப்பனவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா? அத்தோடு என்ன தீர்ப்பனவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன மற்றும்அதற்கேற்ப கட்டளைகளை மேற்கொள்ளல்;

(எ) வழக்கு மத்தியஸ்தத்துக்கு பொருத்தமா என்பதை நிச்சயப்படுத்தல் மற்றும் அவ்வாறாயின், அத்தகை மத்தியஸ்தத்துக்கு திறத்தவர்களின் சம்மதத்தை பயனுறுத்துவதற்காக ஒரு கூற்று அத்தோடு அதற்கேற்ப கட்டளைகளை மேற்கொள்ளல்;

(ஏ) பிரேரிக்கப்படுகின்ற ‘‘இறுதி முன்-விளக்க கூட்டத்துக்காக’’ மற்றும் விளக்கத்துக்காக இரண்டு சட்டவுரைஞர்களுக்கும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய மூன்று மாற்றுத் திகதிகளை நியமித்தல்;

(ஐ) நீதிமன்றம்-அணைக்கின்ற அல்லது நீதிமன்றம்-குறிப்பீடு செய்கின்ற மத்தியஸ்த நிகழ்ச்சியில் மத்தியஸ்தத்துக்கு உடன்படுவதற்கு திறத்தவர்களை ஊக்குவித்தல்;

(ஒ) நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளுடன்அரச அலுவலகம், அரை அரச நியதிச்சட்ட குழாம், மாகாண சபை அல்லது உள்ளுராட்சி அதிகார சபையின் கட்டுக்காவலில் உள்ள எவையேனும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வெளியிடுவதற்கான கட்டளை;

(ஓ) நியமிக்கப்பட்ட நேர வரையறைகளுடன் நடவடிக்கையின் விரைவான தீர்ப்பில் உதவியாக இருக்கக் கூடிய சகல ஏனைய முன்-விளக்க நடவடிக்கைகளைநிச்சயப்படுத்தல் மற்றும் மேற்கொள்ளல்அத்தோடு நடவடிக்கையை துரிதமாகவும் மற்றும் செலவில்லாமலும் தீர்ப்பதற்காக அதற்குத் தேவையயான அல்லது விரும்பத்தக்கவாறு தென்படக் கூடியவாறு நீதிமன்றத்திலிருந்து அத்தகைய கட்டளைகளை தேடுதல்;

79அ (4) மேற்கொள்ளப்படவுள்ள ஒவ்வொரு முன்-விளக்க கட்டளைக்காகவும் நிர்ணயிக்கப்பட்ட நேரவறையறைகளுடன் வழக்கு முகாமைக் கூட்டத்தின் முடிவில் மேலே சொல்லப்பட்ட முன்-விளக்க கட்டளைகளை நீதிமன்றம் வழங்கலாம் என்பதோடு திறத்தவர்கள்குறிப்பிடப்பட்ட காலவரையறைகளுக்குள் அத்தகைய கட்டளையுடனும்

இணங்கிச் செயற்பட வேண்டும். விசேட சூழ்நிலைகளின் தேடுதல் ஒன்றின் மீது, ஏதேனும் முன்-விளக்க கட்டளையின் காலவரையறையை நீதிமன்றம் மாற்றலாம் அல்லது நீடிக்கலாம்.

79அ (5) வழக்கு முகாமை முடிவில், திறத்தவர்கள் மற்றும் அவர்களின் சட்டத்தரணிகளின் ஒத்துழைப்புடன் அடுத்த முன்-விளக்கத்துக்கான ஒரு திகதியை நீதிமன்றம் நியமிக்க வேண்டும். அத்தகைய திகதியானது வழக்கு விளக்கத்துக்காக நியமிக்கப்பட்ட தினத்துக்கு முன்னர் 15 நாட்களுக்கு மேற்படாததாக இருக்க வேண்டும்.

79அ (6) ஒரு திறத்தவர் அல்லது அவரது சட்டத்தரணி ஒரு வழக்கு முகாமைக் கூட்டத்தில் பங்பற்றுவதற்குத் தவறினால் அல்லது கூட்டத்தில் உண்மையில் பங்குபற்றுவதற்கு ஆயத்தமில்லாமல் அல்லது நல்லெண்ணத்துடன் பங்குபற்றவில்லையாயின் அல்லது எவையேனும் ஏனைய முன்-விளக்க கட்டளைகளுக்குக் கீழ்படியத் தவறினால், அவர்களின் பங்குபற்றாமைக்கு நீதிமன்றம் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதோடுஅத்தகைய பங்குபற்றாமைக்கு அல்லது இணங்கியொழுகாமைக்கு கணிசமானளவுக்கு நியாயப்படுத்தல் அல்லது ஏனைய சூழ்நிலைகளைக் குறிப்பிடாதவரை அவரது பங்குபற்றாமைக்கு அல்லது இணங்கியொழுகாமைக்கு அத்தகைய திறத்தவரினால் அல்லது சட்டத்தரணியினால் செலவுகள் செலுத்தப்படுதல் உட்பட ஏதேனும் எழுத்து மூல சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எவையேனும் நியாயக் கட்டளைகளை பிரேரணையில் அல்லது அதன் சொந்த தீர்மானத்தில் நியாயமான கிரயங்களுக்கான நடுத்தீர்ப்பொன்றை வழங்க வேண்டும்.

ஆயினும் மேலும், மேலே சொல்லப்பட்டவாறு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் அத்தகைய கட்டளைக்கு மேலதிகமாக,அவர்களின் இணங்கியொழுகாமைக்கு சாதாரண நியாயப்படுத்தல் அல்லது ஏனைய சூழ்நிலைகளைக் குறிப்பிடாதவரை அத்தகைய திறத்தவரினால் அல்லது சட்டத்தரணியினால் இணங்கியொழுகாமைக்கு நீதிமன்றத்தின தற்தீர்மானத்தில் நீதிமன்றத்துக்கு ஏற்பட்ட செலவினங்களுக்காக நடுத்தீர்ப்பை நீதிமன்றத்தின் சாதாரணமான செலவினங்களை செலுத்த வேண்டும் எனவழங்கலாம்.

79அ (7) எவரேனும் திறத்தவர் நியாயமான காரணமின்றி ஒரு வழக்கு முகாமைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்குத் தவறினால் அல்லது கூட்டத்தில் நல்லெண்ணத்துடன் பங்குபற்றாவிட்டால் மற்றும் ஏதேனும் முன்-விளக்க கட்டளையை பின்பற்றுவதற்கு தவறினால், முன்-விளக்க படிமுறைகளுக்காகஅதன் விளைவாந்தன்மையுடையஏதேனும் விண்ணப்பத்தை மேற்கொள்வதற்கு தகவுடையமாட்டார் என்பதோடு நீதிமன்றம் வேறுவகையில் கட்டளையிடாதவரை, அவர்கள் பங்குபற்றாமைக்காக மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் மற்றும் சகல கட்டளைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

**மத்தியஸ்தம்**

**79அ (8).** மத்தயிஸ்தம் ஒன்றுக்காக ஒரு குறிப்பிட்ட வழக்கு பொருத்தமானது என வழக்கு முகாமை கூட்டமொன்றில் நீதிமன்றம் அபிப்பிராயப்படுமிடத்து, மற்றும் திறத்தவர்கள் மத்தியஸ்தத்துக்கு சம்மதித்திருக்குமிடத்தும், அவர்களால் நியமிக்கப்படுகின்ற மத்தியஸ்தர் முன் தோன்றுமாறு அவர்களை வேண்டுகின்ற கட்டளையை நீதிமன்றம் மேற்கொள்ளும் அத்தோடு அத்தகைய நியமனம் மேற்கொள்ளப்படாதவிடத்து, நீதிமன்ற-கட்டுப்பாடுடைய மத்தியஸ்த நிகழ்ச்சியிலிருந்து ஒரு மத்தியஸ்தரை நீதமன்றம் நியமிக்கலாம்.

79அ (9). மேலே சொல்லப்பட்டவாறு மத்தியஸ்தம் செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஒரு மத்தியஸ்தர் வழக்கில் பிரச்சினையின் விடயங்கள் தொடர்பில் அத்தகைய பிணக்கிற்கு (இதனகத்துப்பின்னர் தீர்வு எனக்குறிப்பீடு செய்யப்படக் கூடிய)தீர்வு ஒன்றுக்கான,இணக்கத்துக்கு அல்லது ஏனைய உடன்படிக்கை வருவதற்கு திறத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

79அ (10) ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு திறத்தவரின் முகவர், ஏதேனும் மத்தியஸ்தத்தில் ஏதேனும் விடயத்தில் எவரேனும் பிணக்குக்குரியவரின் சார்பில் தோன்றுவதற்கு தகவுடையவராவார் அல்லது அனுமதிக்கப்படுவார்;

79அ (11). மத்தியஸ்தர் ஒருவருக்கு முன்னிலையில் நடவடிக்கைமுறைகள் இடம்பெறுகின்றவிடத்து, வழக்கில் பிரச்சினைக்குரிய சகல விடயங்கள் தொடர்பிலும் அல்லது சில விடயங்கள் தொடல்பில் ஒரு தீர்வுக்கு வருகின்றவிடத்து,மத்தியஸ்தர் அத்தகைய தீர்வின் நியதிகளை எழுத்துமூலம் அமைக்கப்படுவதற்கு காரணமாக இருக்க வேண்டும் என்பதோடு அத்தகைய தீர்வுக்கு உடன்பட்டவாறு அத்தகைய திறத்தவர்களினால் கையொப்பமிடப்பட வேண்டும். அத்தோடு அத்தகைய தீர்வுக்கு மத்தியஸ்தர் எதிர்கையொப்பத்தை இடவும் வேண்டும். தீர்வின் பிரதிகைளை மத்தியஸ்த்தரினால் ஒவ்வொரு திறத்தவருக்கும் வழங்க வேண்டும் என்பதோடு ஆற்றுப்படுத்துகின்ற நீதிபதிக்கு கோப்பிடவும் வேண்டும்.

79அ (12). அத்தகைய தீர்வு திறத்தவர்கள் உடன்பட்ட அதன் நியதிகளுக்கு திறத்தவர்களின் மீது பிணிப்புடையதாக இருக்கும் என்பதோடு அத்தகைய திறத்தவர்கள் தொடர்பில் அதற்கு நீதிமன்றம் வலுவூட்ட வேண்டும், ஆனால் அதற்கு உடன்படாத திறத்தவர்களின் உரிமைகளுக்குப் பங்கமில்லாமல் இருக்க வேண்டும்.

**மத்தியஸ்தரினால் இரகசியத்தைப் பேணல்**

79அ (13). ஒருதீர்வுக்கு வருவதற்கு, திறத்தவர்களை அல்லது அவர்களில் சிலரை இயலுமாக்கும் நோக்கத்துக்காக மத்தியஸ்தர் பொருத்தமானது என நினைக்கின்ற ஏதேனும் படிமுறையை நடைமுறைப்படுத்தலாம். அதற்கேற்ப அவர் நிகழ்வின் வினா, மற்றும் வழக்கில் உட்படுகின்ற சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல கருமங்களையும் சகல திறத்தவர்களுடனும் தனிப்பட்ட முறையில் மற்றும்/அல்லது அவர்களின் சட்டத்தரணியுடன் அல்லது திறத்தவர்களின் ஒரு முகவருடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முகவர்களுடன் தனியாக அவர்களின் சட்டத்தரணியின் முன்னிலையில் அல்லது சட்டத்தரணியில்லாமல் கலந்துரையாடலாம். ஒரு திறத்தவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திறத்தவர்கள் தீர்மானத்துக்கு விரும்புகின்ற நியதிகளை அவர் விசாரித்து அறிந்து கொள்ளலாம்; அவர் அவருடன் சில வெளிப்படுத்தப்பட்ட அல்லது கலந்துரையாடப்பட்ட சில விடயங்கள் அல்லது நியதிகளை வைத்து அவ்வாறு புரிந்துணர்வு அடிப்படையில் அவ்வாறு செய்யலாம், ஆனால் அவர்களின் அனுமதியில்லாமல் எவரேனும் ஏனைய திறத்தவருக்கு அவற்றை வெளிப்படுத்தக் கூடாது.

**திறத்தவர்களினால் இரகசியத்தைப் பேணல்**

79அ (14). மத்தியஸ்த அமர்வுகள் நடாத்தப்படுகின்ற போது சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் மற்றும் வெளிப்படுத்தப்படுகின்ற அல்லது கலந்துரையாடப்படுகின்ற ஏதேனும் ஏனைய கருமங்கள் தொடர்பில் இரகசியத்தைப் பேணுவதற்கு ஒரு பிணக்குக்குரிய ஒவ்வொரு திறத்தவரினதும் மற்றும் ஒவ்வொரு மத்தியஸ்தரினதும் கடமையாக இருக்கும்.

**79அ (15).** மத்தியஸ்தம் தொடர்பான தகவல்களை திறத்தவர்கள், மத்தியஸ்தர் மற்றும் மத்தியஸ்தத்தை நடாத்தவதில் ஈடுபடுகின்ற எவரேனும் ஏனைய ஆட்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் அல்லாது இரகசியகத்தைப் பேண வேண்டும்;

(அ) வெளிப்படுத்துவதற்கு சகல திறத்தவர்களும் உடன்படுதல் மற்றும் தகவல் மத்தியஸ்தருக்கு தொடர்புடையதாக இருந்தால், மத்தியஸ்தர் வெளிப்படுத்துவதற்கு உடன்படுதல்;

(ஆ) வெளிப்படுத்தல் சட்டத்தினால் வேண்டப்படுதல்;

(இ) ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு அல்லது நிறைவேற்றுவற்கான நோக்கங்களுக்காக வெளிப்படுத்தல் அவசியப்படுதல்;

(ஈ) ஓர் உரிமைக்கோரிக்கையின் தவறான வழிநடத்தல் இடம்பெறுவதற்காக மத்தியஸ்தர் ஒருவர் பதிலளிப்பதற்காக வெளிப்படுத்தல் அவசியப்படுதல்;

ஆயினும், எவ்வாறாயினும், பின்வரும் சந்தர்ப்பங்களில் இது ஏற்புடையதாகமாட்டாது-

(1) அது பகிரங்கமாக இருக்கின்றவிடத்து;
(2) திறத்தவர்கள் அவர்களின் நடத்தையால் இரகசியமானது எனக் கருதாமல் செயற்படுமிடத்து; அல்லது
(3) தீர்மானிப்பதில் பொருத்தமான இந்த உப பிரிவின் கீழ் தேவைப்படுகின்ற ஒரு வெளிப்படுத்தலை மேற்கொள்வதற்கு மத்தியஸ்தர் தவறுகின்றவிடத்து.

**மத்தியஸ்த அமர்வு ஒன்றில் மேற்கொள்ளப்படுகின்ற தகவலின் அல்லது கூற்றின் அனுமதிக்கத்தக்க தன்மை**

79அ (16). ஒரு மத்தியஸ்த அமர்வில் எவரேனும் திறத்தவரால் வெளிப்படுத்தப்படாத தகவல் அல்லது மேற்கொள்ளப்படாத கூற்று கீழே குறிப்பிடப்படுகின்றவை உட்பட, ஏதேனும் நீதித்துறை அல்லது நிருவாக நடவடிக்கைச் சான்றில் தெரியப்படுத்தப்படலாம் அல்லது அனுமதிக்கப்படலாம்-

அ. ஒரு வணிக ரீதியான பிணக்கை மத்தியஸ்தம் செய்வதற்கு ஒரு திறத்தவரினால் மேற்கொள்ளப்படுகின்ற ஓர் அழைப்பு, பிணக்கை மத்தியஸ்தம் செய்வதற்கு ஒரு திறத்தவரின் விருப்பம் அல்லது மறுப்பு, மத்தியஸ்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் திறத்தவர்களுக்கிடையில் பரிமாறப்பட்ட தகவல்கள் மற்றும் பிணக்கை மத்தியஸ்தம் செய்வதற்கான ஏதேனும் உடன்படிக்கை;

ஆ. மத்தியஸ்த நோக்கங்களுக்காக மாத்திரம் தயாரிக்கப்படுகின்ற ஒரு ஆவணம்;

இ. பிணக்கின் சாத்தியமான ஒரு தீர்வைக் கவனத்தில் கொண்டு மத்தியஸ்தத்தின் போது ஒரு திறத்தவரினால் வெளிப்படுத்தப்படுகின்ற கருத்துக்கள் அல்லது மேற்கொள்ளப்படுகின்ற ஆலோசனைகள்;

ஈ. மத்தியஸ்தத்தின் போது திறத்தவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கூற்றுக்கள் அல்லது அனுமதிப்புக்கள்;

உ. மத்தியஸ்தரினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்வுக்கான கூற்றுக்கள் அல்லது முன்மொழிவுகள்;

ஊ. மத்தியஸ்தரினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்வுக்காக ஒரு முன்மொழிவை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு திறத்தவர் ஒரு விருப்பத்தை குறிப்பிடுகின்றவாறான நிகழ்வு.

எ. ஒரு திறத்தவர் அல்லது மத்தியஸ்தர் மத்தியஸ்தத்தை முடிவுறுத்துகின்ற நிகழ்வு.

79அ (17). மேலே 79(16) பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களானது தேவைப்படுகின்ற அளவுக்கு பின்வரும் முறையில் சான்றில் ஏற்றுக் கொள்ளப்படலாம்,

(அ) சட்டத்தினால்;

(ஆ) ஒரு தீர்வு உடன்படிக்கையை நிறைவேற்றுகின்ற அல்லது செயற்படுத்துகின்ற நோக்கங்களுக்காக;

(இ) தவறான நடத்துகையின் ஓர் உரிமைக் கோரிக்கைக்கு பதிலளிப்பதற்கு ஒரு மத்தியஸ்தரினால்; அல்லது

(ஈ) மத்தியஸ்தத்துக்கு தொடர்புடைய சகல திறத்தவர்கள் சம்மதித்தல் மற்றும், தகவல் மத்தியஸ்தருக்கு தொடர்புடையதாக இருந்தால், மத்தியஸ்தர் சம்மதித்தல்;

**நீதிமன்ற நடவடிக்கைகளை பிற்போடுவதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு அல்லாத மத்தியஸ்தம்**

**79அ (18).** எவையேனும் மத்தியஸ்த நடவடிக்கைகளின் ஆரம்பித்தலானது, முகாமைக் கூட்டம், முன்-விளக்கப் படிமுறைகள் மற்றும் முன்-விளக்க கூட்டங்கள் உட்பட நீதிமன்ற நடவடிக்கைகளை ஒரு இடைநிறுத்தத்துக்கு அல்லது பிற்போடுவதற்கு கரிசனை கொள்ளப்படக்கூடாது என்பதோடு எவையேனும் மத்தியஸ்த நடவடிக்கைகளின் காரணத்தினால் நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்துகின்ற அல்லது பிற்போடுகின்ற ஏதேனும் கட்டளையை நீதிமன்றம் மேற்கொள்ளமாட்டாது.

**விளக்க முகாமைக்கான முன்-விளக்க கூட்டங்கள்**

**79அ (19).** முன்-விளக்க கூட்டத்துக்காக நியமிக்கப்படுகின்ற தினத்தில்,ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்-விளக்கக் கூட்டங்களை நீதிமன்றம் நடத்தலாம் அதற்காக வழக்குக்கான எவரேனும் திறத்தவர் அல்லது அவரது சட்டத்தரணி மற்றும் எவர்களேனும் பிரதிநிதித்துவம் செய்யாத திறத்தவர்கள் தோன்றலாம். எவ்வாறாயினும், ஒரு சட்டத்தரணியை தனிப்பட்டமுறையில் அல்லது தொலைபேசி மூலம், ஸ்கைப் அல்லது வீடியோ காணொளி அல்லது ஏனைய அதற்குச் சமமான தொடர்பாடல் வழிகளில் நீதிமன்றில் தோன்றுவதற்கு நீதிமன்றம் அனுமதிக்கலாம்.

**79அ (20).** முன்-விளக்க கூட்டத்தில், அத்தகைய நோக்கங்களுக்காக, நீதிமன்றம் கட்டளைகளை மேற்கொள்ள வேண்டும்:

1. வழக்கைத் தீர்த்து வைத்தலை துரிதப்படுத்தல்;

2. ஆரம்பத்திலிருந்தே திட்டமிட்டு வழக்கின் கட்டுப்பாட்டைத் தொடர்தல் எனவே முகாமையின் குறைபாட்டினால் வழக்கு தாமதப்படுத்தப்படமாட்டாது;

3. பயனற்ற முன்-விளக்க செயற்பாடுகளை ஊக்குவிப்பதைத் தவிர்த்தல்;

4. அதிகமான ஏற்பாடுகளைச் செய்வதனூடாக விளக்கத்தின் தரத்தை மேம்படுத்தல்;

5. விளக்கத்துக்கான திகதிகள், விளக்கத்தின் அளவு மற்றும் திரும்பத்திரும்பச் செய்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம் விளக்கத் திகதிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்பதோடு விளக்கம் தடையின்றி முடிவுறுத்தும் வரை நடாத்தப்படும் எனவே சாட்சிகள் அனைவரும் வருகை தர வேண்டும்.

**ஒரு முன்-விளக்க கூட்டத்தில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்**

79அ (21). சான்றை அனுமதித்தல் மற்றும் நடவடிக்கையின் துரிதப்படுத்தப்பட்ட தீர்ப்பையும் ஊக்குவிப்பதற்காக ஒரு திட்டம் உட்பட, ஒரு விளக்கத்துக்கான திட்டத்தை

உருவாக்குவதற்கு ஒரு முன்-விளக்க கூட்டத்தை நீதிமன்றம் நடாத்தும்.கூட்டத்துக்கு விளக்கத்தை நடாத்துகின்ற சட்டதரணி அல்லது அவரது உதவியாளர் ஒருவர் மற்றும் எவரேனும் பிரதிநிதித்துவம் செய்யாத திறத்தவர் பங்குபற்றலாம்.

79அ(22). முன்-விளக்க கூட்டத்தில், நீதிமன்றமானது இந்த உபபிரிவினால் அதற்கு வழங்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதோடு பின்வருவனவை உட்பட பொருத்தமானது எனத் தென்படக் கூடிய அத்தகைய அட்டவணைப்படுத்துகின்ற கட்டளைகளை மேற்கொள்ளும்-

அ. நியாயாதிக்கப் பிரச்சினைகளை நிச்சயப்படுத்தல்:

ஆ. பிரச்சினைகளை வடிவமைத்து இலகுபடுத்தல் மற்றும் அற்பமான உரிமைக் கோரிக்கைகள் அல்லது எதிர்வாதங்களை அகற்றுதல்:

இ. அனுமதிப்புக்கள் மற்றும் பிரச்சினைகள் என்பவற்றை தீர்மானித்தல் மற்றும் பதிவுசெய்தல்:

ஈ. தேவையற்ற எண்பிப்பு மற்றும் அதிக சாட்சிகள் என்பவற்றைத் தளர்த்துதல்:

உ. நிலுவையிலுள்ள இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வழக்குகளை ஒன்றிணைத்தல்:

ஊ. சத்தியக்கூற்றுக்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை பரிமாறுதல் தொடர்பில் திகதிகளை நியமித்தல்:

எ. திறத்தவர்களுக்கும் மற்றும் அவர்களது சட்டவுரைஞர்களுக்கும் பொருத்தமான உறுதியான விளக்கத்துக்கான திகதிகளை நியமித்தல்:

ஏ. அழைக்கப்பட வேண்டிய சாட்சிகளின் எண்ணிக்கை மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களை அடையாளம் காணுதல் மற்றும் கோவையிடலை ஒழுங்கு செய்தல் மற்றும் எவையேனும் முன்-விளக்க வழக்கேடுகளை பரிமாறுதல்;

ஐ. சாட்சிகளை அழைப்பதற்காக கால வரையறைகளை நிர்ணயித்தல்;

ஒ. நிலுவையிலுள்ள நகர்வுப்பத்திரங்களை தீர்த்தல்;

ஓ. சாட்சிகளை விசாரணை செய்வதற்கும் மற்றும் குறுக்கு விசாரணை செய்வதற்கும் கால வரையறைகளுக்கு உடன்படுதல்;

ஔ. திறத்தவர்களால் நியமிக்கப்படுகின்ற வல்லுனர் ஒருவர் அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுகின்ற வல்லுனர் ஒருவரின் ஒரு எழுத்து மூல அறிக்கையினால் ஏதேனும் நிகழ்வின் தீர்மானிப்புக்காக கட்டளைகளை வழங்குதல்;

ஃ. ஒரே நடவடிக்கையில் நிகழ்வுகள் மற்றும் சட்டம் தொடர்பாக பிரச்சினைகள் எழுகின்றவிடத்து சட்டப்பிரச்சினைகள் தொடர்பாக முதலில் முயற்சி செய்தல்;

க். நடவடிக்கையில் ஒன்றில் முழுமையாக அல்லது விடயத்தின் ஏதேனும் பகுதி மீது திறத்தவர்களின் உடன்பாடுகள்:

க. ஏனைய விடயங்களை உறுதிப்படுத்தல் மற்றும் அவசியமெனத் தென்படக் கூடியவாறான அல்லது துரிதமாகவும் குறைந்த செலவிலும் நடவடிக்கையைத் தீர்ப்பதற்கு எவையேனும் ஏனைய படிமுறைகளை மேற்கொள்ளல்;

கா. நியாயாமாக, அவசரமாக மற்றும் செலவு குறைந்த வழியில்நடவடிக்கையைத் தீர்ப்பதற்கு வேறு வழி முறைகளில் ஊக்கமளித்தல்:

கி. திறத்தவர்களின் உடன்படிக்கைகள் உட்பட கீழ்க் குறிப்பிடப்படுகின்ற விடயங்களைப் ஏற்றுக் கொள்வதற்கும் பின்பற்றுவதற்கும்,நடவடிக்கையில் திறத்தவர்களின் உடன்படிக்கைகளை முழுமையாக அல்லது நடவடிக்கையில் விடயத்தின் ஏதேனும் ஒரு பகுதியை பதிவு செய்தல்;

(i) ஏதேனும் முறையில் மேற்கொள்ளப்பட்ட நீதிபதியின் ஏதேனும் தீர்மானம் அல்லது முடிவு அல்லது அத்தகைய முறையில் திறத்தவர்களுக்கிடையில் ஏற்படுத்தப்படுகின்ற உடன்படிக்கை மற்றும் அத்தகைய தீர்மானம் அல்லது முடிவுக்கு ஏற்ப மேற்கொள்ளக்கூடிய தீர்ப்பு:

(ii) நிகழ்வு அல்லது சட்டத்தின் சகல பிரச்சினைகள் மீது அல்லது எவையேனும் பிரச்சினைகள் மீது மேற்கொள்ளப்படுகின்ற நீதிபதியின் ஏதேனும் தீர்மானம் அல்லது முடிவு மற்றும் பொருத்தமான கட்டத்தில் அத்தகைய தீர்மானம் அல்லது முடிவுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்ற தீர்ப்பு.

கீ. ஏதேனும் நிகழ்வு அல்லது ஆவணம் அல்லது நடவடிக்கையை வாபஸ் பெறுதல் அல்லது சீராக்கல் அல்லது நடவடிக்கைகளின் இணக்கப்பாடு போன்றவற்றில் ஏதேனும் ஒன்றில் எண்பிப்பு முறை தொடர்பாக திறத்தவர்களின் ஏதேனும் உடன்பாடு:

கு. மேலே உப பந்திகள் (i) மற்றும் (ii) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானம் அல்லது முடிவு சகல நோக்கங்களுக்காகவும் அத்தகைய திறத்தவர்களுக்கிடையில் இறுதியானதும் மற்றும் முடிவானதுமான தீர்மானமாக இருக்கும்.

ஆயினும், மேலே (கி) என்ற உப பிரிவின் கீழ் ஓர் உடன்படிக்கையை திறத்தவர்கள் பதிவு செய்கின்ற போது, அத்தகைய உடன்படிக்கையின் பயனை திறத்தவர்களுக்கு நீதிமன்றமும் வாசித்து விளங்கப்படுத்த வேண்டும் என்பதோடு சொல்லப்பட்ட உடன்படிக்கை மற்றும் அதன் பயன் என்பவற்றை திறத்தவர்கள் விளங்கிக் கொள்கின்றனர் என்பதற்கு நிகழ்வைப் பதிவு செய்யவும் வேண்டும்.

வெளிப்படையான அநீதியின் விளைவுகள் இல்லாதவரை வழக்குரைகளின் திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் மற்றும் புதிய பிரச்சினைகள் எழுப்பப்படவும் கூடாது

**வெளிப்படையான அநீதிக்கான விளைவுகள் இருக்காதவரை வழக்குரைகளின் திருத்தங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது என்பதோடு புதிய பிரச்சினைகள் எழுப்பப்பட வேண்டும்.**

**78அ (23).** வழக்குத் தொடர்வதற்கு இருக்கின்ற நடவடிக்கையின் விளக்கத்தின் மீதான பிரச்சினைகளைநீதிமன்றத்தின் மூலம் தீர்க்கப்பட்டிருக்கின்றவிடத்து, எவையேனும்விசேட சூழ்நிலைகள் தவிர்த்துமற்றும் திருத்தத்துக்காக விண்ணப்பிக்கின்ற திறத்தவருக்கு வெளிப்படையான அநீதியில் விளைவை அத்தகைய திருத்தத்துக்கு அனுமதிப்பதை மறுத்தலானது, ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என நீதிமன்றம் திருப்தியடையாதவரையும் விளக்கத்தின் போது அதற்கு திருத்தம் மேற்கொள்ளப்படக் கூடாது.

**79அ (24).** விளக்கம் தொடர்பான செயன்முறை நடைபெறுகின்ற போது,தீர்மானிப்பதற்காக சான்று மூலம் புதிய பிரச்சினைகள் எழுகின்றனவென வெளிப்படுகின்றவிடத்து,அந்த வெளிப்படையான அநீதி வேறுவகையில் விளைவுகளை ஏற்படுத்தும் என நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து மேலதிக பிரச்சினைகள்கோவையிடலாம்.

### இறுதி முன்-விளக்க கட்டளைகள்

**79அ (25).** முன்-விளக்கக் கூட்டம் முடிவடைந்த பின்னர்,மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தை வாசிக்கின்ற ஒரு கட்டளையை **X3 படிவத்தில்** வெளியிட வேண்டும் என்பதோடு சொல்லப்பட்ட இறுதி முன்-விளக்க கட்டளைகளை நீதிமன்றம் திருத்தாத வரை,அவை விளக்க நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதாக இருக்கும் என்பதோடு வழக்குரைகளின் இடத்தையும் அது எடுக்கின்றது.

**79அ(26).** இறுதி முன்-விளக்க வழக்குக் கேட்டலுக்கு முன்னர் 14 நாட்களுக்குள் திறத்தவர்களின் சட்டத்தரணிகள் சந்தித்துக் கொள்வார்கள் என்பதோடு 79அ (22) ஆம் உபபிரிவில் பட்டியலிடப்பட்ட சகல பிரச்சினைகளையும் காப்பீடு செய்யப்படும் வகையில் ஒரு நகல் முன்-விளக்க கட்டளையைத் தயாரிக்க வேண்டும்.

**79அ (27).** நடவடிக்கையின் விளக்கத்துக்காக முதலில் நியமிக்கப்பட்ட தினத்தில் அல்லது அதற்குப்பின்னர், அத்தகைய படிமுறையானது அனுமதிக்கப்படாவிட்டால், ஒரு பாரதுாரமானதும் மற்றும் பரிகாரமளிக்கப்பட முடியாததுமான அநீதி ஏற்படும் என நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றம் திருப்தியடையாத வரை,முன்-விளக்கப்படிமுறைகளுக்கான விண்ணப்பங்களானது,அனுமதிக்கப்படமாட்டாது. அத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய விண்ணபத்தை மேற்கொள்கின்ற திறத்தவருக்கெதிராக நீதிமன்றம் பொருத்தமானது எனக் கருதுகின்ற செலவுகளுக்கான அத்தகைய நியதிகளை விதிக்கலாம்.

### திறத்தவர்கள் தோன்றுவதற்கு தவறுகின்றபோது

**79அ(28).** ஒரு திறத்தவர் அல்லது அவரது சட்டத்தரணி ஒரு முன்-விளக்க கூட்டத்தில் பங்குபற்றத் தவறினால் அல்லது உண்மையில் பங்குபற்றுவதற்கு தயாரில்லாமல் இருத்தல் அல்லது கூட்டத்தில் நல்லெண்ணத்துடன் பங்கு பற்றாதிருத்தல் அல்லது ஏனைய முன்-விளக்க கட்டளையைப் பின்பற்றத் தவறினால், அவர்கள் வருகை தராமைக்கு நீதிமன்ற நடவடிக்கையைத் தொடரும் என்பதோடு பிரேரணை மீது அல்லது அதனது சொந்த தீர்மானத்தில், தகாத உபயோகம் செய்கின்ற திறத்தவருக்கெதிராக தவணை தவறுகையைப் பதிவு செய்தல் உட்பட குடியியல் நடவடிக்கைக் கோவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நியாயமான கட்டளைகளை வழங்கும், தவணை தவறுகை ஒன்று பதிவு செய்யப்பட்ட பின்னர் 14 நாட்களுக்குள் இணங்கியொழுகாமைக்காக அத்தகை திறத்தவரால் அல்லது சட்டத்தரணியினால் செலவினங்களைச் செலுத்த வேண்டும், தவறிழைக்கின்ற திறத்தவர் தவணை தவறுகை தீர்ப்பை புறந்தள்ளி வைப்பதற்கு ஒரு நகர்வுப்பத்திரத்தை கோவையிடலாம் என்பதோடு அத்தகைய இணங்கியொழுகாமை ஏன் நியாயமாக இருந்தது என்பதை காண்பிப்பதற்கான ஒரு சத்தியக் கூற்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆயினும்மேலும், மேலே சொல்லப்பட்டவாறு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் அத்தகைய கட்டளைகளுக்கு மேலதிகமாக, அத்தகைய இணங்கியொழுகாமைக்காக கணிசமான காரணத்தை நியாயப்படுத்தாத வரை அல்லது வேறு சூழ்நிலைகள் அநீதத்துக்கான நீதிமன்றத்தின் செலவுகளின் நடுத்தீர்ப்பு ஒன்றை வழங்காதவரை அத்தகைய திறத்தவரினால் அல்லது சட்டத்தரணியினால் நீதிமன்றத்தின் விளைவாந்தன்மையுடைய செலவுகளை செலுத்த வேண்டும் என நீதிமன்றம் அதன் தற்றுணிபில் கட்டளையை வெளியிடலாம் என்பதோடு நீதிமன்றம் வேறுவகையில் கட்டளை வழங்காத வரை, அவர்கள் வருகை தராமைக்காக வழங்கப்படுகின்ற எவையேனும் அல்லது சகல கட்டளைகளுக்கும் அவர்கள் கட்டுப்பட வேண்டும் என வேண்டப்படும்.

## அத்தியாயம் X1

### விளக்கத்துக்கான திகதி

5 பிரதான சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்காகப் பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது:-

முன்-விளக்க கூட்டம் முடிவடைந்த பின்னர், இறுதி முன்-விளக்க கட்டளைக்கு ஏற்ப நடவடிக்கையின் விளக்கத்துக்காக திகதியை/திகதிகளை நிதிமன்றம் நியமிக்க வேண்டும் என்பதோடு விளக்கம் முடியும் வரை தொடர்ந்து நடவடிக்கை முறைகளை நடாத்த வேண்டும்.

**பிதான சட்டவாக்கத்தின் 146, 147, 148 மற்றும் 149 ஆம் பிரிவுகளின் நீக்கம்**

6 பிதான சட்டவாக்கத்தின் 146, 147, 148 மற்றும் 149 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றது.

**ஒரு வாய்மொழி மூலமான விசாரணைக்காக சத்தியக் கூற்று பதிலீடு செய்யப்பட வேண்டும் (அமைச்சின் முன்மொழிவுகள்)**

7 பிரதான சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவுக்கு உடனடுத்ததாக 151அ என்ற பின்வரும் புதிய பிரிவு உட்செலுத்தப்பட வேண்டும்:-

151அ (1) ஒரு சாட்சியின் வாய்மொழி மூல பிரதான விசாரணையொன்றுக்காக ஒரு சத்தியக் கூற்றை பதிலீடு செய்யப்பட வேண்டும் என்ற கட்டளையை நீதிமன்றம் அதன் தற்தீர்மானத்தில் வெளியிடலாம் என்பதோடு நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுகின்ற ஒரு திகதியில் அத்தகைய சத்தியக் கூற்றை சமர்ப்பிப்பதற்கு அத்தகைய சாட்சியை அழைக்கின்ற திறத்தவரை பணிக்கலாம் என்பதோடு அத்தகைய திகதி விளக்கத் திகதிக்கு ஆகக் குறைந்தது ……… நாட்களுக்கு முன்னராக இருக்க வேண்டும்.

151அ (2). எவரேனும் திறத்தவர் வேண்டுமென்றே உபபிரிவு 11.1 இன் கீழ் வழங்கப்படுகின்ற ஏதேனும் கட்டளையுடன் இணங்கியொழுகத்தவறி சத்தியக் கூற்றை வழங்குவதற்குத் தவறினால், அவர் வழக்காளியாக இருந்தால், அவரது சத்தியக்கூற்றை சமர்ப்பிப்பதற்குத் தவறியமைக்காக அவரது வழக்கை தள்ளுபடியாவதற்கு அவரே பொறுப்பாவார்என்பதோடு அவர் எதிராளியாக இருந்தால், அவரது எதிர்வாதம் ஏதேனும் இருந்தால்,அத்தகைய எதிர்வாதத்தை நீக்கப்பட்டு அத்தோடு அவர் நீதிமன்றில் தோன்றி மற்றும் மறுமொழியளிக்காத நிலைமை எனக் கருதப்பட வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், ஒரு நியாயமான காலத்துக்குள் அதாவதுஅத்தகைய தள்ளுபடி செய்யப்படுகின்ற அல்லது தடைசெய்யப்படுகின்ற தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் எவரேனும்அத்தகைய திறத்தவர்தள்ளுபடியை அல்லது புறந்தள்ளி வைக்கின்ற மறுமொழி வழங்குகின்ற நிறுத்தத்துக்கு சத்தியக் கூற்றினால் ஆதரிக்கின்ற நகர்த்தல் பத்திரத்தால் விண்ணப்பிக்கலாம் என்பதோடு அத்தகைய தவறுகைக்கான பின்னணியுடன் நிதிமன்றம் திருப்தியடைந்து தள்ளுபடியை அல்லது மறுமொழியளிப்பதைத் தடை செய்தல் என்பவற்றை புறந்தள்ளி வைக்கின்ற கட்டளையை நீதிமன்றம் வழங்கி நீதிமன்றத்துக்குப் பொருத்தமானது என தென்படக் கூடிய திறத்தவர்களின் செலவுகள் மற்றும் ஒரு விளைவாந்தன்மையுடைய நீதிமன்றத்தின் செலவுகளுக்கும் அத்தகைய நியதிகள் மீது அத்தகைய திறத்தவர் சத்தியக் கூற்றை கோவையிடுவதற்கு நீதிமன்றம் அனுமதிக்கும்.

151அ (3) மேலே 15.1ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் கட்டளையொன்று வழங்கப்படுகின்ற போது,அதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய ஆவணங்களுடன் சேர்த்து அத்தகைய சத்தியக் கூற்றையும் எதிர் திறத்தவர்களுக்கு அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணிகளுக்கு சத்தியக்கூற்று மற்றும் சகல ஆவணங்களின் பிரதி ஒவ்வொன்றுடனும்சேர்ப்பிக்கப்பட்டதற்கான எண்பிப்புடன் நிதிமன்றத்தின் பதிவாளருக்கு சமர்ப்பிக்கும்படி அத்தகைய சாட்சியை அழைக்கின்ற திறத்தவரை நீதிமன்றம் பணிக்க வேண்டும்.

151அ (4). விளக்கம் நடைபெறுகின்ற தினத்தில், சத்தியக் கூற்றை சமர்ப்பிக்கின்ற திறத்தவர், சாட்சியினூடாக சத்தியக்கூற்றை சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு அத்தகைய சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்ட அல்லது உறுதிப்படுப்பட்ட பின்னர் அவரின் சத்தியக் கூற்றின்

பிரதியொன்று அவருக்கு வழங்கப்படும் என்பதோடு அதனை அவர் உண்மை என உறுதிப்படுத்தவும் வேண்டும் அத்தோடு அவரின் சத்தியக் கூற்றுக்கு ஏதையேனும் விடயத்தை சேர்ப்பதற்கு அவர் விரும்பினால், அதனை நீதிமன்றம் பதிந்து கொள்ள வேண்டும் என்பதோடு அதன்பின்னர் மற்றத்திறத்தவரால் வாய்மொழிமூலமான குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதோடு ஏதேனும் இருந்தால் வாய்மொழி மூலமான மீள் குறுக்கு விசாரணைக்கும் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், ஒன்றில் அத்தகைய சான்றை அல்லது சான்றின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளப்பட முடியாமை மீது அல்லது அத்தகைய சத்தியக்கூற்றுக்கு அணைக்கப்படுகின்ற எவையேனும் ஆவணங்களின் ஏற்றுக்கொள்ளப்பட முடியாமைஅல்லது உண்மையுடைமை மீது சமர்ப்பிக்கபட வேண்டுமென வேண்டப்பட்ட நேரத்தில் கிடைக்கப்பேறுகின்ற ஆவணத்தை ஆட்சேபிப்பதற்கு எதிர் திறத்தவர் தகவுடையவராவார். அத்தகைய சந்தர்ப்பமொன்றில், எதிர்த் தரப்பினரால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்கு முன்னர், அத்தகைய ஆட்சேபனை மீது ஒரு கட்டளையை நீதிமன்றம் விதிக்கலாம்.

151அ (5). ஒரு சத்தியக்கூற்றானது சொல்லக்கேட்ட விடயங்கள் அல்லது விவாதத்துக்குரிய விடயங்கள் அல்லது இழிவான ஏதேனும் விடயத்தை கொண்டிருந்தால், அத்தகைய விடயங்களை நீக்குவதற்கு நீதிமன்றம் கட்டளை வழங்கலாம் என்பதோடு சத்தியக்கூற்றில் உள்ள ஏனைய விடயங்களோடு நடவடிக்கையைத் தொடரலாம் அல்லது அத்தகைய சத்தியக்கூற்றை சமர்ப்பித்த திறத்தவருக்கு ஒரு புதிய ஏற்றுக்கொள்ளத்தக்க சத்தியக்கூற்றை சமர்ப்பிப்பதற்கு கட்டளையிடலாம் என்பதோடு அத்தகைய ஏற்றுக் கொள்ள முடியாத சத்தியக்கூற்றை சமர்ப்பிக்கின்ற திறத்தவர் செலவுகளுக்கான கொடுப்பனவுக்கு பொறுப்பானவராவார்.

151அ (6). குடியியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவுகள் 134 மற்றும் 135 என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைய, நீதித்துறை அக்கறைகளில் வழக்குக்கு தொடர்புடைய ஆள் அல்லாத எவரேனும் வேறு ஆளை மற்றும் வழக்குக்கு உரிய திறத்தவரினால் சாட்சியாக பெயர் குறிப்பிடாத ஆளையும்அழைப்பதற்கு அல்லது விசாரணை செய்வதற்கான நீதிமன்றத்தின் உரிமையை மேலே சொல்லப்பட்ட பிரிவு எந்த வகையிலும் புறந்தள்ளி வைக்காது.

151அ (7). மேலே சொல்லப்பட்ட பிரிவானது, ஆணை மீது மேற்கொள்ளப்பட்ட வாக்கு மூலங்களினால் எண்பிக்கப்படுவதற்கான ஏதேனும் குறிப்பிட்ட நிகழ்வு அல்லது எவையேனும் நிகழ்வுகளுக்கான கட்டளையை விதிப்பதற்கான நீதிமன்றத்தின் உரிமையை எந்தவித்தத்திலும் நீக்கிவிடமாட்டாது என்பதோடு அத்தகைய சந்தர்ப்பமொன்றில், ஆணை மீது மேற்கொள்ளப்பட்ட சான்று தொடர்பில் குடியியல் நடவடிக்கைக் கோவையின் 179 மற்றும் 180 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் அத்தகைய சான்றுக்கு ஏற்புடையதாகும்.

## அட்டவணை

## வழக்கு முகாமை கூட்டத்துக்கு கட்டளை உருவாக்கல் (படிவம் X1) – பிரிவு 79அ (1)

**மேல்மாகாண வணிக மேல்நீதிமன்மறத்தில்/………………… மாவட்ட நிதிமன்றத்தில்.**

**வழக்கு இலக்கம் :…………………..**

……………………………

**வழக்காளி**

……………………………..

**எதிராளி**

………………… ஆம் திகதி காலை ……….. மணிக்கு ………ஆம் இலக்க நீதிமன்றத்தில் கௌரவ நீதிபதி………………………………… அவர்கள் முன்னிலையில் ஒரு வழக்கு முகாமை கூட்டத்துக்குத் தோன்றுமாறு விளக்கம் நடாத்துவதற்கு பொறுப்பான சட்டவுரைஞர் மற்றும் ஒவ்வொரு திறத்தவர் அல்லது திறத்தவரின் பிரதிநிதி அல்லது சட்டத்தரணிக்கு இத்தால் கட்டளை விதிக்கப்படுகின்றது.

இந்த வழக்க முகாமைக்காக ஏற்பாடு செய்வதற்கு, இத்தால் பின்வருமாறு கட்டளை விதிக்கப்படுகின்றது:

1. வழக்கு முகாமைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் ஒரு வாரம் பிந்தாத காலத்துக்குள் திறத்தவர்களுக்கான சட்டவுரைஞர் அவர்களை சந்தித்து கலந்துரையாடி, தனியாக இலக்கமிடப்பட்ட பந்திகளாக பின்வரும் தகவல்களை வழங்குகின்ற ஒரு இணைந்த கூற்றை எழுத்து மூலம் நீதிமன்றத்துக்கு வழங்க வேண்டும்.

(அ) விளக்கத்துக்கு முன்னர் இந்த விடயத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக ஏதேனும் வாய்ப்புள்ளதா அத்தோடு எந்த வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன அல்லது எந்த வகையான முயற்சிகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டள்ளன:

(ஆ) நடவடிக்கையானது மத்தியஸ்தத்துக்குப் பொறுத்தமானதா? அவ்வாறாயின், அதற்கான ஒரு கூற்று;

(இ) அத்தகைய கூற்றைத் தயாரிப்பதற்கு சந்தித்துக் கலந்துரையாடிய சட்டவுரைஞர்களின் பெயர்கள்;

(ஈ) வழக்கு தொடர்பான ஒரு சுருக்கமான விபரிப்பு;

(உ) பிணக்குக்கு உட்படுகின்ற பிரச்சினைகள்;

(ஊ) இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கான அடிப்படை;

(எ) வழக்குரைகள் அல்லது திறத்தவர்களோடு சேர்பவர்கள் அல்லது வழக்கெழு காரணங்கள் என்பவற்றுக்கு எவைகளேனும் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்புக்கள் உள்ளனவா?

(ஏ) வினாக்கொத்துக்கள், வழக்குடன் தொடர்புடைய காண்பிப்புப் பொருட்கள், சோதனை மற்றும் இலத்திரனியல் ரீதியாக சேமிக்கப்பட்ட தகவல்களின் கண்டுபிடிப்பு போன்றவை உட்பட ஆவணங்களின் உண்மைத்தன்மை உட்பட விளக்கத்துக்காக கண்டுபிடிக்கப்படுவதற்கு அல்லது வெளிப்படுத்தப்படுவதற்கு என்ன வகையான சான்று தேவைப்படுகின்றது? எனவே விளக்கம் தொடங்குவதற்கு முன்னர் விளக்கத்துக்காக திறத்தவர்கள் தகுந்தளவில் தயாராகுகின்றனர்.

(ஐ) ஆணைக்குழுக்கள் அல்லது வல்லுனர்களுக்காக எதிர்பார்க்கப்படுகின்ற தேவைப்பாடு மற்றும் என்ன வகையான தேவைப்பாடு;

(ஒ) இலத்திரனியல் ரீதியாக சேமிக்கப்பட்ட தகவல்களின் கண்டுபிடிப்பு உட்பட சான்றை வெளிப்படுத்துவதற்கு அல்லது கண்டுபிடிப்பு வேண்டுகோள்களுக்காக ஒரு முன்மொழியப்பட்ட அட்டவணை;

(ஓ) திட்டமிடப்பட்ட வழக்கு முகாமை கூட்டத்தின் திகதியின் 8 மாதங்களுக்குள் முன்விளக்கக் கூட்டம் மற்றும் விளக்கத் திகதிகள் என்பவற்றுக்காக இணைந்து உடன்பட்ட மூன்றுமுன்மொழியப்பட்ட திகதிகள்;

(ஔ) விளக்கம் தொடங்கிவிட்டால், விளக்கத்துக்கான எந்தத் தடையும் இருக்கமாட்டாது, அது முடியும் வரை நடாத்தப்படும் என்பதோடு விளக்கத்தை தடை செய்வதற்கான திகதி வழங்கப்பட மாட்டாது என்பவற்றைக் கருத்தில் கொண்டு விளக்கம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதற்கான ஒரு மதிப்பீடு; மற்றும்

(ஃ) முன்வைக்கப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக தனிப்பட்ட தகவல்களுடன் அறிந்த சாட்சிகளின் ஒரு பட்டியல்.

2. வழக்கு முகாமைக் கூட்டத்தில், சட்டவுரைஞர்களின் அறிவுரையுடன் ஒரு உறுதியான திகதி மற்றும் விளக்கம் நடைபெறுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் ஒரு முன்-விளக்க கூட்டத்துக்கான திகதியொன்று உட்பட விளக்கத்தின் ஊடாக வழக்கை நடாத்துவதற்காக ஒரு அட்டவணையை நீதமன்றம் உருவாக்கும். அவ்வாறு உருவாக்குகின்ற அட்டவணைக்கு ஏற்ப திறத்தவர்கள் செயற்பட வேண்டுமென வேண்டப்படுவர், எனவே வழக்கின் துரிதமான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதற்காகதலையிட்டு தேவையற்ற தாமதங்கள் இடம்பெறமாட்டாது என்பதற்கு திறத்தவர்களும் சட்டவுரைஞரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

3. வழக்கு முகாமை கூட்டத்தைத் தொடர்ந்து, கால அட்டவணை கட்டளை ஒன்றை நீதிமன்றம் வங்கும் என்பதோடு அந்தக்கட்டளையில் முடிவுத்திகதியை வலியுறுத்துவதற்கு முழுமையான எண்ணம் இருக்கும். சட்டவுரைஞரும் மற்றும் திறத்தவர்களும் அவர்களது வழக்காடல் செயற்பாடுகளை அதற்கேற்ப திட்டமிட வேண்டும். அதற்கு மேலதிகமாக, ஒரு விளக்கத்தின் தேவையற்ற செலவுகள் மற்றும் இடர்கள் என்பவற்றைத் தவிர்ப்பதற்காக முடியுமான விரைவில் விடயத்தைத் தீர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென திறத்தவர்கள் வலியுறுத்தப்படுகின்றனர்.

20….ஆம் ஆண்டு……………மாதம் …….ஆம் திகதியாகிய இன்று

………………………………………

வணிக மேல்நீதிமன்ற நீதிபதி/மாவட்ட நீதிபதி

**அட்டவணைப்படுத்தல் கட்டளை (வழக்கு முகாமை கட்டளை)**

**(படிவம் X2) –பிரிவு 78அ (2)**

**மேல் மகாண வணிக மேல் நீதமன்றத்தில்/…………………. மாவட்ட நீதமன்றத்தில்**

**வழக்கிலக்கம் :-…………………**

**………………………………..**

**வழக்காளி**

**……………………………….**

**எதிராளி**

வழக்கு முகாமைக்காக இந்த விடயத்தின் நிகழ்வுகளைத் திட்டமிடுகின்ற நோக்கத்துக்காக 20…. ஆம் ஆண்டு ……………. மாதம் ……ஆம் திகதி ஒரு வழக்கு முகாமைக் கூட்டத்தில் திறத்தவர்கள் சட்டவுரைஞருடன் நீதிமன்றத்தின் முன் தோன்றினர் என்பதோடு

திறத்தவர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு உரிய கவனத்தை நிதிமன்றம் செலுத்தியுள்ளது.

பின்வரும் திட்டமில் ஒழுங்குகள் இத்தால் மேற்கொள்ளப்படுகின்றன:

1. வழக்குரைகளின் திருத்தங்களுக்கு அல்லது திறத்தவர்களைச் சேர்ப்பதற்கு ஏதேனும் வேண்டுகோள் எவரேனும் மற்றும் சகல எதிர்த்தரப்பினர்களுக்கும் சேர்ப்பித்து எழுத்து மூலம் நீதிமன்றப் பதிவாளர் காரியாலயத்துக்கு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு இந்தக்கட்டளை தினத்துக்குப் பின்னர்………… நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் கோப்பிடப்பட வேண்டும். ஏதேனும் அத்தகைய வேண்டுகோள் அதன் ஒரு முன்மொழியப்பட்ட திருத்திய பிராது இணைக்கப்பட வேண்டும்.

2. அத்தகைய திறத்தவர்களினது உரிமைக் கோரிக்கை அல்லது எதிர்வாதத்தை ஆதரிப்பில் சகல ஆவணங்கள், அறிக்கைகள், ஆணைகள் மற்றும் ஏனைய சான்றுகள் என்பவற்றின் வெளியீடு, வெளிப்படுத்தல், பரிசோதனை மற்றும் பரிமாற்றல் என்பவை இந்தக் கட்டளைத் திகதியின் பின்னர் 4 மாதங்கள் பிந்தாமல் பூர்த்தி செய்யப்பட வேண்டும்;

3. எவர்களேனும் துறைசார் வல்லுனர்களின் அடையாளங்கள், அபிப்பிராயங்கள் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கான இறுதித் திகதி, இந்தக்கட்டளைத் திகதியிலிருந்து …………… ஆகும்.

4. ஒரு முன்-விளக்கக் கூட்டம் இந்த நீதிமன்றத்தில்விளக்கத்துக்கு …………… முன்னர் காலை/மாலை…….. மணிக்கு நடாத்துவதற்கு இத்தால் திட்டமிடப்பட்டுள்ளது;

5. இந்த விடயம் தொடர்பான விளக்கம் ………………………….ஆம் திகதி ……… திங்கட்கிழமை காலை/மாலை ………….. மணிக்கு ஆரம்பித்து தடையேதும் இல்லாமல் தொடர்ந்து நடைபெறும். இந்தத் திகதி உறுதியானதாகும் எனவே அத்தகைய தினத்தில் சாட்சிகளை அழைக்க வேண்டுமென சட்டவுரைஞர் பணிக்கப்படுகின்றார்.

6. விளக்கத்துக்கு அழைக்கப்படவுள்ள சாட்சிகளின் பட்டியல்களை சகல திறத்தவர்களும் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பதோடு ஆவணங்களின் பட்டியலை விளக்கத்துக்கு ………. நாட்களுக்கு முன்ன சமர்ப்பிக்க வேண்டும்.

7. திறத்தவர்கள் மத்தியஸ்தத்துக்கு உடன்பட்டால்,கொழும்பு மத்தியஸ்த நிலையத்துக்கு ஒரு நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுகின்ற மத்தியஸ்தர் அல்லது நீதிமன்றம் ஆற்றுப்படுத்துகின்றமத்தியஸ்தருக்கு உடன்படாதவரை, அவர்களின் விடயத்தைத் தீர்ப்பதற்கு ஒரு மத்தியஸ்தரைத் தெரிவு செய்வதற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கலந்துரையாட வேண்டும்;

8. ஒரு மத்தியஸ்தத்துக்கு உடன்படுகின்ற சந்தர்ப்பத்தில்,………………. ஆம் திகதி காலை/மாலை ……… மணிக்கு ஒரு தீர்ப்பனவுக்காக,திறத்தவர்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர் முன்னிலையில் அல்லது அத்தகைய நியமனம் மேற்கொள்ளப்படாவிட்டால் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர் அல்லது கொழும்பு மத்தியஸ்த நியைத்துக்கு முன்னிலையில் திறத்தவர்களைத் தோன்றச் செய்வதற்கு வேண்டுதல்;

9. விளக்கத் திகதியை பிற்போடுவதற்கான ஏதேனும் வேண்டுகோளானது விளக்கத்துக்கு ……… மாதங்களுக்கு முன்னர் எழுத்து மூலம் கோவையிடப்பட வேண்டும் என்பதோடு 1990ஆம் ஆண்டின் (மேன்முறையீட்டு படிமுறை) சட்டவிதிகளின் பகுதி V இன் சட்டவிதி 6 இல் தரப்பட்டவாறு வேண்டுகோளுக்கான சிறந்த, சட்டவாக்க மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட காரணத்தைக் காண்பிக்க வேண்டும் என்பதோடு எவையேனும் சகல பிற்போடுதல்களும் நீதிமன்றத்தின் தற்தீர்மானத்தின்படி மேற்கொள்ளப்படும்;

10. கேட்டலில் குறைபாடு அல்லது மொழியாற்றல் இன்மை அல்லது உடல் ரீதியான குறைபாடு, நகர்வதற்கு இயலாமை அல்லது சிரமம் காரணமாக ஏதேனும் கரிசனைஎன்பவற்றுக்காக எவரேனும் திறத்தவருக்கு ஒரு உரைபெயர்ப்பாளரைப் பயன்படுத்த தேவைப்பட்டால்,ஏதேனும் விசாரணை அல்லது விளக்கத்துக்கு முன்னர் நீதிமன்றப் பதிவாளரைத் தொடர்பு கொள்வதற்கு இத்தால் உடன்பாட்டுக்கு வரப்படுகின்றது என்பதோடு அதற்காக பொருத்தமான ஏற்பாடு மேற்கொள்ளப்படலாம்;

11. இந்த திட்டமிடல் ஒழுங்கில் குறிப்பிடப்படுகின்ற நியமிக்கப்படுகின்ற காலத்தை சகல திறத்தவர்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

20…. …………….மாதம் …….ஆம் திகதியாகிய இன்று

…………………………………………

வணிக மேல் நீதிமன்ற நீதிபதி/மாவட்ட நீதிபதி

படிவம் X3

இறுதி முன்-விளக்க கட்டளை- பிரிவு 79அ (25)

மேல் மாகாண வணிக மேல் நீதிமன்றத்தில்/மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கிலக்கம் :-…………………..

………………………….

வழக்காளி

………………………….

எதிராளி

விளக்கத்துக்காக இந்த விடயத்தின் நிகழ்வுகளைத் திட்டமிடுகின்ற நோக்கத்துக்காக 20…. ஆம் ஆண்டு ……………. மாதம் ……ஆம் திகதி ஒரு முன்-விளக்க கூட்டத்தில் திறத்தவர்கள் சட்டவுரைஞருடன் நீதிமன்றத்தின் முன் தோன்றினர் என்பதோடு ஒரு இணக்கத்துக்காக இந்த விடயமானது தற்போது காலை ……….. மணிக்கு ……………………………………………. வணிக நீதிமன்றத்தில்/ ………………….. மாவட்ட நீதிமன்றத்தில் ஆரம்பமாகின்ற விளக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, திறத்தவர்கள் பின்வரும் விடயங்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளனர் என்பதோடு திறத்தவர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு உரிய கவனத்தை நிதிமன்றம் செலுத்தியுள்ளது.

**இத்தால் பின்வருமாறு கட்டளையிடப்பட்டிருக்கின்றது:**

**(1) திறத்தவர்கள் மற்றும் அவர்களது சட்டவுரைஞர்**

பின்வருவோர் திறத்தவர்கள் மற்றும் அவர்களின் சட்டவுரைஞர் ஆவர்:

……………………………………………………………………………

……………………………………………………………………………

**(2) அனுமதிப்புக்கள்**

திறத்தவர்கள் அனுமதிப்பாக பின்வருவனவற்றை அனுமதித்திருக்கின்றனர்:

…………………………………………………………………………………….

…………………………………………………………………………………….

**(3) வாதிக்கப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சட்டப் பிரச்சினைகள்**

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

பின்வருவன வழக்கின் வாதிக்கப்பட்ட நிகழ்வுகளாக வழக்காளி சமர்ப்பிக்கின்றார்:

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

பின்வருவன இந்த வழக்கின் நிகழ்வுகளினால் முன்வைக்கப்பட்ட சட்ட ரீதியான பிரச்சினைகள் என வழக்காளி சமர்ப்பிக்கின்றார்:

…………………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………………

பின்வருவன வழக்கின் வாதிக்கப்பட்ட நிகழ்வுகளாக எதிராளி சமர்ப்பிக்கின்றார்:

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

பின்வருவன இந்த வழக்கின் நிகழ்வுகளினால் முன்வைக்கப்பட்ட சட்ட ரீதியான பிரச்சினைகள் என எதிராளி சமர்ப்பிக்கின்றார்:

…………………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………………

**(4) ஆவணங்களின் எண்பிப்புடன் விடுவித்தல்**

மேலதிக எண்பிப்பு அல்லது மெய்ப்பிப்பு என்பவற்றின் அவசியமில்லாமல் பின்வருவனவற்றுக்கு திறத்தவர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர்:

……………………………………………………………………………………………………..

## (5) சாட்சிகள்

வழக்காளி பின்வரும் ஆட்களை விளக்கத்தில் சாட்சிகளாக அழைக்கலாம்:

………………………………………..

……………………………………….

எதிராளி பின்வரும் ஆட்களை விளக்கத்தில் சாட்சிகளாக அழைக்கலாம்:

………………………………………..

……………………………………….

## (6) ஆவணங்கள்

வழக்காளி பின்வரும் ஆவணங்களை விளக்கத்தின் போது சமர்ப்பிக்கலாம்:

………………………………………..

……………………………………….

எதிராளி பின்வரும் ஆவணங்களை விளக்கத்தின் போது சமர்ப்பிக்கலாம்:

………………………………………..

……………………………………….

## (7) சத்தியக் கூற்றுக்களை பரிமாறுதல்

சாட்சிகளின் சத்தியக் கூற்றுக்கள் உட்பட உரிய திறத்தவர்களின் சத்தியக்கூற்றுக்களை ஏனைய திறத்தவர்களுக்கு அறிவித்தல் வழங்கி மேலே விடயம் 6 இல் குறிப்பிடப்பட்ட ஆதரிக்கின்ற ஆவணங்களுடன் விளக்க திகதிக்கு …….. நாட்கள் அல்லது …….. நாட்களுக்கு முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடுவதற்கு திறத்தவர்கள் உடன்படுகின்றனர்;

## (8) வல்லுனர் சாட்சிகள்

வழக்காளி பின்வரும் வல்லுனர் சாட்சிகளை விளக்கத்துக்கு அழைக்கலாம்:

………………………………………..

……………………………………….

எதிராளி பின்வரும் வல்லுனர் சாட்சிகளை விளக்கத்துக்கு அழைக்கலாம்:

………………………………………..

……………………………………….

## (9) விளக்கம் மற்றும் மதிப்பீடுகள்

வழக்காளியின் சாட்சிகளை அழைப்பதற்கு …….. நாட்கள் எடுக்கும் என் வழக்காளி மதிப்பிடுகின்றார்

எதிராளியின் சாட்சிகளை அழைப்பதற்கு …….. நாட்கள் எடுக்கும் என எதிராளி மதிப்பிடுகின்றார்

**(10)வாசிக்கப்படுவதற்குரிய வாக்கு மூலங்கள்/காண்பிக்கடுவதற்குரிய காணொலிகள்**

விளக்கம் நடைபெறுகின்ற போது வாசிக்கப்படுவதற்குரிய வாக்குமூலங்கள்/ காண்பிக்கப்படக்கூடிய காணொலிகள் என்பவற்றின் பட்டியல் ஒன்று பின்வருமாறு தரப்படுகின்றது என்பதோடு அத்தகைய வாசிக்கப்படக்கூடிய வாக்கு மூலங்கள்/ காண்பிக்கப்படக் கூடிய காணொலிகளுக்கு தேவைப்படக் கூடிய நேரத்தை மதிப்பிடுதல் பின்வருமாறு இருக்கும்.

வழக்காளி ……………………………

எதிராளி :……………………………..

…………………………… ……………………………

வழக்காளிகள் சார்பான சட்டவுரைஞர் எதிராளி சார்பான சட்டவுரைஞர்

அங்கீகரித்து கட்டளையிடப்பட்டு 20…..ஆம் ஆண்டு …………….. மாதம் …… ஆம் திகதியாகிய இன்றுகோவையிடப்பட்டது

…………………………………………….

வணிக மேல்நீதிமன்ற நீதிபதி/மாவட்ட நீதிபதி

**இணைப்பு 2 – நகல் - மத்தியஸ்த சட்டவிதிகள் - 2015**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டம்

2015 ஜனவரி,………….. இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

# மத்தியஸ்த சட்டவிதிகள் 2015

பிரதம நீதியரசர் மற்றும் உறுப்புரை 136 இன் கீழ் அவரால் நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளாலும் தயாரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 136ஆம் உறுப்புரையின் கீழ் **சட்டவிதிகள்**

**1………………………….**

**2………………………….**

**3…………………………**

**4………………………….**

**5………………………….**

2015 ஆம் ஆண்டு……………….. மாதம் ……..ஆம் திகதியாகிய இன்று கொழும்பில்,

இந்த சட்டவிதிகள் 2015 ஆம் ஆண்டின் மத்தியஸ்த சட்டவிதிகள் என எடுத்துரைக்கப்படலாம், என்பதோடு வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடுவதன் மூலம் பிரதம நீதியரசரினால் நியமிக்கப்படுகின்ற அத்தகைய தினத்தில் அமுலுக்கு வரும்.

**சட்டவிதி 1: தலைப்பு**

இந்த சட்டவிதிகள் 2015 ஆம் ஆண்டின் மத்தியஸ்த சட்டவிதிகள் என அழைக்கப்படும்.

**சட்டவிதி 2: ஏற்புடைமை**

இந்த சட்டவிதிகளானது, 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மாகாணங்கள் வணிக மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்)சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சகல நடவடிக்கைகள்,பிரயோகங்கள் மற்றும் நடவடிக்கை முறைகள் என்பவை தொடர்பாக நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கு மேல்மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154கா உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட வணிக மேல்நீதிமன்றத்தில், அல்லது (ii) அந்தச்சட்டத்தின் IVஅத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கு நீதிமுறைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது அந்த நீதிமன்றத்தில்நடவடிக்கைமுறைகளை மேற்கொள்ளலாம் என விசேடமாக இடமளிக்கின்ற ஏதேனும் ஏனைய சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஏனைய விடயம் தொடர்பில்நிலுவையிலுள்ள ஏதேனும் வழக்கு அல்லது ஏனைய நடவடிக்கை முறை தொடர்பிலான சகல மத்தியஸ்தத்துக்கும் ஏற்புடையதாகும்.

**சட்டவிதி : 3 மத்தியஸ்தரை நியமித்தல்**

(அ) ஒரு வழக்குக்குரிய அல்லது ஏனைய நடவடிக்கைமுறைக்குரிய திறத்தவர்களுக்கு இடையில் மத்தியஸ்தம் செய்வதற்காக சட்டவிதி 3 இல் குறிப்பீடு செய்யப்பட்ட மத்தியஸ்தர்களின் குழாமிலிருந்து தனி மத்தியஸ்தரின் பெயரில் அத்தகைய திறத்தவர்கள் உடன்படலாம் என்பதோடு நீதிமன்றம் வழக்கை அல்லது நடவடிக்கைமுறைகளை பொருத்தமானது எனத் தீர்மானிக்கின்றவாறு மத்தியஸ்த நிலையத்துக்கு ஆற்றுப்படுத்தும்; அல்லது

(ஆ) திறத்தவர்களின் குழுக்கள் இரண்டு அல்லது அதற்கு மேலதிகமாக இருக்குமிடத்து, மற்றும் ஒரு தனிமத்தியஸ்தருக்கு உடன்படாதவிடத்தும் அவர்களுக்கிடையில் மத்தியஸ்தம் செய்வதற்காக சட்டவிதி 3 இல் குறிப்பீடு செய்யப்பட்ட மத்தியஸ்தர்களின் குழாத்திலிருந்து மத்தியஸ்தரை நீதிமன்றம் நியமிக்கலாம் என்பதோடு நீதிமன்றம் பொருத்தமானது எனக் கருதுகின்றவாறு மத்தியஸ்த நிலையத்துக்கு வழக்கை அல்லது நடவடிக்கைமுறைகளை ஆற்றுப்படுத்தும்.

(இ) (அ) பிரிவின் கீழ் ஒரு தனி மத்தியஸ்தருக்கு திறத்தவர்கள் உடன்படுகின்றவிடத்து அல்லது (ஆ) பிரிவின் கீழ் நிதிமன்றத்தினால் மத்தியஸ்தர் நியமிக்கப்படுகின்றவிடத்து, சட்டவிதி 4 இல் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமைகளை மத்தியஸ்தர் அவசியமாகக் கொண்டிருக்க வேண்டும் ஆனால் சட்டவிதி 5 இல் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையீனங்களுக்கு உட்படுகின்ற ஆளொருவராகமத்தியஸ்தர் இருக்கக் கூடாது.

**சட்டவிதி 4: மத்தியஸ்தர்கள் குழாம்**

(அ) வழக்குகளில் அல்லது நடவடிக்கைகளில் திறத்தவர்களுக்கிடையில் மத்தியஸ்தரை நியமிக்கின்ற நோக்கத்துக்காக உரிய பயிற்சி நிலையத்திலிருந்து மத்தியஸ்த பயிற்சி கிடைக்கப் பெற்ற பின்னர் நீதி சேவை ஆணைக்குழுவுடன் பதிவு செய்திருக்கின்ற மத்தியஸ்தர்களிலிருந்து மத்தியஸ்தர்கள் குழாம் ஒன்றை நீதி சேவை ஆணைக்கழுவின் செயலாளர் தயார் செய்ய வேண்டும் என்பதோடு அதனை அங்கீகரிப்புக்காக பிரதம நீதியரசருக்கு சமர்ப்பிக்வும் வேண்டும். சொல்லப்பட்ட மத்தியஸ்த குழாத்துக்கு பிரதம நீதியரசரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர்,மாற்றத்துடன் அல்லது மாற்றமில்லாமல், அத்தகைய மத்தியஸ்தர்கள் குழாத்தை ஒவ்வொரு நீதித்துறை வலையத்தில் உள்ள மாகாண மேல்நீதிமன்ற நீதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு அதனை அறிவித்தல் பலகையிலும் அவர் காட்சிப்படுத்துவதோடு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம்/மாவட்ட நீதிபதிகள் சட்டத்தரணிகள் சங்கம்/ நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள்

சங்கம் மற்றும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்என்பவற்றுக்கு பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

(ஆ) மத்தியஸ்தர்களின் தகைமைகளின் விபரங்கள் மற்றும் அவர்களது சட்ட அல்லது துறைசார் அல்லது பல்வேறு துறைகளில் விஞ்ஞான ரீதியான அல்லது தொழிநுட்ப ரீதியான அனுபவம் மற்றும் தகவுடைய பயிற்சி நிலையங்களிலிருந்து பெற்ற மத்தியிஸ்தத்துக்கான பயிற்சி எனபவற்றைத் தருகின்ற இணைப்பை மத்தியஸ்த குழாம் கொண்டிருக்க வேண்டும்.

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் கீழ் நியமிக்கப்படுகின்ற மத்தியஸ்தர்கள்குழாம் (i) நியமிக்கப்படுகின்ற திகதியிலிருந்து 3 வருடங்களுக்காக சாதாரணமாக இருக்க வேண்டும் என்பதோடு மத்தியஸ்தர்கள் குழாமின் அல்லது எவரேனும் மத்தியஸ்தரின் மேலதிக நீடிப்பானது விடயத்துக்கு ஏற்ப, பிரதம நீதியரசரின் முன் அங்கீகாரத்துடன் நீதி சேவை ஆணைக்குழுவின் தற்றுணிபில் மேற்கொள்ளப்படும்.

**சட்டவிதி 5: சட்டவிதி 3 இன் கீழ் குழாமமைக்கப்படுவதற்கான ஆட்களின் தகைமைகள்**

மத்தியஸ்தர்கள் குழாமில் பின்வரும் ஆட்கள் பட்டியலிடப்படலாம்:

1. இலங்கை உயர் நீதி மன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகள்: அல்லது

2. மேல் நீதிமன்றங்களின் ஓய்வு பெற்ற நீதிபதிகள்: அல்லது
3. ஆகக் குறைந்தது 15 வருடங்கள் அனுபவத்துடன் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள் அல்லது நீதிவான்கள்: அல்லது

4. தொழில் நியாய சபைகளின் தலைவர்களாக ஆகக் குறைந்தது 15 வருடங்கள் அனுபவத்துடன் ஓய்வு பெற்ற தொழில் நியாய சபைகளின் தலைவர்கள்: அல்லது

5. உயர் நீதி மன்ற அல்லது மேன்முறையீட்டுநீதிமன்ற அல்லது மேல் நீதிமன்ற அல்லது மாவட்ட நீதிமன்ற மட்டத்தில் சட்டத்தரணி அந்தஸ்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்துடன் உள்ள சட்டத்தரணிகளாகக் கடமையாற்றுபவர்கள்; அல்லது

6. ஆகக் குறைந்தது 15 வருடங்கள் உரிய துறையில் அனுபவத்துடன் கூடிய வல்லுனர்கள் அல்லது ஏனைய துறைசார் வல்லுனர்கள்;

   மற்றும்

7. தகவுடைய பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற கட்டாய மத்தியஸ்த பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்திருக்கின்ற அத்தோடு தகவுடைய ஒரு மத்தியஸ்தராக நீதி சேவை ஆணைக்குழுவில் பதிவு செய்திருக்கின்ற மேலே குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆள்.

**சட்டவிதி 6: ஆட்களின் தகைமையின்மை**

பின்வரும் ஆட்கள் மத்தியஸ்தர்களாக குழாமமைக்கப்படுவதற்காக தகைமையற்றவராகக் கருதப்படும்:

(அ) கடன் தீர்ப்பதற்கு வகையற்றவர் என நீதித்தீர்ப்புப் பெற்ற எவரேனும் ஆள் அல்லது ஆட்கள்; அல்லது

(ஆ) ஒரு குற்றவியல் நீதிமன்றத்தினால் ஒழுக்கக்கேட்டுக்கு உட்பட்டவர் என குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு அத்தகைய குற்றச்சாட்டுக்கள் நிலுவையாக இருத்தல்; அல்லது

(இ) ஒழுக்கக் கேட்டுக்கு உட்படுகின்ற ஏதேனும் தவறுக்காக ஒரு குற்றவியல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்கள்; அல்லது

(ஈ) உரிய ஒழுக்காற்று நடவடிக்கை அதிகார சபையினால் எவரேனும் ஆளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நிலுவையில் இருத்தல் என்பதோடு அதற்காக தண்டனை வழங்குவதற்கு காரணமாக இருத்தல்.

(உ) பிணக்கின்(பிணக்குகளின்) விடயத்துடன் அக்கறையுள்ள அல்லது தொடர்புடைய எவரேனும் ஆள் அல்லது திறத்தவர்களின் எவரேனும் ஒருவர் அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஆள், அத்தகைய ஆட்சேபனை சகல திறத்தவர்களாலும் எழுத்து மூலம் விட்டுக் கொடுக்காத வரை; அல்லது

(ஊ) வழக்கில் அல்லது ஏனைய நடவடிக்கைகயில்(களில்) எவரேனும் திறத்தவர்களுக்காக தென்படுகின்ற எவரேனும் சட்டத்தரணி; அல்லது

(எ) பிரதம நீதியரசரின் அங்கீகாரத்துடன் நீதி சேவை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படக் கூடியவாறான எவரேனும் அத்தகைய ஏனைய வகைப்பிரிவைச் சேர்ந்த ஆட்கள்.

**சட்டவிதி 7: குழாத்துக்கு சேர்த்தல் அல்லது குழாத்திலிருந்து நீக்கல்**

பிரதம நீதியரசரின் முன் அங்கீகாரத்துடன் நீதி சேவை ஆணைக்குழுவின் செயலாளர்அதனது/அவரது தற்றுணிபில் காலத்துக்குக் காலம் எவரேனும் ஆளை மத்தியஸ்தர்கள் குழாத்துக்கு சேர்க்கலாம் அல்லது அதிலிருந்து நீக்கலாம்.

**சட்டவிதி 8: முன்னுரிமை**

சட்டவிதி 3 இல் குறிப்பீடு செய்யப்பட்ட மத்தியஸ்தர்களின் குழாத்திலிருந்து எவரேனும் ஆளை நிதிமன்றம் நியமிக்கின்ற அதேநேரம் சம்பந்தப்படுகின்ற பிணக்கை(களை) தீர்ப்பதற்காக அவரது பொருத்தப்பாட்டையும் கருத்தில் கொள்ளும் என்பதோடு மத்தியஸ்தர்களின் குழாத்துக்கான இணைப்பில் உள்ளடங்குகின்ற மத்தியஸ்தர்களின் தகைமைகளின் விபரங்களைக் கருத்தில் கொண்டு வெற்றிகரமான மத்தியஸ்தை பூர்த்தி செய்திருக்கின்ற ஆளுக்கு அல்லது விசேட தகைமையுள்ள ஆள் அல்லது மத்தியஸ்தத்தில் அனுபவமுள்ள விசேட தகைமை அல்லது அனுபவம் உள்ள ஆளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

**சட்டவிதி 9: சில தகவல்களை வெளிப்படுத்துவதற்கான மத்தியஸ்தரின் கடமை**

(அ) ஒரு ஆள் அவரின் மத்தியஸ்தராக முன்மொழியப்பட்ட நியமனத்துடன் தொடர்பாக அணுகுகின்ற போது அவரது சுயாதீனத்தன்மை அல்லது பக்கச்சார்பின்மைக்காக ஒரு நியாயமான சந்தேகத்தை எழுப்புவதற்குச் சாத்தியமாக உள்ள ஏதேனும் சூழ்நிலையை இருந்தால் அவர் அதனை வெளிப்படுத்த வேண்டும்;

(ஆ) ஒவ்வொரு மத்தியஸ்தரும் அவரது நியமன தினத்திலிருந்தும் மற்றும் மத்தியஸ்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதும் மேலே (அ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுேனும் சூழ்நிலை நிழவுகின்ற போது அது தொடர்பாக தாமதமில்லாமல் திறத்தவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

**சட்டவிதி 10: நியமனத்தை மீளப் பெறுதல்**

சட்டவிதி 9 இன் கீழ் மத்தியஸ்தரினால் பூர்த்தி செய்யப்பட்ட தகவல்கள் மீது அல்லது திறத்தவர்களிடமிருந்து அல்லது வேறு ஆட்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஏனைய தகவல்கள் மீது நிலுவையில் உள்ள வழக்கு அல்லது நடவடிக்கைகளில், மத்தியஸ்தரின் சுயாதீனம் அல்லது பக்கச்சார்பின்மைக்கு ஒரு நியாயமான சந்தேகத்தை அத்தகைய தகவல்கள் எழுப்புகின்றது என நீதிமன்றம் திருப்தியடைந்தால், அத்தகைய நியமிப்பை நீதிமன்றம் மீளப்பெற்று அவருக்குப் பதிலாக மத்தியஸ்தரர் குழாமில் இருந்து வேறு ஒரு மத்தியஸ்தரைப் பதிலீடு செய்யும்.

**சட்டவிதி : மத்தியஸ்த நடவடிக்கைமுறை**

(அ) மத்தியஸ்த நடைமுறைகளை நடாத்துவதில் மத்தியஸ்தரினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை மீது திறத்தவர்கள் உடன்படலாம்.

(ஆ) மத்தியஸ்தரினால் பின்பற்றப்பட வேண்டிய ஏதேனும் குறிப்பிட்ட நடவடிக்கைமுறை மீது திறத்தவர்கள் உடன்படாதவிடத்து, இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்படுகின்ற நடவடிக்கைமுறையை மத்தியஸ்தர் பின்பற்ற வேண்டும் குறிப்பாக;

(i) மத்தியஸ்தர் திறத்தவர்களுடன் கலந்தாலோசித்து ஒரு நேர அட்டவணை, திகதிகள் மற்றும் ஒவ்வொரு மத்தியஸ்த அமர்வினதும் நேரம் என்பவற்றை நிரனயித்துக் கொள்ள வேண்டும்என்பதோடு அதில் சகல திறத்தவர்களும் சமுகமளிக்க வேண்டும்;

(ii) மேல்நீதிமன்ற நீதிபதியினால் அல்லது மாவட்ட நீதிபதியினால் குறித்துரைக்கப்படுகின்ற நிலையத்தில் அல்லது திறத்தவர்கள் மற்றும் மத்தியஸ்தர் கூட்டாக உடன்படுகின்ற இடத்தில் மத்தியஸ்தர் மத்தியஸ்தத்தை நடாத்த வேண்டும்;

(iii) மத்தியஸ்தர் திறத்தவர்களோடு கூட்டான அல்லது தனியான கூட்டங்களை அல்லது தனிப்பட்ட கூட்டங்களை நடாத்தலாம்;

(iv) ஒரு அமர்வுக்கு பத்து நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு திறத்தவரும் அதனுடன் தொடர்புடைய, தீர்க்கப்படுவதற்குரிய மற்றும் மத்தியஸ்தர் பிரச்சினையை விளங்கிக் கொள்வதற்காக நியாயமாகத் தேவைப்படுகின்ற அத்தகைய பிரச்சினைகள் தொடர்பில் அதன் நிலைமை மற்றும் சகல தகவல்களையும் உள்ளடக்கி பிரச்சினைகளைக் குறிப்பிடுகின்ற சுருக்கமான ஞாபகக் குறிப்பொன்றை மத்தியஸ்தருக்கு வழங்க வேண்டும்; அத்தகைய ஞாபக்குறிப்பு திறத்தவர்களுக்கிடையில் புரிந்துணர்வு அடிப்படையில் பரிமாரிக் கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், பொருத்தமான/உரிய வழக்குகளில் 10 நாட்கள் என்ற காலத்தை மத்தியஸ்தரின் தற்றுணிபில் குறைக்கப்படலாம்.

(v) தீர்க்கப்படுவதற்குரிய பிரச்சினைகளுடன் தொடர்புடைய மத்தியஸ்தரினால் வேண்டப்படக் கூடியவறான அத்தகைய ஏனைய தகவல்களை மத்தியஸதருக்கு ஒவ்வொரு திறத்தவரும் வழங்க வேண்டும்.

**சட்டவிதி 12: சான்றுகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது குடியியல் நடவடிக்கைக் கோவையினால் மத்தியஸ்தர் பிணிப்புடையவராகமாட்டார்**

மத்தியஸ்தர்,சான்றுகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது குடியியல் நடவடிக்கைக் கோவையினால் பிணிப்புடையவராகமாட்டார், ஆனால் திறத்தவர்களின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள்,ஏதேனும் இருந்தால் வர்த்தகத்தின் பயன்பாடுகள், மற்றும் பிணக்கின்(களின்) சூழ்நிலைகள்என்பவற்றுக்கு கரிசனை கொண்டு நீதியும் நியாயமுமான கோட்பாடுகளினால் வழிகாட்டப்பட வேண்டும்.

**சட்டவிதி 13: திறத்தவர்களின் பிரதிநிதித்துவம்**

மத்தியஸ்தரினால் அறிவித்தல் வழங்கப்படுகின்ற அமர்வுகளில் அல்லது கூட்டங்களில் சாதாரணமாக திறத்தவர்கள் தனிப்பட்ட முறையில் அல்லது அவர்களின் முகவர் அல்லது உரிமைப்படுத்தப்பட்ட சட்டத்தரணியின் ஊடாக பங்குபற்ற வேண்டும் எவ்வாறாயினும், அத்தகைய அமர்வுகளில் அல்லது கூட்டங்களில் ஒரு சட்டத்தரணியினால் பிரநிதித்துவம் செய்வதற்கு அவர்கள் தகவுடையவர்களாவர்.

**சட்டவிதி 14: உரிய திகதிகளில் அமர்வுகளில் அலலது கூட்டங்களில் திறத்தவர்கள் பங்குபற்றாமைக்கான விளைவுகள்**

மத்தியஸ்தரினால் அறிவித்தல் வழங்கப்பட்ட ஒரு அமர்வில் அல்லது ஒரு கூட்டத்தில் வேண்டுமென்றே ஒரு செயலின் காரணமாக ஒரு திறத்தவர் பங்குபற்றுவதற்குத் தவறினால், மற்றத் திறத்தவர் அல்லது மத்தியஸ்தர் நிலுவையிலுள்ள வழக்கில் அல்லது நடவடிக்கையில் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும்,

அந்த வழக்கில்,வழக்கின் நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு பொருத்தமான வழிகாட்டல்களை நீதிமன்றம் வழங்கலாம்.

**சட்டவிதி 15: நிருவாக ரீதியான உதவி**

நியமிக்கப்படுகின்ற மத்தியஸ்த நிலையம், மத்தியஸ்த நடவடிக்கைகளை நடாத்துவதில் வசதிகள் செய்வதற்கு சகல நிருவாக ரீதியான உதவிகளையும் ஏற்பாடு செய்ய வேண்டும் மற்றும் அல்லது தவறுகின்றவிடத்து, மத்தியஸ்தர் திறத்தவர்களின் சம்மதத்துடன், ஒரு பொருத்தமான நிறுவனத்தினால் அல்லது ஆளினால் நிருவாக உதவிக்காக ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**சட்டவிதி 16: மத்தியஸ்தரின் வகிபாகம்**

(அ) திறத்தவர்களினாலே பிணக்கை/பிணக்குகளை தன்னார்வமாகத் தீர்த்துக் கொள்வதற்கும் அத்தோடு ஒரு திறத்தவரின் கருத்தை மற்றத்திறத்தவருடன் பகிர்ந்து கொள்வதற்கும்ஊக்குவிப்பதற்கு மத்தியஸ்தர் முயற்சிக்க வேண்டும், பிரச்சினைகளை அடையாளம் காணுதல், தவறான புரிந்துணர்வுகளைக் குறைத்தல், முன்னுரிமைகளை தெளிவாக்குதல், உடன்பாட்டுக்கான விடயங்களை அறிதல் மற்றும் பிணக்கை/பிணக்குகளை தீர்ப்பதற்கு ஒரு முயற்சியில் வாய்ப்புக்களை உருவாக்குதல்,திறத்தவர்களுக்கு பயனளிக்கக் கூடிய தீர்மானத்துக்கு திறத்தவர்களின் பொறுப்பு என்பதை வலியுறுத்தல்; மத்தியஸ்தர் திறத்தவர்கள் மீது தீர்ப்பதற்கான எவையேனும் நியதிகளை விதித்தல் கூடாது.

(ஆ) மத்தியஸ்தர்,

(i) ஒரு தீர்ப்பனவை மேற்கொள்வதற்கு திறத்தவர்களை வழிகாட்டுவதில் ஓர் ஊக்குவிப்பாளராகச் செயற்படலாம்;

(ii) ஒன்றாக, தனியாக அல்லது எதேனும் ஒன்று சேர்தலில் திறத்தவர்களை சந்தித்தல் அல்லது தொடர்புகொள்ளலாம்; மற்றும்

(iii) மத்தியஸ்தத்தின் ஏதேனும் கட்டத்தில் பிணக்கினைத் தீர்த்துவைப்பதற்காக முன்மொழிவுகளை மேற்கொள்ளலாம்

(இ) மத்தியஸ்தருக்கு/மத்தியஸ்தர்

(i) மத்தியஸ்தத்தின் ஏதேனும் கட்டத்தில் மத்தியஸ்தத்தின் விளைவைத் தீர்மானிப்பதற்கான தத்துவம் இல்லை,
(ii) பிணக்கின் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு மத்தியஸ்தத்தின் போது திறத்தவர்களின் நியாயமான உபசரிப்பை பராமரிக்க வேண்டும்.

**சட்டவிதி 17: தீர்மானத்தை மேற்கொள்வதற்கான திறத்தவர்களின் தனியான பொறுப்பு**

பிணக்கை/பிணக்குகளை தீர்த்துக் கொள்வதற்கு ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு மாத்திரமே மத்தியஸ்தர்ஊக்குவிப்பளிக்கின்றார் என திறத்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதோடு அவர் ஏதேனும் தீர்வை விதிப்பதில்லை என்பதோடு அவருக்கு அவ்வாறு விதிக்கவும் முடியாது அல்லது மத்தியஸ்தமானது ஒரு தீர்வுக்கான விளைவை ஏற்படுத்தும் என அவர் உத்தரவாதம் அளிப்பதுமில்லை அவ்வாறு உத்தரவாதமளிக்கவும் முடியாது. மத்தியஸ்தர் திறத்தவர்கள் மீது ஏதேனும் தீர்மானத்தை விதிப்பதில்லை.

**சட்டவிதி 18: மத்தியஸ்தத்தை நிறைவுசெய்வதற்கான கால வரையறை**

மத்தியஸ்தர்களுக்கு முன்னால் திறத்தவர்களின் முதல் தோன்றுதலுக்காக நியமிக்கப்பட்ட திகியிலிருந்து 90 நாட்களுக்குள் மத்தியஸ்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதோடு மத்தியஸ்தர்களுக்கு முன்னால் திறத்தவர்களின் முதல் தோன்றுதலுக்காக நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 90 நாட்கள் காலவதியாகிய பின்னர்,விடயத்தை ஆற்றுப்படுத்திய நீதிமன்றம், ஒன்றில் சுயமாக அல்லது எவரேனும் திறத்தவர்களின் வேண்டுகோள் மீது மற்றும் சகல திறத்தவர்களையும் விசாரணை செய்த பின்னர், கால விரிவாக்கம்

அவசியமானது அல்லது பயனுள்ளது என நீதிமன்றம் கருதி காலத்தை நீடிக்காதவரை மத்தியஸ்தம் முடிவுறுத்தப்பட்டதாகக் கருதப்படும், ஆனால் அத்தகைய கால நீடிப்பு வழங்கப்பட்டால் அது முப்பது நாட்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்காக அத்தகைய நீடிப்பு வழங்கப்படும்.

**சட்டவிதி 19: மத்தியஸ்தரினால் இரகசியத்தைப் பேணல்**

(அ) ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு திறத்தவர்களுக்கு அல்லது அவர்களில் சிலருக்கு இயலுமாக இருக்கின்ற நோக்கத்துக்காக மத்தியஸ்தர் பொருத்தமானது எனக் கருதுகின்ற ஏதேனும் நடவடிக்கைமுறையை அவர் கைக்கொள்ளலாம். அதற்கேற்ப,தனிப்பட்ட முறையில் சகல திறத்தவர்களுடனும் மற்றும்/அல்லது அவர்களின் சட்டத்தரணிகளோடு, அல்லது ஒரு திறத்தவரோடு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திறத்தவர்களோடு முகவர் தனியாக அவர்களது சட்டத்தரணி ஆஜராகி அல்லது ஆஜராகாமல் வழக்கிற்கு உட்படுகின்ற நிகழ்வு மற்றும் சட்டம் மற்றும் அதனோடு தொடர்புடைய சகல விடயங்களின் வினாக்களை கலந்துரையாடலாம்.ஒரு திறத்தவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திறத்தவர்கள் தீர்ப்பதற்கு விரும்புகின்ற நியதிகள் மீது அவர் முடிவு செய்யலாம்,அவருக்கு வெளிப்படுத்தப்பட்ட அல்லது அவருடன் கலந்துரையாடிய சில விடயங்கள் அல்லது நியதிகளைப் புரிந்து கொண்டுஅவர் அவ்வாறு செய்யலாம் ஆனால் அவர்களின் அங்கீகாரம் இல்லாமல் அவற்றை எவரேனும் வேறு திறத்தவருக்கு வெளிப்படுத்தக் கூடாது.

(ஆ) மத்தியஸ்த நடவடிக்கைமுறைகளை எந்த வித ஒலிப்பதிவு அல்லது ஒளிப்பதிவுகளை மேற்கொள்ளக் கூடாது.

(இ) மத்தியஸ்தரினால் திறத்தவர்களின் அல்லது சாட்சிகளின் கூற்றை பதிவு செய்யக் கூடாது.

**சட்டவிதி 20: திறத்தவர்களினால் இரகசியத்தைப் பேணல்**

(அ) மத்தியஸ்த அமர்வுகளை நடாத்துகின்ற போது சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் மற்றும் வெளிப்படுத்தப்பட்ட அல்லது கலந்துரையாடப்பட்ட எவையேனும் ஏனைய விடயங்கள் தொடர்பில் இரகசியத்தை பராமரிப்பதற்கு பிணக்குக்கு உரிய ஒவ்வொரு திறத்தவரினதும் மற்றும் ஒவ்வொரு மத்தியஸ்தரினதும் கடமையாக இருக்கும்.

(ஆ) கீழ்க்குறிப்பிடப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தவிர,திறத்தவர், மத்தியஸ்தர் மற்றும் மத்தியஸ்தத்தை நடாத்துவதில் ஈடுபடுகின்ற ஏனைய வேறு ஆட்கள் போன்றவர்களினால் மத்தியஸ்தத்துக்குத் தொடர்பான தகவல்களை இரகசியமாக வைத்திருக்க வேண்டும்;

(i) வெளிப்படுத்துவதற்கு சகல திறத்தவர்களும் உடன்படுதல் மற்றும் தகவல்கள் மத்தியஸ்தர் தொடர்புடையதாக இருக்கின்ற விடத்து வெளிபடுத்துவதற்கு மத்தியஸ்தர் உடன்படுதல்;

(ii) வெளிப்படுத்தல் சட்டத்தால் வேண்டப்படுதல்;

(iii) ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கையை மேற்கொள்கின்ற அல்லது செயற்படுத்துகின்ற நோக்கங்களுக்காக வெளிப்படுத்தல் தேவைப்படுதல்;

(vi) ஒரு தவறுதலான உரிமைக்கோரிக்கைக்கு பதிலளிப்பதற்கு ஒருமத்தியஸ்தருக்கு வெளிப்படுத்தல் தேவைப்படுதல்.

ஆயினும், எவ்வாறாயினும், பின்வரும் சந்தர்ப்பங்களில் அது ஏற்புடையதாகமாட்டாது;

(i) அது பகிரங்கமாக இருக்குமிடத்து;

(ii) இரகசியமானது என திறத்தவர்கள் அவர்களின் நடத்தையால்வெளிப்படுத்தாதிருக்குமிடத்து: அல்லது

(iii) இந்தச் சட்டவிதியின் கீழ் வேண்டப்பட்ட ஒரு வெளிப்படுத்தலை மேற்கொள்வதற்கு மத்தியஸ்தர் தவறியிருந்தால்,தீர்மானம் மேற்கொள்வதற்கு அது தொடர்புடையதாக இருந்த ஒரு விடயம்.

**சட்டவிதி 21: மத்தியஸ்த அமர்வு ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட தகவல் அல்லது கூற்றின் ஏற்கத்தக்க தன்மை**

(அ) ஒரு மத்தியஸ்த அமர்வில் எவரேனும் திறத்தவரால் வெளிப்படுத்தப்படாத தகவல் அல்லது மேற்கொள்ளப்படாத கூற்று கீழே குறிப்பிடப்படுகின்றவை உட்பட, ஏதேனும் நீதித்துறை அல்லது நிருவாக நடவடிக்கைச் சான்றில் தெரியப்படுத்தப்படலாம் அல்லது அனுமதிக்கப்படலாம்-

(i) ஒரு வணிகரீதியான பிணக்கொன்றை மத்தியஸ்தம் செய்வதற்கு ஒரு திறத்தவரினால் ஓர் அழைப்பு, பிணக்கை தீர்ப்பதற்கு ஒரு திறத்தவரின் விருப்பம் அல்லது மறுப்பு, மத்தியஸ்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் திறத்தவர்களுக்கிடையில் பரிமாறப்பட்ட தகவல்கள் மற்றும் பிணக்கைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் செய்வதற்கான ஏதேனும் உடன்படிக்கை;

(ii) தனியே மத்தியஸ்தம் செய்வதற்கான நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணம்;

(iii) மத்தியஸ்தத்தின் போது பிணக்கின் சாத்தியமானஒரு தீர்ப்பனவுக்கு ஒரு திறத்தவரினால் வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் அல்லது மேற்கொள்ளப்படுகின்ற ஆலோசனைகள்;

(iv) மத்தியஸ்தத்தின் போது ஒரு திறத்தவரினால் மேற்கொள்ளப்படுகின்ற கூற்றுக்கள் அல்லது ஏற்புக்கள்;

(v) மத்தியஸ்தரினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்ப்பனவுக்கான கூற்றுக்கள் அல்லது முன்மொழிவுகள்

(vi) மத்தியஸ்தரினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்ப்பனவுக்கான ஒரு பிரேரணையை ஏற்றுக் கொள்வதற்கான ஒரு விருப்பத்தை ஒரு திறத்தவர் குறிப்பிடுகின்ற நிகழ்வு:

(vii) ஒரு திறத்தவர் அல்லது மத்தியஸ்தர் மத்தியஸ்தத்தை முடிவுறுத்துகின்ற நிகழ்வு;

(ஆ) பின்வருமாறு தேவைப்படுகின்ற அளவுக்கு, மேலே 6.8.1 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல் சான்றில் அனுமதிக்கப்படலாம்,

(i) சட்டத்தினால்;

(ii) ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கையை மேற்கொள்கின்ற அல்லது செயற்படுத்துகின்ற நோக்கத்துக்காக;

(iii) ஒரு தவறான நடத்தையின் உரிமைக்கோரிக்கைக்கு மத்தியஸ்தரினால் பதிலளிப்பதற்கு;

(iv) மத்தியஸ்தத்துக்கு தொடர்புடைய சகல திறத்தவர்களும்சம்மதித்தல் மற்றும் தகவல் மத்தியஸ்தருடன் தொடர்புடையதாக இருந்தால் மத்தியஸ்தர் சம்மதித்தல்.

**சட்டவிதி 22: மத்தியஸ்த அமர்வொன்றில் கூற்றுக்களை வழங்குகின்ற ஆட்களின் சிறப்புரிமை**

மத்தியஸ்த அமர்வொன்றில் கூற்றுக்களை வழங்குகின்ற ஒவ்வொரு ஆளுக்கும், அத்தகைய கூற்று தொடர்பாக,ஒரு சட்டநீதிமன்றத்தின் முன்னால் சான்று வழங்குகின்ற ஒரு சாட்சியாளருக்கு உரித்துடையஅத்தகைய சான்று தொடர்பாக தகவுடைய சகல சிறப்புரிமைகளுக்கும் உரித்துண்டு.

**சட்டவிதி 23: மத்தியஸ்தமானது நீதிமன்ற நடவடிக்கை முறைகளை பிற்போடுவதற்கோ அல்லது இடைநிறுத்துவதற்கோ தகவுடையதாகமாட்டாது.**

ஏதேனும் மத்தியஸ்த நடவடிக்கைமுறைகளின் ஆரம்பம், வழக்கு முகாமைக் கூட்டம், முன்-விளக்க படிமுறைகள் மற்றும் முன்-விளக்க கூட்டங்கள் என்பவை உட்பட நீதிமன்ற நடவடிக்கைமுகைளை

இடைநிறுத்துவதற்கு அல்லது பிற்போடுவதற்கு கரிசனை கொள்ளப்படமாட்டாது என்பதோடு எவையேனும் மத்தியஸ்த நடவடிக்கைமுறைகளின் காரணத்தினால் நீதிமன்ற நடவடிக்கைமுறைகளை நிறுத்துகின்ற அல்லது பிற்போடுகின்ற ஏதேனும் கட்டளையை வெளியிடப்படவும் மாட்டாது.

**சட்டவிதி 24: மத்தியஸ்தரினால்/இணக்கப்பாட்டளரினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க விதிகள்.**

**மத்தியஸ்தர்:**

1. இத்தகைய சட்டவிதிகளை கண்டிப்பாகவும் உரிய ஊக்கத்துடனும் பின்பற்றவும் மற்றும் நிறைவேற்றவும் வேண்டும்;
2. ஒரு மத்தியஸ்தரின்/இணக்கப்பாட்டாளரின் இல்லாததாக மாறுகின்ற நடத்தையென நியாயமாகக் கருதக்கூடியஏதேனும் செயற்பாட்டை அல்லது நடத்தையை மேற்கொள்ளாதிருத்தல்;
3. மத்தியஸ்த/இணக்கப்பாட்டு செயன்முறையின் நேர்மை மற்றும் நியாயத்தன்மையை என்பவற்றில் உறுதியாகக் கடைபிடித்தல்;
4. மத்தியஸ்தத்தில்/இணக்கப்பாட்டில் திறத்தவர்கள் ஈடுபடுவதை உறுதி செய்தல் மற்றும் செயன்முறையின் நடவடிக்கைப் பிரிவுகள் நியாயமாக அறிவிக்கப்பட்டு போதுமானதாக புரிந்து கொண்டிருத்தல்;
5. குறித்தளிக்கப்படுகின்ற விடயத்தை துறைசார்ந்த வல்லமை முறையில் பொறுப்பேற்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவர் தகைமையுடையவர் என அவர் சுயமாகவே திருப்தியடைதல்;
6. பக்கச்சார்பின்மையைப் பாதிக்கக் கூடியதற்கு சாத்தியமான ஏதேனும் அக்கறையை அல்லது உறவுமுறையை அல்லது பக்கச்சார்பின்அல்லது பாரபட்சத்தின் தோற்றத்தை தரக்கூடியஏதேனும் இருந்தால் வெளிப்படுத்தல்;
7. திறத்தவர்களுடன் தொடர்பு கொள்கின்ற அதேநேரம், ஏதேனும் தகுதியின்மை அல்லது தகுதியின்மையின் தோற்றத்தைத் தவிர்த்தல்;
8. மத்தியஸ்தரின்/ இணக்கப்பாட்டாளரின் பதவியில் விதிக்கப்படுகின்ற நம்பிக்கை மற்றும் இரகசியத்தன்மை என்பவற்றின் உறவு முறைக்கு விசுவாசமாக இருத்தல்;
9. ஏற்புடைய சட்டத்துக்கு ஏற்ப ஒரு பிணக்கின் தீர்வுகளுடன் தொடர்புடைய சகல நடவடிக்கைமுறைகளையும் நடாத்துதல்;
10. மத்தியஸ்தம்/ இணக்கப்பாடு திறத்தவர்களினால் சுயமாகத் தீர்மானிக்கப்படுகின்ற கோட்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் மத்தியஸ்த/ இணக்கப்பாட்டு செயன்முறையானது ஒரு தன்னார்வமானதும், வெளிப்படுத்தப்படாததுமான உடன்பாட்டை அடைவதற்கு திறத்தவர்களின் இயலுமை மீது தங்கியுள்ளது என்றும்விளங்கிக்கொள்ளல்.
11. இரகசியத்தன்மைக்கான திறத்தவர்களின் நியாயமான எதிர்பார்ப்புக்களை பராமரித்தல்,மத்தியஸ்த முடிவுகள் தொடர்பாக வாக்குறுதிகள் அல்லது உத்தரவாதங்கள் வழங்குவதிலிருந்து தவிர்ந்து கொள்தல்.

**சட்டவிதி 25: சட்டப்பாதுகாப்பு**

குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைக்கான மத்தியஸ்த நடவடிக்கைகளின் போது மத்தியஸ்தரினால் நல்லெண்ணத்தில் செய்யப்படுகின்ற ஏதேனும் விடயம் அல்லது செய்யப்பட வேண்டிய ஏதேனும் விடயம் தவிர்க்கப்பட்டதற்காக அல்லது மத்தியஸ்த நடவடிக்கையின் போது மத்தியஸ்தருக்குக் கிடைக்கப் பெற்ற தகவல் அல்லது அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பில் அல்லது மத்தியஸ்தரால் தயாரிக்கப்படுகின்ற அல்லது அவருக்குக் காண்பிக்கப்படுகின்ற நகல்கள் அல்லது பதிவுகள் தொடர்பில் சோதனை செய்வதற்கு சட்டநீதிமன்றம் ஒன்றில் வழக்கொன்றில் தோன்றுவதற்கோ அல்லது நடவடிக்கைமுறைக்கு எவரேனும் திறத்தவரால் அழைப்பாணை விடுப்பதற்கோ மத்தியஸ்தர் பொறுப்பாகமாட்டார்.

**சட்டவிதி 26: மத்தியஸ்தர் மற்றும் நீதிமன்றத்துக்கு இடையிலான தொடர்பாடல்**

(அ) இந்தச்சட்ட விதியின் (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தவிர, நீதிமன்றத்தில் திறத்தவர்களின் நம்பிக்கையையும்மற்றும் மத்தியஸ்தரின் நடுநிலையையும்உறுதிசெய்வதற்காக மத்தியஸ்தருக்கும் நீதிமன்றத்துக்கும் இடையில் தொடர்பாடல் இருக்கக் கூடாது.

(ஆ) அவ்வாறு மத்தியஸ்தருக்கும் நீதிமன்றத்துக்கும் இடையில் தொடர்பாடல் தேவைப்பட்டால், அது எழுத்து மூலமாக இருக்க வேண்டும் என்பதோடு அவற்றின் பிரதிகள் திறத்தவர்களுக்கு அல்லது நியமிக்கப்படுகின்ற சட்டத்தரணிக்கு அல்லது சட்டவுரைஞருக்கு வழங்கப்படவும் வேண்டும்.

(இ) மத்தியஸ்தருக்கும் நீதிமன்றத்துக்கும் இடையிலான தொடர்பாடல் மத்தியஸ்தரினால் தொடர்பாடலுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.

**சட்டவிதி 27: திறத்தவர்களினால் தீர்ப்பனவுக்கான விருப்பறிவிப்பு**

(அ) மத்தியஸ்தருக்கு அறிவித்தல் வழங்கி, நடவடிக்கை முறைகளின் எந்தக்கட்டத்திலும் வழக்குக்குரிய ஒரு திறத்தவர் மற்றத் திறத்தவருக்கு ‘பங்கமில்லாமல்’ ஒரு தீர்ப்பனவுக்கான விருப்பறிவிப்பை வழங்கலாம்;

(ஆ) மத்தியஸ்தருக்கு/ இணக்கப்பாட்டாளருக்கு அறிவித்தல் வழங்கி, நடவடிக்கை முறைகளின் எந்தக் கட்டத்திலும் வழக்குக்குரிய ஒரு திறத்தவர் மற்றத் திறத்தவருக்கு ‘பங்கமாக’ ஒரு விருப்பறிவிப்பை வழங்கலாம்;

**சட்டவிதி 28:மத்தியஸ்த உடன்படிக்கை**

(அ) வழக்கில் அல்லது நடவடிக்கை முறையில் சகல பிரச்சினைகள் தொடர்பில் அல்லது சில பிரச்சினைகள் தொடர்பில் திறத்தவர்களுக்கிடையில் ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, அது எழுத்து மூலம் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதோடு திறத்தவர்களினால் அல்லது நியமிக்கப்படுகின்ற சட்டத்தரணியால் கையொப்பமிடப்படவும் வேண்டும். திறத்தவர்களை எவரேனும் சட்டவுரைஞர் பிரதிநிதித்துவப்படுவாராயின், அவரது கையொப்பத்தையும் மத்தியஸ்தர் பெற்றுக் கொள்ளலாம்.

1. அவ்வாறு கையொப்பமிடப்படுகின்ற திறத்தவர்களின் உடன்படிக்கையானது மத்தியஸ்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு மத்தியஸ்தர் அதற்கு குறிப்பீட்டுக் கடிதம் ஒன்றை வரைந்து கையொப்பமிட்டு வழக்கு அல்லது நடவடிக்கை முறை நிலுவையிலுள்ள நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

2. சட்டவிதி 18 இல் குறிப்பிடப்பட்ட கால வரையறைக்கு முன்னர், அவ்வாறு திறத்தவர்களுக்கிடையில் ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாதிருக்குமிடத்து,

அல்லது பிணக்கைத் தீர்ப்பது சாத்தியமில்லை என மத்தியஸ்தர் கருதுகின்றவிடத்து, அதனை அவர் நீதமன்றத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

(ஆ) தீர்ப்பனவானது நீதிமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்கு தொடர்பில் இருக்குமிடத்து மத்தியஸ்தர் அதன் பிரதியை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு நீதிமன்றம் திறத்தவர்களுக்கு அறிவித்தல் வழங்கிய பின்னர், அத்தகைய தீர்ப்பனவுக்கு ஏற்ப ஒரு தீர்வையை வழங்க வேண்டும்.

(இ) மத்தியஸ்த நடவடிக்கை முறைகள் முடிவடைந்த பின்னர் 3 வருட காலங்களுக்காக தீர்ப்பனவு உடன்படிக்கையின் மேலதிகப் பிரதியை மத்தியஸ்தரின் பாதுகாப்பில் மத்தியஸ்தர் வைத்திருக்க வேண்டும்.

**சட்டவிதி 29: தீர்க்கப்படாமைக்கான சான்றிதழ்**

(அ) ஒரு பிணக்குக்குரிய திறத்தவர்கள் ஒரு தீர்ப்பனவுக்கு உடன்படாதவிடத்து, அத்தகைய பிணக்கு தொடர்பில் மத்தியஸ்த செயன்முறையை முகாமை செய்திருக்கின்ற மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் மத்தியஸ்தத்தினால் அத்தகைய பிணக்கை தீர்ப்பதற்குச் சாத்தியமில்லை எனக் குறிப்பிடுகின்ற சான்றிதழ் ஒன்றை வழங்க வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும் விடயத்துக்கு ஏற்ப மத்தியஸ்தரால் அல்லது மத்தியஸ்தர்களால் கையொப்பமிடப்பட வேண்டும்.

(ஆ) உப பிரிவு (1) இன் கீழ் வழங்கப்படுகின்ற ஒரு சான்றிதழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்படுகின்ற ஏதேனும் நடவடிக்கையில் அல்லது நடவடிக்கைமுறையில்சான்றாக சமர்ப்பிக்கப்படலாம், என்பதோடு அதன் எண்பிப்புக்கு ஒரு சாட்சியாக அத்தகைய ஆளை அழைப்பதற்கான அவசியம் இருக்கமாட்டாது.

(இ) பிணக்கு தொடர்பாக எவையேனும் நடவடிக்கை முறைகளில் ஒரு சாட்சியாக மத்தியஸ்தர் அல்லது நியமிக்கின்ற அதிகார சபையின் எவரேனும் அலுவலர் அழைக்கப்படக் கூடாது.

(ஈ) தீர்ப்பனவு மேற்கொள்ளாததற்கான ஏதேனும் சான்றிதழில் உள்ள எவரேனும் மத்தியஸ்தரின் கையொப்பம் உண்மையானது எனவும் கையொப்பமிடுகின்ற மத்தியஸ்தருக்கு அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் இருந்தது எனவும் நீதிமன்றம் ஊகிக்கலாம்.

ஆயினும், ஏதேனும் வழக்கில் எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின் மீது அல்லது வேறுவகையில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக மத்தியஸ்தர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட வேண்மென நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய சான்றிதழின் கையொப்பமிடல் தொடர்பிலான சான்றை வழங்குவதற்கான நோக்கத்துக்காக மாத்திரம் ஒரு சாட்சியாக அத்தகைய மத்தியஸ்தர் நீதமன்றத்துக்கு அழைக்கப்படலாம்.

**சட்டவிதி 30: மத்தியஸ்தத்தினால் ஒரு பிணக்கினைத் தீர்மானித்தல்**

ஒரு மத்தியஸ்த உடன்படிக்கையின் கீழ் மத்தியஸ்தத்துக்கு சமர்ப்பிப்பதற்கு திறத்தவர்கள் உடன்பட்டிருக்கின்ற ஏதேனும் பிணக்கை,மத்தியஸ்தத்தினால் தீர்மானிக்கப்படலாம். ஆனால் மத்தியஸ்த உடன்படிக்கையானது பொதுக் கொள்கைக்கு முரணாக மேற் கொள்ளப்பட்டிருக்காமலும் அல்லது மத்தியஸ்தத்தினால் தீர்மானிப்பதற்கு முடியாததாக உள்ள உடன்டபடிக்கை தொடர்பாகவும் இருக்கக் கூடாது.

**சட்டவிதி 31: முடிவுறுத்தல்**

பின்வரும் சந்தர்ப்பங்களில் மத்தியஸ்தம் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே முடிவுறும்,

(அ) திறத்தவர்கள் ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கைக்கு வருகின்ற தினம்,

(ஆ) மத்தியஸ்தம் முடிவுறுத்தப்படுகின்றது என திறத்தவர்கள் கூட்டாக மத்தியஸ்தருக்குப் பிரகடனம் செய்கின்ற தினம்,

(இ) மத்தியஸ்தர் திறத்தவர்களுடன் கலாந்தாலோசித்த பின்னர், மத்தியஸ்தத்தில் மேலதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதோடு மத்தியஸ்தம் முடிவுறுத்தப்படுகின்றது என மத்தியஸ்தர் பிரகடனப்படுத்துகின்ற தினம்.

**சட்டவிதி 32: காலவிதிப்பு**

(அ) ஏதேனும் வழக்கெழு காரணம் தொடர்பில் காலவிதிப்பின் காலத்தைக் கணிப்பிடுவதில், காலம் என்பது;

(i) அந்த வழக்கெழு காரணத்தை உருவாக்குகின்ற வணிக ரீதியான பிணக்கின் தீர்ப்பனவுக்காக நிலையத்துக்கு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு விண்ணபத்தை மத்தியஸ்தத்தினால், ஆரம்பிக்கின்ற திகதி; மற்றும்

(ii) மத்தியஸ்தத்துக்கான நடவடிக்கைமுறைகளில் அந்த வணிகரீதியான பிணக்குகள் முடிவுறுத்தப்பட்ட திகதியில் முடிவடைதல்.

ஏதேனும் வேறு சட்டத்தில் முரண்பாடாக ஏதேனும் எது எவ்வாறாக இருந்தபோதும், அதுகரிசனை கொள்ளப்படக்கூடாது.

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற வழக்கொன்றில், அந்த வழக்குக்கான வழக்கெழு காரணம் காலாவதியாகின்றது என்ற பிரச்சினை எழுகின்றவிடத்து,பின்வருவனவற்றுக்கு முறையே திகதிகளை குறிப்பிட்டு,

(i) அந்த வழக்கெழு காரணத்தை உருவாக்குகின்ற பிணக்கை, மத்தியஸ்தத்தினால், தீர்ப்பதற்காக மத்தியஸ்தரினால் அல்லது உரிய நிலையத்தினால் வழக்கு அல்லது நடவடிக்கைமுறை கிடைக்கப்பெற்றது எனவும்:

(ii) திறத்தவர்களுக்கிடையில் ஒரு உடன்படிக்கையின் முடிவுறுத்தலினால், அல்லாமல் வேறுவகையில் மத்தியஸ்தத்தினால் அந்தப்பிணக்கின் தீர்ப்பனவுக்காக நடவடிக்கைமுறைகள் முடிவுறுத்தப்பட்டது எனவும்,

முறையே திகதிகள் குறிப்பிடப்பட்டு மத்தியஸ்தரினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ் ஒன்று அத்தகைய கையொப்பத்தின் எண்பிப்பு இல்லாமலே சான்றில் அனுமதிக்கக் கூடியதாக இருக்கும் என்பதோடு அதில் குறிப்பிடப்படுகின்ற நிகழ்வுகளின் சான்றாகவும் இருக்கும்.

**இணைப்பு 3 இலங்கை வணிக மத்தியஸ்த நிலையச் சட்டம்**

**இலங்கை …….. ஆம் இலக்க வணிக மத்தியஸ்த நிலையச் சட்டம்**

**வணிக ரீதியான பிணக்குகளை தீர்ப்பதற்கு மத்தியஸ்தத்தைப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதற்காகவும் மற்றும் மத்தியஸ்த நடவடிக்கைமுறைகளை நடாத்துவதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்படைய கருமங்கள் அல்லது அதற்குஇடைநேர் விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்கும்இலங்கை வணிக மத்தியஸ்த நிலையத்தைத் தாபிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கான ஒரு சட்டம்.**

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்பட வேண்டும்:**

**சுருக்கமான தலைப்பு மற்றும் செயற்படுத்தல் திகதி**

1. இந்தச் சட்டமானது 2013 ஆம் ஆண்டின் ……. ஆம் இலக்க இலங்கை குடியியல் மற்றும் வணிக மத்தியஸ்த நிலையச் சட்டம் என எடுத்துரைக்கப்படலாம் என்பதோடு அமைச்சரினால் அரசாங்க வர்த்தமானியில் கட்டளை வெளியிடப்பட்டு நியமிக்கப்படக் கூடியவாறான

(இதனகத்துப் பின்னர் 'நியமிக்கப்பட்ட திகதி' எனக் குறிப்பீடு செய்யப்படக் கூடிய) அத்தகைய திகதியில் செயற்பாட்டுக்கு வரும்.

## பகுதி 1

## முதல்நிலை

### நோக்கம்

2. இந்தச் சட்டத்தின் நோக்கம் வணிக ரீதியான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றங்களை நாடுவதைத் தவிர்த்து மத்தியஸ்தத்தைப் பயன்படுத்தி தீர்த்துக் கொள்வதற்கு ஊக்கமளித்தல்.

### ஏற்புடையது

3. (1) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள்,….. ஆம் பிரிவின் ஏற்பாட்டுக்கு அமைவாக,அத்தகைய மத்தியஸ்த நடவடிக்கைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டு மத்தியஸ்த உடன்படிக்கை செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தாலும் அல்லது அல்லாவிட்டாலும், உடன்படிக்கையானது நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அல்லது பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் நியமிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் இலங்கையில் ஆரம்பிக்கப்படுகின்ற சகல வணிக மத்தியஸ்த நடவடிக்கை முறைகளுக்கும் ஏற்புடையதாகும்.

(2) மத்தியஸ்தத்தினால் தீர்ப்பதற்காக,இந்தச் சட்டம் அமுலுக்கு வருகின்ற தினத்தில் அல்லது அதற்குப் பின்னர் வணிக ரீதியான மத்தியஸ்தம்ஆரம்பிக்கப்பட்டால்,ஒப்பந்த இயல்புடையதாகவோ அல்லது வேறுவகையிலோ உள்ள ஒரு வணிக ரீதியான பிணக்கு தொடர்பில் திறத்தவர்களுக்கிடையில் எழக்கூடிய சகல பிணக்குகளுக்கு அல்லது ஏதேனும் பிணக்குக்கு இந்தச்சட்டம் பிரயோகமாகும்.

(3) ஒரு மத்தியஸ்த பிரிவின் வடிவத்தில்ஏதேனும் மத்தியஸ்த உடன்படிக்கைக்கு அல்லது மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்துவதற்கு உடன்படுகின்ற திறத்தவர்களினால் ஒரு தனியான உடன்படிக்கைக்கு ஒரு திறத்தவர் ஒரு நாடாக இருக்குமிடத்து, அந்த நாடு இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பிணிப்புடையதாக இருக்கும்.

(4) இந்தச் சட்டம் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாகமாட்டாது,

(அ) ஒரு கூட்டு உடன்படிக்கையின் உருவாக்கத்தின் கீழ் அல்லது ஒரு கூட்டு உடன்படிக்கையின் உருவாக்கம் தொடர்புடைய ஒரு மத்தியஸ்தம்;

(ஆ) மத்தியஸ்தராக ஒரு தனிப்பட்டவருடன் நடாத்தப்படாத மத்தியஸ்தத்தில் ஒரு கணனி மயப்படுத்தப்பட்ட அல்லது வேறு வடிவிலான மத்தியஸ்தம்,

(இ) நடவடிக்கைமுறைகளின் விடயமான ஒரு வணிக ரீதியான பிணக்கின் தீர்ப்பனவை ஊக்குவிப்பதற்கு நீதித்துறை அல்லது நடுத்தீர்ப்பு ரீதியான நடவடிக்கைமுறைகளில் ஒரு நீதிபதியால் அல்லது ஒரு நடுத்தீர்ப்பாளரால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள்; அல்லது

(ஈ) குடியியல் நடவடிக்கைமுறையின் ஏற்பாடுகளில் விபரிக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுக்கான மத்தியஸ்தங்கள்;

(உ) முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருக்கின்ற ஒரு நீதிமன்றத்தில ஒரு வழக்கெழு காரணத்தை எழுப்புகின்ற ஏதேனும் பிணக்குக்கு;

(ஊ) பின்வருமாறு ஒரு வணிக ரீதியான பிணக்குக்கான மத்தியஸ்தம்,

(அ) இந்தச்சட்டமானது ஏனைய சட்டத்தின் தேவைப்பாடுகளுடன்அல்லது ஏனைய சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு ஒழுங்குவிதியுடன் முரண்பாடாக அல்லது பொருந்தாததாக இருத்தல்; அல்லது

(ஆ) இந்தச் சட்டத்தின் பிரயோகமானது ஏதேனும் ஏனைய சட்டத்தினால் உருவாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளினால் தவிர்க்கப்பட்டிருத்தல் அல்லது திருத்தப்பட்டிருத்தல்.

(எ) 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க சனசமூக மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் கீழ் ஒரு சனசமூக மத்தியஸ்த சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்குக்கு;

(ஏ) தொழில் பிணக்குகள் அல்லது குடும்பப் பிணக்குகள்.

**வரைவிலக்கணங்கள்**

**4. இந்தச் சட்டத்தில்,**

‘‘**வணிக ரீதியான பிணக்கு**’’ என்பது பொருட்கள் அல்லது சேவைகளின் விநியோகம் அல்லது பரிமாற்றல், விநியோக உடன்படிக்கைகள், வணிக ரீதியான பிரதிநிதித்துவம் அல்லது முகவர் சேவை, தொழிற்சாலையமைத்தல், குத்தகை, நிர்மாணப்பணிகள், ஆலோசனை,பொறியியல், உரிமமளித்தல், முதலீடு,நிதியியல், வங்கியியல், புலமைச் சொத்து, காப்புறுதி, தொழில் உடன்படிக்கைகளும் சலுகைகளும், கம்பனிப் பிணக்குகள், இணைந்த நிறுவனங்கள், ஏனைய வடிவமைப்பிலான கைத்தொழில் அல்லது வியாபார கூட்டுத்தாபனம் அல்லது பொருட்களை அல்லது ஆட்களை ஏற்றிச் செல்லல் போன்றவற்றுக்கான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் போன்ற ஒப்பந்த அடிப்படையில் அமைந்த அல்லது ஒப்பந்த அடிப்படையில் அமையாத ஒரு வணிக ரீதியான தன்மையின் விடயங்கள் தொடர்பிலான திறத்தவர்களுக்கிடையிலான ஒரு பிணக்காகும்.

**‘‘மத்தியஸ்தம்’’** என்பது பின்வருமாறு ஒரு கூட்டான செயன்முறையாகும்.

(அ) ஒரு வணிக ரீதியான பிணக்குக்குரிய திறத்தவர்கள் அவர்களது பிணக்கில் ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கான அவர்களின் முயற்சியில் அவர்களுக்கு உதவி செய்வதற்கு ஒரு மத்தியஸ்தர் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஒரு நடுநிலையான ஆளை வேண்டுவதற்கு உடன்படுகின்றனர், மற்றும்

(ஆ) பிணக்குக்குக்கான ஒரு தீர்வை திறத்தவர்கள் மீது விதிப்பதற்கு மத்தியஸ்தருக்கு அதிகாரம் இருக்காது.

## பகுதி 11

## இலங்கை வணிக மத்தியஸ்த நிலையம்

## இலங்கை வணிக மத்திய நிலையத்தின்ஸ்தாபிப்பு

6. (1) (இதனகத்துப் பின்னர் ‘‘நிலையம்’’ எனக்குறிப்பீடு செய்யப்படுகின்ற) இலங்கை வணிக மத்தியஸ்த நிலையம் என அழைக்கப்படக் கூடிய ஒரு நிலையம்ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

(2) உப பிரிவு (1) இனால் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் நிலையம் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாக இடையறாப் பின்னுரிமையுடனும் ஒரு பொது இலச்சினையுடனும், மற்றும் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் வழக்குத் தொடுப்பதற்கும் மற்றும் வழக்குத் தொடுக்கப்படுவதற்கும் முடியும்.

(3) நிலையத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் இருக்கும். இலங்கையில் கொழும்புக்கு வெளியே உள்ள இடங்களில் அவசியமானது என சபை கருதினால் நிலையத்தின் அத்தகைய கிளை அலுவலகங்களைநிலையத்தின் முகாமை சபை இஸ்தாபிக்கலாம்.

**நிலையத்தின் பணிகள்**

7. நிலையத்தின் பணிகள் பின்வருமாறு:

(அ) வணிக ரீதியான பிணக்குகளின் தீர்வு மற்றும் தீர்ப்பனவு என்பவற்றுக்காக மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாட்டை விரிவாக ஏற்றுக் கொண்டு ஊக்குவித்தல்:

(ஆ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் வணிக ரீதியான பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கு திறத்தவர்களை ஊக்குவித்தல்:

(இ) கீழ்க் குறிப்பிடப்படுகின்ற நடவடிக்கைமுறைகளை நடாத்துவதற்கும் மற்றும் ஊக்குவிப்பதற்கும்;

(i) வணிக ரீதியான பிணக்குகளின் தீர்ப்பனவு

(ii) வணிக ரீதியான விடயங்களில் திறத்தவர்களுக்கிடையில் எழுகின்ற வித்தியாசங்களை மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றின் மூலம் சீராக்குதல்.

**நிலையத்தின் தத்துவங்கள்**

8. நிலையத்துக்கு பின்வரும் தத்துவங்கள் இருக்கும்:-

(அ) அசைவுள்ள மற்றும் அசைவற்றஆதனங்களைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு, மற்றும் அவற்றை அடமானம் செய்வதற்கு அல்லது ஈடுவைப்பதற்கு, குத்தகைக்குஅல்லது வாடகைக்கு வழங்குவதற்கு, பரிமாற்றுவதற்கு அல்லது வேறுவகையில் விற்றுத் தீர்ப்பதற்கும்,

(ஆ) இலங்கைக்கு உள்ளே அல்லது வெளியே ஆட்களிடமிருந்து அல்லது ஆட்களின் குழுக்களிடமிருந்து உதவுதொகைகள், நன்கொடைகள் அல்லது கொடைகளை ஏற்றுக் கொள்வதற்கு,

(இ) அதன் பணிகளை நிறைவேற்றுகின்ற நோக்கங்களுக்காக தேவைப்படக்கூடியவாறான சகல அத்தகைய ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவற்றைக் கைச்சாத்திடுவதற்கும் நிறைவேற்றுவதற்கும்;

(ஈ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக அவசியப்படக் கூடியவாறான அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவகர்கள்போன்றோரை நியமிப்பதற்கும் மற்றும் அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவகர்கள் மீதுஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பதவியிலிருந்து விலக்குவதற்கும்;

(உ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவகர்கள் போன்றோருக்கான கொடுப்பனவுகள் மற்றும் சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிப்பதற்கும்;

(ஊ) நிலையத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் வசதிகள் போன்றவற்றுக்காக கட்டணங்களை அறவிடுவதற்கும்;

(எ) பிணைப்பொறுப்பு இல்லாமல் அல்லது பிணைப்பொறுப்புடன் கடன் பெறுவதற்கு அல்லது பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கும்;

(ஏ) வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், செயற்படுத்துவதற்கும் மற்றும் முடிவுறுத்துவதற்கும்;

(ஐ) அதன் பணிகளை நிறைவேற்றுகின்ற நோக்கங்களுக்காக பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்கும் ;

(ஒ) நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய பிணைப்பொறுப்புக்களில் பயன்படுத்தப்படாத பணத்தொகைகளை முதலீடு செய்வதற்கும்; மற்றும்

(ஓ) அதன் பணிகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்காக அவசியமானதாக இருக்கக் கூடியதும் மற்றும் உகந்ததுமான சகல அத்தகைய செயல்களை மேற்கொள்வதற்கும்.

**முகாமை சபை**

9. (1) நிலையத்தின் அலுவல்களின் நிருவாகம் மற்றும் முகாமை, அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கி (இதனகத்துப் பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படக் கூடிய) முகாமை சபையில் அளிக்கப்படும் :-

(அ) வணிகக் கட்டளைகள் சட்டத்தினால் (அத்தியாயம் 289) கூட்டிணைப்புச் செய்யப்பட்ட இலங்கை வணிக சங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற ஒரு அங்கத்தவர் ;

(ஆ) இலங்கைத் தேசிய வணிக சங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற ஒரு அங்கத்தவர் ;

(இ) இலங்கை வணிக மற்றும் கைத்தொழில் கூட்டவையினால் நியமிக்கப்படுகின்ற ஒரு அங்கத்தவர் ;

(ஈ) 1969 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை தேசிய கைத்தொழில்கள் சட்டத்தினால் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட, இலங்கைத் தேசியகைத்தொழில்கள் சங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற ஒரு அங்கத்தவர் ; மற்றும்

(உ) நீதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற ஓர் அங்கத்தவர்.

(2) சபையின் ஓர் அங்கத்தவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தை அனுப்புவதன் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(3) குறித்தளிக்கப்படுகின்ற காரணங்களுக்கான அமைச்சர் சபையிலிருந்து ஓர் அங்கத்தவரை அகற்றலாம்.

(4) சபையின் ஓர் அங்கத்தவரின் இறப்பு, பதவி விலகல், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் இடம்பெறுமிடத்து, உபபிரிவு (1) இன் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு பதவி விலகியவருக்குப் பதிலாக அல்லது அவரின் இடத்துக்கு அமைச்சர் வேறொரு அங்கத்தவரை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்,அவர் உரிய காலத்துக்கு முன்னர் இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் இடம் பெறாவிட்டால், அவர் பின்னுகின்ற அங்கத்தவரின் எஞ்சிய காலாவதியாகாத காலத்துக்காக பதவி வகிக்கலாம்.

(5) உப பிரிவுகள் (2), (3) மற்றும் (4) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாகசபை அங்கத்தவர் ஒருவரின் பதவிக்காலம் மூன்று வருடங்களாக இருக்கும்.

(6) சபை அங்கத்தவர் ஒருவரின் பதவி வறிதாக்கல் காலங்கழிதலினால் ஏற்பட்டால் அவர் மீள் நியமனத்துக்குத் தகவுடையவராவார்.

(7) அதில் குறிப்பிடப்பட்டவாறு ஒரு சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உப பிரிவு (1) இன் (அ), (ஆ) மற்றம் (இ) பந்திகளின் கீழ் சபைக்கு நியமிக்கப்படுகின்ற ஓர் அங்கத்தவர்

பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உரிய சங்கத்தின் அங்கத்திலிருந்து நீக்கப்படுவாராயின் சபையின் ஓர் அங்கத்தவராக பதவி வகிப்பதிலிந்தும் நிறுத்தப்பட வேண்டும்.

**முகாமை சபையின் தலைவர்**

10.(1) சபை அங்கத்தவர்களிலிருந்து ஒரு அங்கத்தவர் சபையின் தலைவராத் தெரிவு செய்யப்படுவார்.

(2) (இதனகத்துப் பின்னர் "தலைவர்" எனக் குறிப்பீடு செய்யப்படக் கூடிய) சபையின் தலைவர் அதன் சார்பில் சபைக்கு முகவரியிடப்படுகின்ற கடிதத்தின் மூலம் பதவி விலகலாம்.

(3) சபையின் மொத்த அங்கத்தவர்களில் அரைவாசிக்குக் குறையாத அங்கத்தவர்களினால் ஆதரவளிக்கப்படுகின்ற ஒரு தீர்மானத்தினால் சபையானது சபைத் தலைமைப் பதவியிலிருந்து தலைவரைப் பதவியகற்றலாம்.

(4) உப பிரிவுகள் (2) மற்றும் (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக தலைவரின் பதவிக்காலம் அவர் சபையில் அங்கத்தவராக இருக்கும் வரை இருக்கலாம்.

**சபைக் கூட்டங்கள்**

11. (1) தலைவர்சபையின் கூட்டங்களுக்கு வருகை தந்திருந்தால் அதில் அவர் தலைமை தாங்க வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்கு தலைவர் வருகை தராதபோது, அந்தக் கூட்டத்துக்கான தலைவரை வருகை தந்திருக்கக் கூடிய அங்கத்தவர்களிலிருந்து அந்தக் கூட்டத்துக்கான ஒரு தலைவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

(2) ஒரு கூட்டத்துக்கான நடப்பெண் மூன்றாக இருக்கும்.

(3) சபைக் கூட்டமொன்றில் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடிய ஏதேனும் விடயமொன்றுக்கு சமமான வாக்குகள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், தலைவர் அல்லது கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற அங்கத்தவர் அவரின் சொந்த வாக்குக்கு மேலதிகமாக அளிக்கக் கூடிய மற்றொரு வாக்கு அவருக்கு இருக்கும்.

(4) இந்தப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்கள் தொடர்பான நடவடிக்கை முறையை சபை ஒழுங்குபடுத்தலாம்.

**நிலையத்தின் இலச்சினை**

12. (1) நிலையத்தின் இலச்சினையானது தலைவரின் அல்லது தலைவரினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிலையத்தின் எவரேனும் அலுவலரின் கட்டுக்காவலில் இருக்கும்.

(2) நிலையத்தின் இலச்சினையானது சபையினால் தீரமானத்தினால் அத்தகைய முறையில் மாற்றப்படலாம்

(3) சபைத் தலைவரின் சம்மதம் இல்லாமலும் மற்றும் தலைவர் முன்னிலையில் அல்லாமலும் அல்லது சபை அங்கத்தவர் முன்னிலையில் சாதணம் அல்லது அடையாள ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு சபையினால் அதன் சார்பாக அங்கீகரிக்கப்படுகின்ற ஒரு சபை அங்கத்தவரினால்அல்லாது நிலையத்தின் இலச்சினை ஏதேனும் சாதணத்தில் அல்லது ஆவணத்தில் பதிக்கப்படக் கூடாது.

**பகுதி 11**

**நிதி**

**நிலையத்தின் நிதியம்**

13. (1) நிலையத்துக்கு அதன் சொந்த நிதியம் இருக்க வேண்டும். நிலையத்தின் நிதி.

(2) நிலையத்தின் நிதியத்துக்குபின்வரும் நிதிகள் செலுத்தப்பட வேண்டும்:

(அ) நிலையத்தினால் பயன்படுத்துவதற்காக காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்தில் வாக்களிக்கப்படக் கூடியவாறான சகல அத்தகைய பணத் தொகைகளையும்;

(ஆ) இந்தச்சட்டதிதின் கீழ் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகித்தல் நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் போறன்வற்றுக்காக நிலையத்தினால் கிடைக்கப் பெறக் கூடியவாறான சகல அத்தகைய பணத்தொகைகளையும்;

(இ) வெளிநாட்டு அல்லது உள்நாட்டு மூலங்களிலிருந்து கடன்களாக, கொடைகளாக நன்கொடையாக அல்லது உதவுதொகைகளாக நிலையத்தினால் கிடைக்கப் பெறக் கூடியவாறான சகல அத்தகைய பணத்தொகைகளையும்.

(3) நிலையத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகித்தல் நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் போறன்வற்றுக்காக சபையினால் மேற்கொள்ளப்படக் கூடியவாறான ஏதேனும் செலவினத்தை தீர்ப்பதற்கு அவசியப்படக் கூடியவாறான சகல அத்தகைய பணத்தொகைகளையும் நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

**கணக்குகளின் கணக்காய்வு**

14. (1) நிலையத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் சகல ஏனைய கொடுக்கல் வாங்கல்களுக்கான உரிய கணக்குகளை சபை பேணி வரவேண்டும்.

(2) நிலையத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கு அரசியலமைப்பின் உறுப்புரை 154 ஏற்புடையதாக இருக்கும்.

## பகுதி 111

**பொது**

15. (1) இந்தச் சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகள் என்பவற்றுக்கு வலுவூட்டுகின்ற நோக்கத்துக்காக சட்டவிதிகளை சபை உருவாக்கலாம்.

(2) உப பிரிவு (1) இனால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்கு பங்கமில்லாமல், பின்வரும் சகல அல்லது எவையேனும் விடயங்கள் தொடர்பில் சட்டவிதிகளை சபை உருவாக்கலாம்.

(அ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றினால் வணிக ரீதியான தீர்வுக்காக, நிலையத்துக்கு மேற்கொள்ளப்படக்கூடிய விண்ணப்பங்கள் வடிவம் மற்றும் முறை;

(ஆ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றினால் வணிக ரீதியான தீர்வுக்காக, பின்பற்றப்பட வேண்டிய படிமுறை;

(இ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றினால் வணிக ரீதியான தீர்வுக்காக, நியமிக்கப்படுகின்ற மத்தியஸ்தர்களுக்கான ஒழுக்கவிதிகள்;

(ஈ) மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றினால் வணிக ரீதயான தீர்வுக்காக, நடவடிக்கை முறைகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்.

(4) இந்தப் பிரிவின் கீழ் உருவாக்கப்படுகின்ற சட்டவிதிகளானது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகரிப்பை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத வரை செல்லுபடியாக மாட்டாது.

## பாதுகாப்பு நடவடிக்கை

16. (1) இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பினால் அங்கத்தவர், அல்லது சேவகர் நல்லெண்ண அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக சபை அங்கத்தவர் ஒருவர் அல்லது ஓர் அலுவலர் அல்லது ஒரு சேவகருக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை அல்லது வழக்குத் தொடுத்தலை மேற்கொள்ளப்பட முடியாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் நிலையத்தினால் அல்லதுநிலையத்துக்கு எதிராகக் கொண்டுவரப்படுகின்ற ஏதேனும் நடவடிக்கையில் அல்லது வழக்குத் தொடுப்பில் நிலையத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்த வேண்டும் என்பதோடு ஏதேனும் அத்தகைய நடவடிக்கையில் அல்லது வழக்குத் தொடுப்பில் நிலையத்துக்குச் செலுத்த வேண்டிய அல்லது நிலையத்தினால் மீட்டுக் கொள்ளப்பட வேண்டிய செலுவுகளை நிலையத்தின் நிதியத்துக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பினால் உப பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அந்த ஆளுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை அல்லது வழக்குத் தொடுப்பில் எவரேனும் அத்தகைய ஆளினால் உறப்படுகின்ற ஏவையேனும் செலவினங்களானது, அத்தகைய செயல் நல்லெண்ண அடிப்படையில் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால், அந்த வழக்கில் அல்லது வழக்குத் தொடுப்பில் அத்தகைய ஆளினால் அத்தகைய செலவினத்தை மீட்டுக் கொள்ளப்படும் வரை, நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

**தண்டனைச் சட்டக் கோவையின் நோக்கங்களுக்காக சபை அங்கத்தவர்கள் மற்றும் சபையின் ஊழியர்கள் அரச ஊழியர்கள் எனக் கருத்தப்பட வேண்டும்.**

17. தண்டனைச் சட்டக் கோவையின் கருத்துப்படியும் மற்றும் அதன் நோக்கங்களுக்காகவும்சகல சபை அங்கத்தவர்கள் நிலையத்தின் அலுவலர்கள் மற்றும் சபையின் சேவகர்கள்பொது சேவகர்கள் எனக் கருத்தப்பட வேண்டும்.

**இலஞ்ச ஊழல் சட்டத்தின் கருத்துக்கு உட்பட்டு நிலையம் என்பது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் எனக் கருதப்பட வேண்டும்.**

18. இலஞ்ச ஊழல் சட்டத்தின் கருத்துக்கு உட்பட்டுநிலையம் என்பது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் எனக் கருதப்பட வேண்டும் என்பதோடு அதற்கேற்ப அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் எனப் பொருள் கொள்ளப்படும்.

## பகுதிIV

## மத்தியஸ்த உடன்படிக்கை

19. (1) ஒரு மத்தியஸ்த உடன்படிக்கையானது ஒரு மத்தியஸ்த பிரிவின் படிவத்தில் அல்லது மத்தியஸ்தத்தினால் தீர்ப்பனவுக்காக ஒப்பந்த அடிப்படையில் அல்லது வேறுவகையில் ஒரு வடிவமைக்கப்படுகின்ற சட்ட ரீதியான உறவு முறை தொடர்பில் திறத்தவர்களுக்கிடையில் எழக்கூடிய சகல பிணக்குகள் அல்லது ஏதேனும் வணிக ரீதியான பிணக்கை ஆற்றுப்படுத்துவதற்கு திறத்தவர்களினால் உருவாக்கப்பட்ட ஒரு தனியான உடன்படிக்கைப் படிவத்தில் இருக்கலாம்.

(2) ஒரு மத்தியஸ்த உடன்படிக்கை எழுத்து மூலம் இருக்க வேண்டும். திறத்தவர்களினால் கையொப்பமிடப்படுகின்ற ஒரு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அல்லது கடிதங்கள், டெலெக்ஸ்கள், தந்திகள், மின்னஞ்சல்கள் என்பவற்றின் பரிமாற்றல்கள் அல்லது உடன்படிக்கையின்

ஒரு பதிவை வழங்குகின்ற ஏனைய தொலைத் தொடர்பாடல் வழிகளில் இருந்தால் எழுத்து மூலம் உள்ளது எனக் கருதப்படும்.

### மத்தியஸ்தத்தினால் ஒரு பிணக்கைத் தீர்த்தல்

20. மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற மத்தியஸ்த உடன்படிக்கை தொடர்பான விடயம் பொதுக்கொள்கைக்கு முரணாக அல்லது மத்தியஸ்தத்தினால் தீர்க்கப்படுவதற்கு இயலாததாக இருக்கின்ற விடயமாக இருக்காதவரை, ஒரு மத்தியஸ்த உடன்படிக்கையின் கீழ் மத்தியஸ்தத்துக்கு சமர்ப்பிப்பதற்கு திறத்தவர்கள் உடன்பட்டிருக்கின்ற ஏதேனும் வணிக ரீதியான பிணக்கை மத்தியஸ்தத்தினால் தீர்மானிக்கப்படலாம்.

### ஏதேனும் தற்காலிக பரிகாரம் வழங்கல் இடம்பெறுகின்ற விடயங்கள் தவிர்த்து, தீர்க்கப்படாமைக்கான சான்றிதழ் இல்லாமல் நீதிமன்ற நடவடிக்கை தொடரப்படக் கூடாது

21. (1) இந்தச் சட்டத்தின் நியதிகளில் மத்தியஸ்தத்தினால் தீர்ப்பதற்காக ஏதேனும் பிணக்கை ஆற்றுப்படுத்துவதற்கு ஒரு மத்தியஸ்த உடன்படிக்கையின் கீழ் திறத்தவர்கள் உடன்பட்டிருக்கின்றவிடத்து, ஏதேனும் வேறு எழுத்து மூலச் சட்டத்தில் முரணாக ஏதேனும் எதுஎவ்வாறு இருப்பினும்,தீர்க்கப்படாமைக்கான ஒரு சான்றிதழ் இணைக்கப்படாதவரை ஒரு வணிக ரீதியான பிணக்கு தொடர்பில் நடவடிக்கை முறைகள் ஒரு நீதி மன்றத்தில் தொடுக்கப்படுக்கப்படவோ அல்லதுஒரு நீதிமன்றத்தினால் நடாத்தப்படவோ கூடாது.

(2) குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவையின் பகுதி V இன் கீழ் ஏதேனும் தற்காலிக பரிகாரம் தொடர்பில்ஒரு திறத்தவர் உடன்பட்டிருக்கின்றவிடத்து மற்றும் அத்தகைய தற்காலிக பரிகாரத்தை வழங்குவதற்கு மாத்திரம் தொடர்புடையதாக இருக்கின்ற ஒரு நீதிமன்றத்தினால் நடாத்தப்பட்டு தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் அத்தகைய விடயம் தொடர்பிலான ஏதேனும் தொடுக்கப்பட்ட நடவடிக்கையில் உப பிரிவு 1 இன் ஏற்பாடானது ஏற்புடையதாகாது.

### நீதி நடவடிக்கைமுறைகள் ஆரம்பிக்கப்படுவதன் மூலம் மத்தியஸ்தம் முடிவுறுத்தப்படமாட்டாது

(3) ஏதேனும் நீதி நடவடிக்கை முறைகள் ஆரம்பிக்கப்படுவதன் மூலம் வணிக ரீதியான பிணக்கின் மத்தியஸ்தத்துக்கான உடன்படிக்கை தானாகவே முடிவுறுத்தப்படுவதாகவோஅல்லது குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பகுதி V இன் கீழ் ஏதேனும் தற்காலிக பரிகாரம் தொடர்பில் மாத்திரம் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நீதி நடவடிக்கைமுறைகளின் நோக்கமாக இருந்தால் மத்தியஸ்தத்தின் முடிவுறுத்தலாகவோ கருதப்பட முடியாது.

### நீதிமன்றத்தால் ஆற்றுப்படுத்தல்

22. (1) ஏதேனும் வணிக ரீதியான பிணக்கு தொடர்பில் ஒரு குடியியல் நடவடிக்கை தொடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து,அது ஒப்பந்த ரீதியாக அல்லது வேறுவகையில் இருந்தாலும், திறத்தவர்களின் எழுத்து மூல சம்மதத்துடன், மத்தியஸ்தத்தினால் தீர்ப்பதற்காக வணிக மத்தியஸ்த நிலையத்துக்கு பிணக்கை நீதிமன்றம் ஆற்றுப்படுத்தும்.

(2) சட்ட நடவடிக்கைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்குமிடத்து,இந்தச் சட்டத்தின் கீழ் மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்தக் கூடிய ஒரு பிணக்குக்குரிய ஒரு திறத்தவர் நடவடிக்கை முறைகளுக்கான மற்றத் திறத்தவருக்கு அறிவித்தல் வழங்கி,மத்தியஸ்த

நடவடிக்கைமுறைகளை நிலுவையில் வைப்பதற்கு உரிய நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(3) ஒரு பிணக்கைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தத்தைப் பயன்படுத்துவதற்கு திறத்தவர்களை நீதிமன்றம் பணிக்கின்றவிடத்து, நீதிமன்றம் நடவடிக்கைமுறைகளை ஒத்திவைத்து அத்தகைய ஏனைய கட்டளைகளை வழங்கலாம் அல்லது மத்தியஸ்தத்தின் செயற்திறனான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு நீதிமன்றம் அவசியமெனக் கருதுகின்ற அத்தகைய வழகாட்டல்களை வழங்கலாம்.

## பகுதிV
## மத்தியஸ்த நடவடிக்கைமுறைகளை நடாத்துதல்
## மத்தியஸ்தத்தின் ஆரம்பம்

23. (1) பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒரு முறையில் ஒரு மத்தியஸ்தம் ஆரம்பமாகின்றது–

(அ) சகல திறத்தவர்கள் அல்லது ஒரு திறத்தவர் மத்தியஸ்தத்துக்கு ஒரு பிணக்கை ஒரு ஒப்பந்தத்தில் ஒரு மத்தியஸ்த பிரிவுக்கு ஆற்றுப்படுத்துகின்ற தினம் ;

(ஆ) மத்தியஸ்தத்துக்கு பிணக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு தனியான உடன்படிக்கை படிவத்தில் திறத்தவர்கள் உடன்படுகின்ற தினம் ;

ஆயினும் எவ்வாறாயினும், மத்தியஸ்தத்துக்கு மற்றத் திறத்தவரை அழைக்கின்ற ஒரு திறத்தவர், திறத்தவர் அழைப்பை அனுப்புகின்ற தினத்திற்குப் பின்னர் 30 நாட்களுக்குள் அல்லது அழைப்பில் குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் அதன் ஏற்பு கிடைக்கப் பெறாவிட்டால் அவரின் அழைப்பு நிராகரிக்கப்பட்டதாகக் கருதலாம்.

(இ) ஒரு திறத்தவர் பிணக்குக்குரிய மற்றத் திறத்தவர் மீது மத்தியஸ்தத்துக்கு பிணக்கை ஆற்றுப்படுத்துகின்ற அவரின் எண்ணத்தை ஓர் எழுத்து மூல அறிவித்தல் மூலம் சேர்ப்பிக்கலாம்.
(ஈ) திறத்தவர்களின் எழுத்து மூல சம்மதத்துடன் பிணக்கை ஓர் மத்தியஸ்த நிலையத்துக்கு நீதிமன்றம் ஆற்றுப்படுத்துகின்ற தினம்.

ஆயினும் எவ்வாறாயினும், சட்ட நடவடிக்கைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்குமிடத்து, இந்தச் சட்டத்தின் கீழ் மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்தக் கூடிய ஒரு பிணக்குக்குரிய ஒரு திறத்தவர் நடவடிக்கை முறைகளுக்காக மற்றத் திறத்தவருக்கு அறிவித்தல் வழங்கி, மத்தியஸ்த நடவடிக்கைமுறைகளை நிலுவையில் வைப்பதற்கு உரிய நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

## முடிவுறுத்தல்

24. (1) மத்தியஸ்தம் உரிய காலத்துக்கு முன் முடிவுறுதல்,

(அ) திறத்தவர்கள் ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கைக்கு வருகின்ற தினம்;

(ஆ) மத்தியஸ்தம் முடிவுறுத்தப்படுகின்றது என திறத்தவர்கள் கூட்டாக மத்தியஸ்தருக்குப் பிரகடனம் செய்கின்ற தினம்,

(இ) மத்தியஸ்தர் திறத்தவர்களுடன் கலாந்தாலோசித்த பின்னர், மத்தியஸ்தத்தில் மேலதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதோடு மத்தியஸ்தம் முடிவுறுத்தப்படுகின்றது என மத்தியஸ்தர் பிரகடனப்படுத்துகின்ற தினம்: மற்றும்

(ஈ) மத்தியஸ்தத்தைத் தொடர்வதற்காக பங்குபற்றல் அவசியமாகின்ற ஒரு திறத்தவர் மத்தியஸ்தருக்கும் மற்றும் மற்றத் திறத்தவருக்கு அல்லது திறத்தவர்களுக்கு மத்தியஸ்தம் முடிவுறுத்தப்படுகின்றது என அறிவிக்கின்ற முதல் நாள்.

## மத்தியஸ்தரின் நியமனம்

25. (1) உப பிரிவு (2) இற்கு அமைவாக, திறத்தவர்களின் உடன்படிக்கையினால் நியமிக்கப்படுகின்ற ஒரு மத்தியஸ்தரினால் மத்தியஸ்தம் நடாத்தப்பட வேண்டும்.

(2) நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட மத்தியஸ்தர்களுக்கு மத்தியிலிருந்து ஒரு மத்தியஸ்தரை நியமிக்கும்படி திறத்தவர்கள் நிலையத்திடம் கேட்கலாம் என்பதோடு அவ்வாறு ஒரு மத்தியஸ்தர் நிலையத்தினால் நியமிக்கப்படுமிடத்து, அவரின் பக்கச்சார்பின்மை அல்லது சுயாதீனம் தொடர்பாக நியாயப்படுத்தப்படக் கூடிய சந்தேகங்கள் இருக்கக் கூடிய வாய்ப்புள்ள சூழ்நிலைகள் இருந்தால் ஏதேனும் தாமதமில்லாமல் வெளிப்படுத்த வேண்டும்.

(3) மத்தியஸ்தர் அவரின் மத்தியஸ்தத்துக்காக ஒரு நியாயமான கட்டணம் மற்றும் நியாயமான செலவினங்களையும் பெறுவதற்குத் தகவுடையவராவார் என்பதோடு அத்தகைய மத்தியஸ்தரின் கட்டணத்தையும் செலவினங்களையும் செலுத்துவதற்கு பிணக்கின் மத்தியஸ்தத்துக்குரிய திறத்தவர்கள் கூட்டாகவும் மற்றும் தனியாகவும் பொறுப்புடையவராவார்கள்.

## மத்தியஸ்தத்தை நடாத்தல்

26. (1) மத்தியஸ்தம் நடாத்தப்படவுள்ள முறைக்கு உடன்படுவதற்கு திறத்தவர்களுக்கு சுதந்திரம் இருக்கின்றது என்பதோடு ஏற்கனவே இருக்கின்ற ஒரு தொகுதி சட்டவிதியைப் பின்பற்றுவதற்கும் உடன்படலாம்.

(2) மத்தியஸ்தம் நடாத்தப்படவுள்ள முறை மீது திறத்தவர்கள் உடன்பட்டிருக்காத அளவுக்கு, ஒரு துரிதமான தீர்ப்பனவு உட்பட திறத்தவர்களின் எவையேனும் வேண்டுகோள்கள் மற்றும் மத்தியஸ்தத்தின் சூழ்நிலைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்தமானது என மத்தியஸ்தர் கருதுகின்றவாறான மத்தியஸ்தத்தை மத்தியஸ்தர் நடாத்தலாம்.

(3) மத்தியஸ்தர் திறத்தவர்களை கூட்டாக அல்லது தனியாக சந்திக்கலாம் அல்லது தொடர்பு கொள்ளலாம்.

(4) மத்தியஸ்தர் மத்தியஸ்தத்தின் சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு மத்தியஸ்தத்தின் போது திறத்தவர்களின் நியாயமான உபசரிப்பைப் பராமரிக்க வேண்டும் என்பதோடு மத்தியஸ்தத்துக்கான திறத்தவர்கள் இந்தச் சட்டவிதியை தவிர்க்கவோ அல்லது திருத்தவோ கூடாது.

**பிரதிநிதித்துவம்**

(5) இந்த சட்டத்தின் கீழ் ஏதேனும் மத்தியஸ்தத்தின் கீழ் ஏதேனும் விடயத்தில்எவரேனும் பிணக்குக்கு உரியவர் சார்பில் தோன்றுவதற்கு ஒரு சட்டத்தரணி,முகவர் அல்லது வேறு ஆள் தகவுடையவராவார் அல்லது தோன்றுவதற்கு அனுமதிக்கப்படும்.

**வெளிப்படுத்துகின்ற கடமை**

27. (1) மத்தியஸ்தராக வரக்கூடிய ஆள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்;

(அ) அவருக்கு ஒரு நடைமுறை அக்கறை முரண்பாடு அல்லது சாத்திய அக்கறை முரண்பாடு அல்லது பக்கச் சார்பின் ஒரு நியாயமான அச்ச உணர்வுஎழக்கூடிய, நிலவுகின்ற எவையேனும் சூழ்நிலைகள் இருந்தால் அவற்றைத் தீர்ப்பதற்கு போதுமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்; மற்றும்

(ஆ) ஏதேனும் அத்தகைய அக்கறை முரண்பாடு அல்லது சூழ்நிலைகள் இருந்தால் தாமதமில்லாமல் திறத்தவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

**மத்தியஸ்தத்தின் போது அதே கடமையைத் தொடர்தல்**

(2) மத்தியஸ்தம் முடிவடையும் வரை மேலே (1) (ஆ)பிரிவின் கீழ் வெளிப்படுத்துகின்ற மத்தியஸ்தரின் கடமை தொடரும்.

(3) மத்தியஸ்தராகச் செயற்படுவதற்கு முன்னர் அல்லது மத்தியஸ்தராகச் செயற்படுகின்ற போது (2) (ஆ) பிரிவின் கீழ் ஒரு வெளிப்படுத்தலை மேற்கொள்கின்ற ஆள், நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் என்பவற்றின் முழுமையான வெளிப்படுத்தலின் பின்னர், சகல திறத்தவர்களின் சம்மதத்துடன் மாத்திரமே பின்வருகின்ற காலத்தில் அல்லது தொடர்ந்து ஒரு மத்தியஸ்தராகச் செயற்பட முடியும்.

விளக்கம்

(4) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, பின்வரும் விடயங்கள் இருந்தால், ஒரு மத்தியஸ்தம் தொடர்பில் ஒரு ஆளுக்கு அக்கறை முரண்பாடு இருக்கின்றது எனக் கருதப்படும்;

(அ) மத்தியஸ்தத்தின் விளைவிலிருந்து ஒரு நிதியியல் அல்லது தனிப்பட்ட அக்கறையுடைய ஆள்; அல்லது

(ஆ) குறிப்பிட்ட ஆளுக்கு ஒரு திறத்தவருடன் அல்லது மத்தியஸ்தத்துக்கான ஒரு திறத்தவருக்குத் தொடர்புடைய ஆளுடன் தற்போதைய அல்லது முன்னைய உறவுமுறை இருக்கின்ற ஆள்.

### உடன்படிக்கையினால் மத்தியஸ்தத்தை நடாத்தல்

28. (1) திறத்தவர்களும் மத்தியஸ்தரும் மத்தியஸ்தம் நடாத்தப்படவுள்ள முறை மீது உடன்படலாம் என்பதோடு வேறு சட்டத்தால் அல்லது இந்தச்சட்டத்தின் அல்லது வேறு சட்டதின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் ஏதேனும் புரிவதிலிருந்து தடைசெய்யப்படாதவரை நிலவுகின்ற சட்டவிதிகள் அல்லது நடவடிக்கைமுறைகளின் ஒரு தொகுதிக்கு உடன்படலாம்.

(2) மத்தியஸ்தம் நடாத்தப்படவுள்ள முறைமீது திறத்தவர்கள் உடன்படாத அளவுக்கு, மத்தியஸ்தர் பொருத்தமானது எனக் கருதுகின்ற முறையில் துரிதமான தீர்ப்பனவு உட்பட திறத்தவர்களின் வேண்டுகோள்கள் மற்றும் பிணக்கின் சூழ்நிலைகள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு மத்தியஸ்தத்தை நடாத்தலாம்.

### மத்தியஸ்தரின் அதிகாரம்

29. (1) மத்தியஸ்தர்,

(அ) தீர்மானம் ஒன்றுக்கு வருவதற்கு திறத்தவர்களை வழிகாட்டுவதில் ஊக்குவிப்பாளராக செயலாற்றலாம்,

(ஆ) திறத்தவர்களோடு தனியாக அல்லது ஏதேனும் முறையில் இணைந்து சந்திக்கலாம் அல்லது தொடர்புகொள்ளலாம்; மற்றும்

(இ) மத்தியஸ்தத்தின் எந்தக் கட்டத்திலும் பிணக்கைத் தீர்த்துவைப்பதற்காக முனமொழிவுகளை மேற்கொள்ளலாம்.

(2) மத்தியஸ்தருக்கு,

(அ) மத்தியஸ்தத்தின் எந்தக் கட்டத்திலும் மத்தியஸ்தத்தின் பெறுபேற்றை தீரமானிப்பதற்கான தத்துவம் இல்லை.

(ஆ) பிணக்கின் சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு மத்தியஸ்தத்தின் போது திறத்தவர்களின் நியாயமான உபசரிப்பைப் பேணவேண்டும்.

### திறத்தவர்களுக்கிடையில் தகவல்களை வெளிப்படுத்தல்

30. (1) ஒரு திறத்தவரிடமிருந்து மத்தியஸ்தருக்குக் கிடைக்கப் பெறுகின்ற மத்தியஸ்தம் தொடர்பான தகவல்களை அத்திறத்தவர் வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டாம் எனக் கேட்காத வரை, அவற்றை மற்றத் திறத்தவருக்கு ஒரு மத்தியஸ்தர் வெளிப்படுத்தலாம்.

### இரகசியத்தன்மை

(2) கீழ்க்குறிப்பிடப்படுகின்ற உப பிரிவுகளுக்கு அமைவாக, சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் மற்றும் மத்தியஸ்த அமர்வுகளை நடாத்துகின்ற போது வெளிப்படுத்தப்பட்ட அல்லது கலந்துரையாடப்பட்ட எவையேனும் ஏனைய விடயங்கள் தொடர்பிலான இரகசியத்தன்மையைப் பாதுகாப்பது ஒரு பிணக்குக்குக்குரிய ஒவ்வொரு திறத்தவர் மற்றும் ஒவ்வொரு மத்தியஸ்தரினதும் கடமையாகும்.

(3) பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, மத்தியஸ்தத்துக்குத் தொடர்புடைய தகவல்களை திறத்தவர்கள், மத்தியஸ்தர் மற்றும் மத்தியஸ்தத்தை நடாத்துவதில் ஈடுபடுகின்ற எவரேனும் வேறு ஆட்கள் இரகசியமாக வைத்திருக்க வேண்டும்.

(அ) வெளிப்படுத்துவதற்கு சகல திறத்தவர்களும் உடன்படுதல் மற்றும் தகவல்கள் மத்தியஸ்தர் தொடர்புடையதாக இருக்கின்ற விடத்து வெளிபடுத்துவதற்கு மத்தியஸ்தர் உடன்படுதல்;

(ஆ) வெளிப்படுத்தல் சட்டத்தால் வேண்டப்படுதல்;

(இ) ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கையை மேற்கொள்கின்ற அல்லது செயற்படுத்துகின்ற நோக்கங்களுக்காக வெளிப்படுத்தல் தேவைப்படுதல்;

(ஈ) ஒரு தவறுதலான உரிமைக்கோரிக்கைக்கு பதிலளிப்பதற்கு ஒருமத்தியஸ்தருக்கு வெளிப்படுத்தல் தேவைப்படுதல்;

(உ) வெளிப்படுத்தல் எவரேனும் ஆளின் ஆரோக்கியத்தை அல்லது பாதுகாப்பை பாதுகாக்கும் என வேண்டப்பட்டால்.

ஆயினும், எவ்வாறாயினும், இந்த உபபிரிவுகள் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்புடையதாகமாட்டாது

(அ) மத்தியஸ்தத்துக்குத் தொடர்புடைய தகவலை வைத்திருப்பதற்கான தேவைப்பாடு இரகசியமான தகவலாக இருக்காதவிடத்து;

(ஆ) அது பகிரங்கமாக இருக்குமிடத்து;

(இ) இரகசியமானது என திறத்தவர்கள் அவர்களின் நடத்தையால்வெளிப்படுத்தாதிருக்குமிடத்து: அல்லது

(ஈ) தீர்மானம் மேற்கொள்வதில் தொடர்புடையதாக இருந்து, அதனைஉப பிரிவின் கீழ் தேவைப்படுகின்ற ஒரு வெளிப்படுத்தலை மேற்கொள்வதற்கு மத்தியஸ்தர் தவறியிருக்குமிடத்து.

**மத்தியஸ்த அமர்வொன்றில் கூற்றுக்களை வழங்குகின்ற ஆட்களின் சிறப்புரிமை**

31. மத்தியஸ்த அமர்வொன்றில் கூற்றுக்களை வழங்குகின்ற ஒவ்வொரு ஆளுக்கும்,ஒரு சட்ட நீதிமன்றத்தின் முன்னால் அத்தகைய கூற்று தொடர்பாக, சான்று வழங்குகின்ற ஒரு சாட்சியாளருக்கு அத்தகைய சான்று தொடர்பாக தகவுடைய சகல சிறப்புரிமைகளுக்கும் உரித்துண்டு.

**மத்தியஸ்த அமர்வொன்றில் மேற்கொள்ளப்படுகின்ற தகவல் அல்லது கூற்றின் ஏற்கத்தக்க தன்மை**

32. பின்வருபவை உட்பட, (2) மற்றும் (3) உப பிரிவுகளுக்கு அமைவாக, மத்தியஸ்த அமர்வொன்றில் ஒரு திறத்தவரினால் வெளிப்படுத்தப்படாத தகவலை அல்லது மேற்கொள்ளப்படாத கூற்றை ஏவையேனும் நீதி அல்லது நிருவாக நடிவடிக்கை முறைகளின் சான்றில் கண்டுபிடிக்கப்பட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட முடியும்.

1. ஒரு வணிகரீதியான பிணக்கொன்றை மத்தியஸ்தம் செய்வதற்கு ஒரு திறத்தவரினால் ஓர் அழைப்பு, பிணக்கை தீர்ப்பதற்கு ஒரு திறத்தவரின் விருப்பம் அல்லது மறுப்பு, மத்தியஸ்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் திறத்தவர்களுக்கிடையில் பரிமாறப்பட்ட தகவல்கள் மற்றும் பிணக்கைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் செய்வதற்கான ஏதேனும் உடன்படிக்கை;

2. தனியே மத்தியஸ்தம் செய்வதற்கான நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணம்;

3. மத்தியஸ்தத்தின் போது பிணக்கின் சாத்தியமான ஒரு தீர்ப்பனவுக்கு ஒரு திறத்தவரினால் வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் அல்லது மேற்கொள்ளப்படுகின்ற ஆலோசனைகள்;

4. மத்தியஸ்தத்தின் போது ஒரு திறத்தவரினால் மேற்கொள்ளப்படுகின்ற கூற்றுக்கள் அல்லது ஏற்புக்கள்;

5. மத்தியஸ்தரினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்ப்பனவுக்கான கூற்றுக்கள் அல்லது முன்மொழிவுகள்;

6. மத்தியஸ்தரினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்ப்பனவுக்கான ஒரு பிரேரணையை ஏற்றுக் கொள்வதற்கான ஒரு விருப்பத்தை ஒரு திறத்தவர் குறிப்பிடுகின்ற நிகழ்வு:

7. ஒரு திறத்தவர் அல்லது மத்தியஸ்தர் மத்தியஸ்தத்தை முடிவுறுத்துகின்ற நிகழ்வு 2010, இ.16, அட்டவணை. 3,s. 9(1).

(2) பின்வருமாறு தேவைப்படுகின்ற அளவுக்கு, மேலே 1 ஆம் உப பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல் சான்றில் அனுமதிக்கப்படலாம்,

(அ) சட்டத்தினால்;

(ஆ) ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கான அல்லது செயற்படுத்துவதற்கான நோக்கத்துக்காக;

(இ) ஒரு தவறான நடத்தையின் உரிமைக்கோரிக்கைக்கு மத்தியஸ்தரினால் பதிலளிப்பதற்கு;

(ஈ) மத்தியஸ்தத்துக்கு தொடர்புடைய சகல திறத்தவர்களும் சம்மதித்தால் மற்றும் தகவல் மத்தியஸ்தருடன் தொடர்புடையதாக இருந்தால் மத்தியஸ்தர் சம்மதித்தால்.

(3) மத்தியஸ்தத்தின் செலவுகள் அல்லது மத்தியஸ்தம் வெற்றியளிக்காததன் காரணமாக நடவடிக்கை முறைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை தீர்மானிக்கின்ற நோக்கங்களுக்குத் தொடர்புடைய மத்தியஸ்தத்துக்கான பிணக்கின் இறுதித் தீர்வுக்குப் பின்னர் மத்தியஸ்தத்துக்கான ஒரு திறத்தவரின் அல்லது மத்தியஸ்தரின் நடத்தை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தப்படலாம்.

**மத்தியஸ்தம் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற ஏனைய தகவல்கள்**

(4) மேலே உபபிரிவுகளில் குறிப்பிடப்பட்ட வரையறைகள் தவிர, ஒரு மத்தியஸ்தம் தவிர்ந்த நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகின்ற தகவல்கள் மத்தியஸ்தத்தில் பயன்படுத்தப்பட்டதன் காரணத்துக்காக மாத்திரம் அனுமதிக்கப்பட முடியாததாக மாறுவதில்லை.

**மத்தியஸ்தராக மற்றும் ஆற்றுப்படுத்துனராக செயற்படுதல்**

31. மத்தியஸ்தத்துக்கான சகல திறத்தவர்களும் உடன்படாத வரையில்,ஒரு ஆள் ஒரு மத்தியஸ்தராகவும் மற்றும் ஒரு ஆற்றுப்படுத்துனராகவும் செயற்படக்கூடாது அல்லது பின்வருவன தொடர்பில் ஒரு மத்தியஸ்தராக செயற்பட்டதன் பின்னர் ஒரு ஆற்றுப்படுத்துனராக செயற்படக் கூடாது,

(அ) மத்தியஸ்தத்தின் விடயமான வணிக ரீதியான பிணக்குக்கு; அல்லது

(ஆ) திறத்தவர்களுக்கிடையே அதே ஒப்பந்தம் அல்லது சட்ட ரீதியான தொடர்பிலிருந்து அல்லது தொடர்புடைய ஒப்பந்தம் அல்லது சட்ட ரீதியான தொடர்பிலிருந்து எழுகின்ற மற்றொரு பிணக்குக்கு.

**காலவிதிப்பு**

32.(1) ஏதேனும் வழக்கெழு காரணம் தொடர்பில் காலத்தைக் கணிப்பிடுவதில்,‘‘**காலம்**’’ என்பது

(அ) அந்த வழக்கெழு காரணத்தை உருவாக்குகின்ற வணிக ரீதியான பிணக்கின் தீர்ப்பனவுக்காக நிலையத்துக்கு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு விண்ணப்பத்தை மத்தியஸ்தத்தினால் மற்றும் இணக்கப்பாட்டினால் ஆரம்பிக்கின்ற திகதி; மற்றும்

(ஆ) மத்தியஸ்தத்துக்கான நடவடிக்கைமுறைகளில் அந்த வணிகரீதியான பிணக்குகள் முடிவுறுத்தப்பட்ட திகதியில் முடிவடைதல். மற்றும்படி திறத்தவர்களுக்கிடையில் ஓர் உடன்படிக்கையினால் முடிவதைல்.

ஏதேனும் வேறு சட்டத்தில் முரண்பாடாக ஏதேனும் எது எவ்வாறாக இருந்தபோதும், அவை கரிசனை கொள்ளப்படக்கூடாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற வழக்கொன்றில்,வழக்குக்கான வழக்கெழு காரணம் காலாவதியாகின்ற ஏதேனும் பிரச்சினை எழுகின்றவிடத்து,

(அ) அந்த வழக்கெழு காரணத்தை உருவாக்குகின்ற வணிகரீதியான பிணக்கை, மத்தியஸ்தத்தினால் மற்றும் இணக்கப்பாட்டினால் தீர்ப்பதற்காக நிலையத்துக்கு விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டிருந்த மற்றும்

(ஆ) திறத்தவர்களுக்கிடையில் ஒரு உடன்படிக்கையின் முடிவுறுத்தலினால் அல்லாமல், மத்தியஸ்தத்தினால் அந்த வணிகரீதியான பிணக்கின் தீர்வுக்கான நடவடிக்கைமுறைகள் முடிவுறுத்தப்பட்டிருந்த திகதிகளை,

முறையே சபையின் தலைவரினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ் ஒன்று கையொப்பத்தின் எண்பிப்பு இல்லாமலே சான்றில் அனுமதிக்கக் கூடியதாக இருக்கும் என்பதோடு அதில் குறிப்பிடப்படுகின்ற நிகழ்வுகளின் சான்றாகவும் இருக்கும்.

## பகுதிVI

### தீர்ப்பனவுகள் மற்றும் தீர்க்கப்படாதவைகளும்

### தீர்ப்பனவு உடன்படிக்கை பிணிப்புடையதாகின்றது

33. (1) ஒரு பிணக்குக்குரிய திறத்தவர்கள் ஒரு தீர்ப்பனவுக்கு உடன்படுகின்றவிடத்து, தீர்ப்பனவின் நியதிகள் பின்வருமாறு இருக்கும்.

(அ) திறத்தவர்கள் இருக்கின்றபடியால் எழுத்து மூலம் இருக்க வேண்டும்; மற்றும்

(ஆ) திறத்தவர்களால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்

(இ) சகல திறத்தவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்

(ஈ) திறத்தவவர்களுக்கிடையில் பிணிப்புடையதாக இருக்க வேண்டும் என்பதோடு ஒரு வலுவுள்ள ஒப்பந்தமாக சட்டத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(2) மத்தியஸ்தரின் கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் என்பவை தொடர்பாக திறத்தவர்களினால் வேறு வகையில் உடன்படாதவரை, தீர்ப்பனவு உடன்படிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(அ) மத்தியஸ்தத்தில் ஒரு மத்தியஸ்தரின் பணிகளை நிறைவேற்றுவதற்காக மத்தியஸ்தரின் கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் என்பவற்றைச் செலுத்துவதற்கு ஒரு திறத்தவரினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திறத்தவர்களினால் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கொண்டிருக்கலாம்; மற்றும்

(ஆ) செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் செலவினங்களின் தொகை அல்லது உடன்படிக்கையில், குறிப்புக்களில் அல்லது ஏனைய ஆவணத்தில் உடன்பட்டிருக்கின்ற கட்டணங்கள் மற்றும் செலவினங்கள், சகல வீதங்கள் மற்றும் ஏனைய மாறிகள் என்பவற்றைக் கணிப்பிடுகின்ற முறை குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

(3) தீர்ப்பனவானது பிரிவு 22 இன் கீழ் நீதிமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற ஏதேனும் பிணக்கு தொடர்பில் இருக்குமிடத்து, அதன் பிரதியொன்றை நீதிமன்றத்துக்கு நிலையம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு மாவட்ட நீதிமன்றம் திறத்தவர்களுக்கு அறிவித்தல் வழங்கிய பின்னர் அத்தகைய தீர்ப்பனவுக்கு ஏற்ப தீர்வை ஒன்றை வெளியிட வேண்டும்.

(4) மத்தியஸ்த நடவடிக்கை முறைகள் முடிவடைந்த பின்னர் 3 மூன்று வருட காலங்களுக்காக தீர்ப்பனவு உடன்படிக்கையின் பிரதியொன்றை அதன் மத்தியஸ்தம் இடம்பெறுகின்ற நிலையம், அதன் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும்.

(5) உப பிரிவு 2 இன் கீழ் நீதிமன்றத்துக்கு தீர்ப்பனவின் பிரதியை சமர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, நீதிமன்றம் பிணக்குக்கு உரியவர்களுக்கு அறிவித்தல் வழங்கிய பின்னர், அத்தகைய திர்ரப்பனவுக்கு ஏற்ப ஒரு தீர்வையை வெளியிட வேண்டும்.

(6) இந்தப் பிரிவில்,

"**தீர்ப்பனவு உடன்படிக்கை**" என்பது மத்தியஸ்தத்துடன் தொடர்புடைய ஒன்றுக்கு மேற்பட்ட திறத்தவர்களினால் கையொப்பமிடப்பட்ட ஒர் உடன்படிக்கை,அது மத்தியஸ்தத்தில் பிணக்கின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரச்சினைகளை நீக்குகின்றது.

**தீர்ப்பனவு மேற்கொள்ளாமைக்கான சான்றிதழ்**

34. (1) ஒரு பிணக்குக்குரிய திறத்தவர்கள் ஒரு தீர்ப்பனவுக்கு உடன்படாதவிடத்து, அத்தகைய பிணக்கு தொடர்பில் மத்தியஸ்த செயன்முறையை முகாமை செய்திருக்கின்ற மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள், மத்தியஸ்தத்தினால் அத்தகைய பிணக்கை தீர்ப்பதற்குச் சாத்தியமில்லை எனக் குறிப்பிடுகின்ற சான்றிதழ் ஒன்றை வழங்க வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும் விடயத்துக்கு ஏற்ப மத்தியஸ்தரால் அல்லது மத்தியஸ்தர்களால் கையொப்பமிடப்பட வேண்டும்.

(2) உப பிரிவு (1) இன் கீழ் வழங்கப்படுகின்ற ஒரு சான்றிதழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்படுகின்ற ஏதேனும் நடவடிக்கையில் அல்லது நடவடிக்கைமுறையில் சான்றாக சமர்ப்பிக்கப்படலாம், என்பதோடு அதன் எண்பிப்புக்கு அத்தாட்சியாக அத்தகைய ஆளை அழைப்பதற்கான அவசியம் இருக்கமாட்டாது.

(3) பிணக்கு தொடர்பாக எவையேனும் நடவடிக்கை முறைகளில் ஒரு சாட்சியாக மத்தியஸ்தர் அல்லது நியமிக்கின்ற அதிகார சபையின் எவரேனும் அலுவலர் அழைக்கப்படக் கூடாது.

(4) தீர்ப்பனவு மேற்கொள்ளாததற்கான ஏதேனும் சான்றிதழில் உள்ள எவரேனும் மத்தியஸ்தரின் கையொப்பம் உண்மையானது எனவும் கையொப்பமிடுகின்ற மத்தியஸ்தருக்கு அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் இருந்தது எனவும் நீதிமன்றம் ஊகிக்கலாம்.

ஆயினும், ஏதேனும் வழக்கில் எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின் மீது அல்லது வேறுவகையில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக மத்தியஸ்தர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய சான்றிதழின் கையொப்பமிடல் தொடர்பிலான சான்றை வழங்குவதற்கான நோக்கத்துக்காக மாத்திரம் ஒரு சாட்சியாக அத்தகைய மத்தியஸ்தர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்படலாம்.

34. ஒவ்வொரு பிணக்கு தொடர்பிலும் அதனை அல்லது அவரால் மத்தியஸ்தத்தினால் தீர்ப்பதற்கு முன்னர் நிலையம் மற்றும் மத்தியஸ்தர் மத்தியஸ்த நடவடிக்கை முறைகளை ஆரம்பித்து 90 நாட்களுக்குள் மத்தியஸ்த செயன்முறைகளை முடிவுறுத்துவதற்கு சகல படிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

## பகுதிVII

### செயற்படுத்தல்

### தீர்ப்பனவைசெயற்படுத்தல்

35. (1) ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கைக்கான திறத்தவர் ஒருவர் ஒரு திர்ப்பனவு உடன்படிக்கையின் நியதிகளுடன் இணங்கியொழுகத் தவறினால், உடன்படிக்கையை செயற்படுத்தவதற்கு விரும்புகின்ற மற்றத் திறத்தவர் கையொப்பமிடுகின்ற சகல திறத்தவர்களுக்கும் அறிவித்தல் வழங்கி உடன்படிக்கையைச் செயற்படுத்தலாம்.

(அ) உடன்படிக்கையின் நியதிகளில் தீர்ப்பனவு உடன்படிக்கையின் பதிவு, தீர்ப்பு மற்றும் செயற்படுத்தல் என்பவற்றுக்காக வணிக மத்தியஸ்த நிலையத்துக்குள் ஒரு மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தல்; அல்லது

(ஆ) அந்த திறத்தவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பனவு உடன்படிக்கையின் மூலப்பிரதியை அல்லது நீதிமன்றத்தின் திருப்திக்கு ஏற்ப மத்தியஸ்த நிலையத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட திர்ப்பனவு உடன்படிக்கையின் ஒரு உரிய சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை இணைத்து தீர்ப்பனவு உடன்படிக்கையை செயற்படுத்துவதற்கான ஒரு விண்ணப்பம்.

(2) உடன்படிக்கையைப் பதிவு செய்வதற்காக அங்கீகரிக்கின்ற ஒரு கட்டளையைத் தொடர்ந்து மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளரோடு தீர்ப்பனவு உடன்படிக்கையின் மூலப்பிரதி அல்லது ஒரு சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை கோவைப்படுத்தல் மீது,தீர்ப்பனவு உடன்படிக்கை பதிவாளருடன் பதியப்படுகின்றது என்பதோடு பதிவு செய்யப்படுகின்ற தினத்தில் மாவட்ட நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்கின்றமற்றும் வழங்கப்படுகின்ற தீர்ப்பைப் போன்று அதே வலுவும் மற்றும் பயனும் இருக்கும்.

(3) பின்வரும் சந்தர்ப்பத்தில் தீர்ப்பு வழங்கப்படமாட்டாது,

(அ) மத்தியஸ்தத்துக்கான ஒரு திறத்தவர் யாருக்கெதிராக விண்ணப்பதாரி தீர்ப்பனவு உடன்படிக்கையைச் செயற்படுத்துவதற்கு நாடுகின்றாரோஅவர் உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருக்காவிட்டால் அல்லது மற்றும்படி விண்ணப்பதாரி செற்படுத்துவதற்கு நாடுகின்ற உடன்படிக்கையின் நியதிகளுக்கு சம்மதம் அளிக்காவிட்டால்;

(ஆ) மோசடியாக தீர்ப்பனவு உடன்படிக்கை பெறப்பட்டிருத்தல்; அல்லது

(இ) தீர்ப்பனவு உடன்படிக்கையின் விடயம் ஒரு வணிக ரீதியான பிணக்காக இருக்கின்றது அல்லது அது இலங்கைச் சட்டத்துக்கு முரணாக இருக்கின்றது என மத்தியஸ்தத்தினால் தீர்ப்பனவு செய்ய முடியாததாக இருத்தல்.

(4) நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைவாக, ஒரு செல்லுபடியான தீர்ப்புக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற மேலே சொல்லப்பட்டவாறு தீர்ப்பனவு உடன்படிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்ட்டிருக்குமிடத்து, அத்தோடு அவ்வாறு வழங்கப்படுகின்ற தீர்ப்பு அதற்கேற்ப, குடியியல் நடைமுறைக்கோவை (அத்தியாயம் 101) இன் 225(3) ஆம் பிரிவின் நியதிகளில் பிஸ்கால் அலுவலருக்கு உரிய முறையில் வழங்கப்படுகின்ற ஒரு எழுத்தாணை நிறைவேற்றம் எனக் கருதப்படும் என்பதோடு அதற்கேற்ப,தீர்வைகளின் நிறைவேற்றத்துக்குத் தொடர்புடைய அந்த நடைமுறைக் கோவையின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய செயற்படுத்தலுக்கு ஏற்புடையதாகும்.

ஆயினும் எவ்வாறாயினும், ஏதேனும் ஏனைய எழுத்து மூலச் சட்டத்தில் முரணாக ஏதேனும் எது எவ்வாறு இருந்த போதும், அதனை நிறைவேற்றுதல் நிறுத்தப்படமாட்டாது.

(6) உப பிரிவு (3) இல் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்தாணை நிறைவேற்றமானது தீர்ப்பனவு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 3 வருடங்களுக்குச்

செல்லுபடியாகும் என்பதோடு எழுத்தாணை நிறைவேற்றுவதற்காக குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையில் (அத்தியாயம் 101) விபரிக்கப்பட்ட முறையில் அதனை நிறைவேற்றுவது பிஸ்கால் அலுவலரின் கடமையாகும்.

### மேன்முறையீடு செய்தல்

36. (1) இந்தப் பிரிவின் (2) ஆம் உப பிரிவுக்கு அமைவாக, இந்தச்சட்டத்தின் செயற்படுத்தல் பகுதியின் கீழ் மாவட்ட நீதி மன்றத்தின் ஒரு கட்டளை, தீர்ப்பு அல்லது தீர்வையிலிருந்து தவிர, இந்தச்சட்டத்தின் கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் நிதிமன்றத்தின் ஏதேனும் கட்டளை, தீர்வை தொடர்பில் மேன்முறையீடு அல்லது மீள்நோக்கல் மேற்கொள்ளப்பட முடியாது.

(2) உப பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மாவட்ட நீதிமன்றத்தின் ஒரு கட்டளை, தீர்ப்பு அல்லது தீர்வையிலிருந்து குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்துக்கு சட்டத்தின் வினா ஒன்றின் மீது மற்றும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் முதலில் பெறப்பட்ட அத்தகைய மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன் மாத்திரம் ஒரு மேன்முறையீட்டை மேற்கொள்ளலாம்.

(3) இந்தப்பிரிவின் உப பிரிவு (2) இன் கீழ் மேல் நீதிமன்றம் இந்தச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில், மாவட்ட நீதிமன்றத்தின் கட்டளையை, தீர்ப்பை அல்லது தீர்வையை உறுதி செய்யலாம், மீள்நோக்கலாம் அல்லது மாற்றலாம்.

(4) ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கைக்கான திறத்தவர்கள் ஒரு தீர்ப்பனவு உடன்படிக்கையுடன் தொடர்புடைய மேன்முறையீட்டுக்கான ஏதேனும் உரிமையை தவிர்ப்பதற்கு எழுத்து மூலம் உடன்படலாம்.

## பகுதிVIII

### பொதுவான ஏற்பாடுகள்

### ஏனைய சட்டவாக்கங்களுடன் முரண்பாடு

37. இந்தச் சட்டத்துக்கும் மற்றும் மத்தயஸ்தம் தேவைப்படுகின்ற அல்லது அதனை அங்கீகரிக்கின்ற ஏதேனும் ஏனைய சட்டவாக்கத்துக்குமிடையில் ஒரு முரண்பாடு இருக்குமிடத்து, ஏனைய சட்டவாக்கம் மேலோங்கி நிற்கும்.

### மத்தியஸ்தரின் பொறுப்பும் பாதிப்பின்மையும்

38.(1) ஒரு மத்தியஸ்தர் என்ற அடிப்படையில் அவரால் செய்யப்பட வேண்டிய ஏதேனும் விடயம் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் கவனக்குறைவுக்காக ஒரு மத்தியஸ்தர் பொறுப்புடையவராகமாட்டார்.

(2) நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படாத ஏதேனும் செயலுக்காக அல்லது விட்டுவிடப்படுதல் தவிர்த்து, இந்தச் சட்டத்தின் கீழ் மத்தியஸ்தரின் அல்லது வணிக மத்தியஸ்த நிலையத்தின் பணிகளில் செயலாற்றுகையில் ஏதேனும் செயலின் விட்டுவிடப்படுதலுக்காக மத்தியஸ்தருக்கு அல்லது வணிக மத்தியஸ்த நிலையத்துக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்ளவோ தொடரவோ கூடாது.

### திறத்தவரின் இறப்பு

39.(1) மத்தியஸ்த உடன்படிக்கையில் ஒரு முரணான எண்ணம் வெளிப்படுத்தப்படாத வரை, ஓர் உடன்படிக்கையில் மத்தியஸ்த பிரிவுக்கான ஒரு திறத்தவர் இறக்குமிடத்து, உடன்படிக்கை விடுவிக்கப்படமாட்டாது என்பதோடு அந்த திறத்தவரின் இறப்பினால் ஒரு மத்தியஸ்தத்தை அமைக்கின்ற மத்தியஸ்தர்களின் பணிப்பாணை மீளப் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது; ஆனால்

இறந்தவரின் மரணச் சொத்துக்கான சட்டப்பிரதிநிதியால் அல்லது சட்டப்பிரதிநிதிக்கு எதிராக உடன்படிக்கையானது வலியுறுத்தப்படும்.

(2) உப பிரிவு (1) இல் இருக்கின்ற எதுவும்,ஓர் ஆளின் இறப்பினால் துடைத்தழிக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையின் ஓர் உரிமையின் பயனால் சட்டத்தின் ஏதேனும் சட்டவாக்கம் அல்லது சட்டவிதியின் செயற்பாட்டை பாதிப்பை ஏற்படுத்தும் என எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**நீக்குதல்**

40. 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க இலங்கை வணிக மத்தியஸ்த நிலையச் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) இலங்கை வணிக மத்தியஸ்த நிலையச் சட்டம் என்பவை இத்தால் நீக்கப்படுகின்றது.

ஏதேனும் பொருந்தாமை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் உள்ள வாசகம் மேலோங்கி நிற்கும்

41. சிங்கள மற்றும் தமிழ் வாக்கியங்களுக்கிடையில் ஏதேனும் முன்னுக்குப் பின் மாறுபாடு இருக்கின்ற சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலுள்ள வாசகம் கருத்தில் கொள்ளப்படும்.

ශ්‍රී ලංකා විනිශ්චයකාරවරයන්ගේ ආයතනය,
නො80, අධිකරණ මාවත,
කොළඹ 12. ශ්‍රී ලංකාව. දුක :-+94-112541193
ෆැක්ස් :-+94-112541193
ඊ මේල් :- ***info@judgesinstitute.lk***
වෙබ් :- ***www.judgesinstitute.lk***

இலங்கை நீதிபதிகள் நிறுவனம்,
இல.80(5ஆம் மற்றும் 6ஆம் மாடிகள்), அதிகரண மாவத்தை,
கொழும்பு 12, இலங்கை. - தொலைபேசி இலக்கம்: +94-112541193,
பக்ஸ்: +94-112541193,
மின்னஞ்சல் : info@judgesinstitute.lk
இணையத்தளம் :www.judgesinstitute.lk

***Sri Lanka Judges' institu te,***
***No.80, (5th & 6th Floors),Adhikarana Mawatha,***
***Colombo 12,Sri Lanka - Telephone: +94-112541193,***
***Fax: +94-112541193,***
***Email:info@judgesinstitute.lk***
***Web:www.judgesinstitute.lk***